# மத்திய ஆண்டு
# நிதி நிலை அறிக்கை
# 2024

நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

இலங்கை

2024 ஒக்டோபர் 31

# மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கை - 2024

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் 50 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டது.

**அனுர குமார திசாநாயக்க**
**நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை கௌரவ அமைச்சர்**

2024 ஒக்டோபர் 31 ஆம் திகதி

# மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கை

## 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் 50 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் கௌரவ அமைச்சரினால் வெளியிடப்பட்டது

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் 50 ஆம் பிரிவின் நியதிகளின்படி, நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர், மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கையை உரிய ஆண்டின் ஒக்டோபர் மாதத்தின் இறுதி நாளுக்குள் அல்லது குறித்த ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்ட திகதியிலிருந்து பத்து மாதங்கள் கழிந்த திகதியிலிருந்து, எது பிந்தியதோ அத்திகதியில் பொதுமக்களுக்கு சமர்ப்பிப்பதோடு, அதன்பின் பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்க வேண்டும்.

அரசாங்கத்தின் அரசிறை மூலோபாயத்திற்கு எதிராக அதன் மத்திய ஆண்டு அரசிறைச் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கு பொதுமக்களுக்கு ஒரு அடிப்படையை வழங்குவதே இந்த அறிக்கையின் நோக்கமாகும்.

அறிக்கையின் உள்ளடக்கமானது 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களின் அரசாங்கத்தின் வருமானம், செலவினம், காசுப்பாய்ச்சல் செயற்பாடுகள் மற்றும் கடன் பெறுகைகளின் செயலாற்றுகைகளைக் கொண்டுள்ளது. மேலும் இவ்வறிக்கையானது 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான தற்காலிக வரவு செலவுத்திட்டத்தின் வெளிப்பாடு, பேரினப் பொருளாதார செயற்திறன்கள், விலை மேம்பாடுகள், வெளிநாட்டு நிதி, அரசாங்கத்தின் படுகடன், உத்தியோகபூர்வ இருப்புக்கள் மற்றும் அரசுடமை வணிக நிறுவனங்களின் செயலாற்றுகைகளை கிடைத்த தகவல்களுக்கேற்ப இற்றைப்படுத்தப்பட்டு வழங்குகின்றது.

# பொருளடக்கத்தின் அட்டவணை


| | | | பக்கம் இல. |
|---|---|---|---|
| அத்தியாயம் 1 | பொருளாதார பார்வைகள் | | |
| | 1.1 | மேன்நோக்கு | 1 |
| | 1.2 | பணவீக்கம் | 2 |
| | 1.3 | பணம் மற்றும் கடன் | 3 |
| | 1.4 | பங்குச் சந்தை | 4 |
| | 1.5 | வெளிநாட்டுத் துறையின் அபிவிருத்திகள் | 4 |
| | 1.6 | உலகளாவிய பொருளாதார முன்னோக்குகைகள் | 6 |
| அத்தியாயம் 2 | அரசிறை அபிவிருத்திகள் | | |
| | 2.1 | மேன்நோக்கு | 11 |
| | 2.2 | அரசாங்க வருமானம் | 12 |
| | 2.3 | அரசாங்க செலவினம் | 24 |
| | 2.4 | பொது திறைசேரியின் காசுப்பாய்ச்சல் செயலாற்றுகை | 30 |
| | 2.5 | அரச படுகடன் முகாமைத்துவம் | 31 |
| அத்தியாயம் 3 | அரசுடமைத் தொழிற்முயற்சிகளின் செயலாற்றுகை | | |
| | 3.1 | மேன்நோக்கு | 35 |
| | 3.2 | பிரதான பத்து அரசுடைமை வணிகத் தொழில்முயற்சி நிறுவனங்கள் பற்றிய மீளாய்வு | 35 |
| அத்தியாயம் 4 | வெளிநாட்டு நிதியளிப்பு | | |
| | 4.1 | மேன்நோக்கு | 43 |
| | 4.2 | வெளிநாட்டு நிதியுதவி உறுதிமொழிகள் | 43 |
| | 4.3 | வெளிநாட்டு நிதி வழங்கல் மற்றும் பயன்பாடு | 43 |
| | 4.4 | வெளிநாட்டு கடன் இருப்பு மற்றும் வெளிநாட்டு கடன் சேவைக் கொடுப்பனவுகள் | 45 |

## பிரதான பொருளாதார குறிகாட்டிகள்

| குறிகாட்டிகள் | காலம் | அலகு | பெறுமதி 2023 | பெறுமதி 2024 (தற்காலிக) |
|---|---|---|---|---|
| **மெய்த்துறை** | | | | |
| பொருளாதார வளர்ச்சி | அரையாண்டு | % | -7.3 | 5.0 |
| விவசாயம் | அரையாண்டு | % | 2.9 | 1.4 |
| கைத்தொழில் | அரையாண்டு | % | -18.9 | 11.4 |
| சேவைகள் | அரையாண்டு | % | -2.8 | 2.6 |
| பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) (2021=100) | செப்டெம்பர் மாத இறுதியில | % | 1.3 | -0.5 |
| வேலையின்மை வீதம் | வருடாந்தம் | % | 4.7 | த.இ. |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் | வருடாந்தம் | % | 48.6 | த.இ. |
| **அரசிறைத் துறை** | | | | |
| வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை | சன - யூன் | ரூபா. மில். | -1,242,566 | -598,698 |
| மொத்த வருமானம் | சன - யூன் | ரூபா. மில். | 1,314,886 | 1,860,632 |
| வரி வருமானம் | சன - யூன் | ரூபா. மில். | 1,198,852 | 1,709,305 |
| வரியல்லா வருமானம் | சன - யூன் | ரூபா. மில். | 116,034 | 151,327 |
| மொத்தச் செலவினம் | சன - யூன் | ரூபா. மில். | 2,559,619 | 2,463,305 |
| மீண்டெழும் செலவினம் | சன - யூன் | ரூபா. மில். | 2,325,541 | 2,218,442 |
| அரசாங்க முதலீடு | சன - யூன் | ரூபா. மில். | 258,812 | 258,306 |
| அரசாங்கப் படுகடன் | யூன் மாத இறுதியில் | ரூபா. பில் | 26,916 | 28,563 |
| **வெளிநாட்டுத் துறை** | | | | |
| ஏற்றுமதிகள் | சன - யூலை | ஐ.அ.டொ.மில். | 8,010 | 8,499 |
| அதில் விவசாய ஏற்றுமதிகள் | சன - யூலை | ஐ.அ.டொ.மில். | 1,703 | 1,804 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | சன - யூலை | ஐ.அ.டொ.மில். | 6,274 | 6,659 |
| புடவை மற்றும் ஆடைகள் | சன - யூலை | ஐ.அ.டொ.மில். | 3,326 | 3,365 |
| ஏனையவை | சன - யூலை | ஐ.அ.டொ.மில். | 2,948 | 3,294 |
| இறக்குமதிகள் | சன - யூலை | ஐ.அ.டொ.மில். | 10,974 | 12,073 |
| நுகர்வுப் பொருட்கள் | சன - யூலை | ஐ.அ.டொ.மில். | 2,028 | 2,176 |
| இடைநிலைப் பொருட்கள் | சன - யூலை | ஐ.அ.டொ.மில். | 7,186 | 7,750 |
| அதில் பெற்றோலிய உற்பத்திகள் | சன - யூலை | ஐ.அ.டொ.மில். | 3,080 | 2,897 |
| முதலீட்டுப் பொருட்கள் | சன - யூலை | ஐ.அ.டொ.மில். | 1,748 | 2,140 |
| வர்த்தக மீதி | சன - யூலை | ஐ.அ.டொ.மில். | -2,964 | -3,573 |
| உல்லாசப் பயணிகளின் வருகை | சன - ஆகஸ் | எண்ணிக்கை | 904,318 | 1,362,668 |
| சுற்றுலாத் துறை வருமானம் | சன - ஆகஸ் | ஐ.அ.டொ.மில். | 1,305 | 2,167 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | சன - ஆகஸ் | ஐ.அ.டொ.மில். | 3,863 | 4,288 |
| மொத்த சென்மதி நிலுவை | சன - யூலை | ஐ.அ.டொ.மில். | 2,034 | 2,184 |
| மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் | ஆகஸ்ட் மாத இறுதியில் | ஐ.அ.டொ.மில். | 3,600 | 5,959 |
| செலாவணி வீதம் (இறுதி மாதம்) | ஆகஸ்ட் மாத இறுதியில் | ஐ.அ.டொ. இற்கான ரூபா | 324.4 | 299.3 |
| செலாவணி வீதம் (மாதாந்த சராசரி) | சன – செப் | ஐ.அ.டொ. இற்கான ரூபா | 322.8 | 301.1 |
| **நாணயத்துறை** | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் (SDFR) | ஆகஸ்ட் மாத இறுதியில் | % | 11.00 | 8.25 |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் (SLFR) | ஆகஸ்ட் மாத இறுதியில் | % | 12.00 | 9.25 |
| நியதிச்சட்ட ஒதுக்கு தேவைப்பாடு (SRR) | ஆகஸ்ட் மாத இறுதியில் | % | 2.00 | 2.00 |
| வர்த்தக வங்கிகளின் நிறையேற்றப்பட்ட சராசரி புதிய கடன் வீதம் (AWNLR) | யூலை மாத இறுதியில் | % | 19.30 | 11.52 |
| வர்த்தக வங்கிகளின் நிறையேற்றப்பட்ட சராசரி கடன் வீதம் (AWLR) | யூலை மாத இறுதியில் | % | 16.90 | 12.25 |
| திறைசேரி உண்டியல்களின் விளைவு வீதம் (91 நாட்கள்) | ஆகஸ்ட் மாத இறுதியில் | % | 18.48 | 9.49 |
| திறைசேரி உண்டியல்களின் விளைவு வீதம் (364 நாட்கள்) | ஆகஸ்ட் மாத இறுதியில் | % | 13.58 | 10.01 |
| நாணய வழங்கல் வளர்ச்சி ($M_2b$) | ஆகஸ் 2024/ ஆகஸ் 2023 | % | 5.9 | 9.3 |
| தனியார் துறை கடன் வளர்ச்சி | ஆகஸ் 2024/ ஆகஸ் 2023 | % | -6.9 | 8.7 |

## இலங்கை : தெரிவு செய்யப்பட்ட சுட்டிகள்

| குறிகாட்டிகள் | காலம் | அலகு | பெறுமதி |
|---|---|---|---|
| **மின்சாரம்** | | | |
| மின் விநியோக மட்டம் | 2016 | % | 99.3 |
| **நீர்** | | | |
| பாதுகாப்பான குடிநீரைப் பெறுவதற்கான அடைவு | 2023 | சனத்தொகை % | 97.3 |
| குழாய் நீரைப் பெறுவதற்கான அடைவு | 2023 | சனத்தொகை % | 61.6 |
| **வீதிகள்** | | | |
| வீதி அடர்த்தி | 2023 | கி.மீ / கி.மீ.2 | 0.19 |
| வீதிகளின் மொத்த நீளம் | 2023 | கி.மீ. | 1 44,967 |
| **தொடர்பாடல்** | | | |
| செல்லிடத் தொலைபேசி உள்ளடங்கலாக தொலைபேசிக்கான அடர்த்தி | 2023 | ஒவ்வொரு 100 பேருக்கு | 137.0 |
| இணையத்தளத்திற்கான அடைவு | 2023 | ஒவ்வொரு 100 பேருக்கு | 103.8 |
| **கல்வி** | | | |
| **பொதுக் கல்வி** | | | |
| ஆரம்ப பாடசாலைகளில் இணையும் விகிதம் | 2023 | % | 85.1 |
| மாணவர் / ஆசிரியர் விகிதம் (அரசாங்க பாடசாலைகள்) | 2023 | எண்ணிக்கை | 16.8 |
| எழுத்தறிவு வீதம் (சராசரி) | 2021 | % | 93.3 |
| கணினி அறிவு வீதம் (முதல் 06 மாதங்கள்) | 2023 | % | 39.5 |
| **பல்கலைக்கழக கல்வி** | | | |
| மாணவர் / ஆசிரியர் விகிதம் | 2023 | எண்ணிக்கை | 22.5 |
| வயது குறிப்பீடு செய்யப்பட்டு இணையும் விகிதம் (வயது 19 - 22 வருடங்கள்) (அ) | 2023 | % | 9.9 |
| **சுகாதாரம்** | | | |
| வைத்தியசாலைகள் (மேற்கத்தேய மருத்துவம்) | 2023 | எண்ணிக்கை | 619 |
| கட்டில்கள் | 2023 | எண்ணிக்கை | 89,786 |
| வைத்தியசாலை கட்டில்கள் | 2023 | ஒவ்வொரு 1,000 பேருக்கு | 4.1 |
| நபர்களுக்கான வைத்தியர் | 2023 | எண்ணிக்கை | 985 |
| **சனத்தொகை** | | | |
| சனத்தொகை அடர்த்தி | 2023 | சதுர கி.மீ. ஆட்கள் | 351 |
| சனத்தொகை வளர்ச்சி | 2023 | % | -0.6 |
| பிறப்பில் ஆயுள் எதிர்பார்க்கை | 2017 | வருடங்கள் | 75.5 |
| சிசு மரண வீதம் | 2019 | 1000 பிறப்புகளுக்கு | 7.4 |
| தாய் மரண வீதம் | 2022 | 1000 பிறப்புகளுக்கு | 22.6 |
| செப்பமற்ற பிறப்பு வீதம் | 2023 | ஒவ்வொரு 1000 பேருக்கு | 11.2 |
| செப்பமற்ற இறப்பு வீதம் | 2023 | ஒவ்வொரு 1000 பேருக்கு | 8.2 |
| சார்ந்து வாழ்வோர் வீதம் | 2023 | % | 49.4 |
| **வறுமை** | | | |
| தலைக்குரிய வறுமைச் சுட்டெண் | 2019 | % | 14.3 |
| குடும்ப அலகுகளின் வருமான கினி குணகம் | 2019 | குணகம் | 0.46 |
| வறுமை இடைவெளி | 2019 | % | 2.8 |
| நாளாந்தம் உட்கொள்ளும் சராசரி கலோரிப் பெறுமானம் | 2019 | கிலோ கலோரிகள் | 2,120 |
| **சர்வதேச தரப்படுத்தல்** | | | தரம் |
| மனித அபிவிருத்தி சுட்டெண் | 2022 | 193 நாடுகளின் தரப்படுத்தலில் | 78 |
| வியாபாரம் புரிவோர் சுட்டெண் | 2020 | 190 நாடுகளின் தரப்படுத்தலில் | 99 |
| உலகளாவிய போட்டித் தன்மை சுட்டெண் | 2019 | 141 நாடுகளின் தரப்படுத்தலில் | 84 |
| பொருளாதார சுதந்திர சுட்டெண் | 2023 | 184 நாடுகளின் தரப்படுத்தலில் | 149 |
| உலகளாவிய சமாதான சுட்டெண் | 2024 | 163 நாடுகளின் தரப்படுத்தலில் | 100 |
| இலத்திரனியல் அபிவிருத்திச் சுட்டெண் | 2022 | 193 நாடுகளின் தரப்படுத்தலில் | 95 |

*(அ) மாணவர்களின் உள்விழைவினை மாத்திரம் உள்ளடக்குகின்றது*

# அத்தியாயம் 1

## பொருளாதாரப் பார்வைகள்

### 1.1 மேன்நோக்கு

இலங்கையின் பொருளாதாரமானது முக்கியமாக மேம்பட்ட விநியோக நிலைமைகள், மேம்பட்ட வெளிநாட்டுக் கேள்வி மற்றும் சுற்றுலாத் துறையின் மறுமலர்ச்சி ஆகியவற்றிலிருந்து வெளிப்படும் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சியுடன் 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிலிருந்து மீள்வதற்கான சாதகமான அறிகுறிகளைக் வெளிக்காட்டியுள்ளது. 2023 இன் முதல் காலாண்டில் காணப்பட்ட 7.3 சதவீதமான சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2024 இன் முதல் காலாண்டில் பொருளாதாரம் 5.0 சதவீதத்தினால் விரிவடைந்தது.

விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் உட்பட பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளும் 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் விரிவடைந்தது. தானியங்கள், நன்னீர் மீன்பிடி மற்றும் நன்னீர் உயிரின வளர்ப்பு மற்றும் விலங்கு உற்பத்தி ஆகியவற்றின் வளர்ச்சியின் விரிவாக்கம் காரணமாக 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் விவசாயத் துறை 1.4 சதவீதமாக ஓரளவு வளர்ச்சியடைந்தது. நிர்மாணக் கைத்தொழில், சுரங்கம் மற்றும் கல்வெட்டியெடுத்தல் கைத்தொழில் மற்றும் உற்பத்தி கைத்தொழில் உட்பட சகல உப துறைகளிலும் பதிவுசெய்யப்பட்ட வளர்ச்சியின் காரணமாக 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் கைத்தொழில் துறை 11.4 சதவிகிதம் வளர்ச்சியடைந்தது. 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் தங்குமிடம், உணவு மற்றும் குடிபானங்கள் வழங்கும் நடவடிக்கைகள் மற்றும் காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியளிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றின் விரிவாக்கம் காரணமாக சேவைகள் துறையும் 2.6 சதவிகிதத்தினால் வளர்ச்சியடைந்தது.

உணவு மற்றும் உணவு அல்லாத வகைகளில் பணச்சுருக்கம் பதிவுசெய்யப்பட்டமையின் காரணமாக 2015 செப்தெம்பர் மாதத்திற்குப் பின்னர் முதல் முறையாக 2024 செப்தெம்பர் மாதத்தில் முதன்மை பணவீக்கம் எதிர்மறையான எல்லையை அடைந்தது. மின்சாரக் கட்டணங்கள், எரிபொருள் மற்றும் திரவப் பெற்றோலிய எரிவாயு விலைகளில் சமீபத்திய கீழ்நோக்கிய திருத்தங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட விநியோகப் பக்க நிலைமைகளிலிருந்து வெளிப்படும் உணவு விலைகளின் வீழ்ச்சி ஆகியவை முக்கியமாக இந்தப் பணச்சுருக்கத்திற்குக் காரணமாகும். கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (CCPI, 2021=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படுகின்றவாறு முதன்மை பணவீக்கம் 2024 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதத்தில் பதிவாகிய 0.5 சதவிகித பணச்சுருக்கம் ஒன்றைப் பதிவுசெய்துள்ளது. அதேவேளையில் தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டில் (NCPI, 2021=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் முதன்மை பணவீக்கம் 2024 செப்தெம்பர் மாதத்தில் 0.2 சதவீதத்தைப் பதிவுசெய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியானது 2024 செப்தெம்பர் மாத இறுதியில் நியதிச்சட்ட ஒதுக்க விகிதத்தை 2.00 சதவீதத்தில் பேணுகின்ற அதேவேளையில், துணைநில் வைப்பு வசதி வீதம் (SDFR) மற்றும் துணைநில் கடன் வசதி வீதம் (SLFR) என்பவற்றை முறையே 8.25 வீதம் மற்றும் 9.25 வீதமாக பேணுவதன் மூலம் அதன் இணக்கமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டை தொடர்ந்தது.

2024 ஆம் ஆண்டின் செப்தெம்பர் மாத இறுதியில் உள்ளவாறு அனைத்து பங்கு விலைச் சுட்டெண்கள் (ASPI, 1985=100) 11,855 புள்ளிகள் வரை 4.6 சதவிகிதத்தினாலும் ஸ்டாண்டர்ட் அண்ட் புவர்ஸ் ஸ்ரீ லங்கா 20 (2004=1,000) சுட்டெண் 3,453 புள்ளிகள் வரை 8.0 சதவிகிதத்தினாலும் அதிகரித்ததுடன் பங்குச் சந்தை மேம்பட்ட செயலாற்றுகையைக் காட்டியுள்ளது.

2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வெளிநாட்டுத் துறை மேம்பட்ட செயலாற்றுகையினைக் காட்டியது. வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகள் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 8,010.1 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ஐ.அ.டொலர் 8,499.1 மில்லியன் வரை 6.1 சதவீதத்தினால் அதிகரித்தது. வணிகப் பொருட்களின் இறக்குமதிகள் 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 10,974.1 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 12,072.5 மில்லியன் வரை 10.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, வணிகப் பொருட்களின் வர்த்தகப் பற்றாக்குறை 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 2,964.0 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 3,573.4 மில்லியன் வரை விரிவடைந்துள்ளது.

தொழிலாளர்களின் பண அனுப்பீடு 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பதிவான ஐ.அ.டொலர் 3,862.7 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 4,288.2 மில்லியன் வரை 11.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. சுற்றுலாத்துறை

மூலமான சம்பாத்தியம் 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பதிவான ஐ.அ.டொலர் 1,304.5 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 2,167.0 மில்லியன் வரை 66.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் சேவைத் துறைகளுக்கான உட்பாய்ச்சலும் மேம்பட்டுள்ளது.

மேம்பட்ட வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சலுடன், 2024 ஆகஸ்ட் மாத இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்கங்கள் ஐ.அ.டொலர் 6.0 பில்லியன் வரை அதிகரித்தது. இதில் சீனாவின் மக்கள் வங்கியின் பரிமாற்றல் வசதியும் அடங்கும். வெளிநாட்டுத் துறையில் ஏற்பட்டுள்ள சாதகமான அபிவிருத்திகளுடன், 2024 ஆகஸ்ட் மாத இறுதி வரையான வருடத்தில் அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் மதிப்பு 7.9 சதவீதத்தினால் அதிகரித்தது.

### 1.2 பணவீக்கம்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (CCPI, 2021=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படுகின்றவாறு முதன்மை பணவீக்கம் 2022 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதத்தில் பதிவாகிய 70 சதவிகித அதன் உச்சப் பெறுமதியிலிருந்து 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் விரைவாகக் குறைந்துள்ள அதேவேளையில் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் முறையாக எதிர்மறையான எல்லையை அடைவதற்கு 2024 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதத்தில் 0.5 சதவீத பணச்சுருக்கத்தைப் பதிவு செய்துள்ளது. எவ்வாறாயினும், 2023 அக்டோபர் மாதம் முதல் 2024 சனவரி மாதம் வரை பணவீக்கம் சற்று அதிகரிக்கும் போக்கைக் காட்டிய அதேவேளையில், 2024 சனவரியில் பெறுமதி சேர் வரி அதிகரிப்பு பற்றிய மக்களின் உணர்வுகள் மற்றும் உணவு விநியோகத்தை சீர்குலைத்த சாதகமற்ற வானிலை நிலைமைகள் இதற்குக் காரணமாக அமைந்தது. இருந்தபோதிலும், 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பணவீக்கம் மீண்டும் குறையத் தொடங்கியதுடன் முக்கியமாக மின்சாரக் கட்டணங்கள் 22 சதவீதம் குறைக்கப்பட்டதனால் 2024 மார்ச் மாதத்தில் பணவீக்கம் கடுமையான வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (CCPI, 2021=100) ஆண்டுக்கு ஆண்டு (YOY) மாற்றத்தால் அளவிடப்படுகின்றவாறு முதன்மைப் பணவீக்கம் 2024 ஜனவரி மாதத்தில் காணப்பட்ட 6.4 சதவீத பணவீக்கத்திலிருந்து 2024 செப்தெம்பர் மாதத்தில் 0.5 சதவீத பணச்சுருக்கமாக சரிவடைந்துள்ளது. 2024 செப்தெம்பர் மாதத்தில் உணவுப் பிரிவு 0.3 சதவீத பணச்சுருக்கத்தை பதிவு செய்துள்ள அதே வேளையில் உணவு அல்லாத பிரிவு 2024 செப்தெம்பர் மாதத்தில் 0.5 பணச்சுருக்கத்தைப் பதிவு செய்துள்ளது. அதே விதமாக, தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டில் (NCPI, 2021=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் மையப் பணவீக்கம், 2024 சனவரி மாதத்தில் பதிவாகிய 6.5 சதவீதத்திலிருந்து 2024 செப்டெம்பர் மாதத்தில் -0.2 சதவீதமாகக் குறைந்துள்ளது. இந்த பணவீக்கத்தின் வீழ்ச்சியடையும் போக்கிற்கு முக்கியமான காரணம், மின்சாரக் கட்டணம் மற்றும் எரிபொருள் மற்றும் திரவப் பெற்றோலிய எரிவாயு விலைகள் குறைக்கப்பட்டமையாகும். அதேபோன்று, உணவுப் பொருட்களின் விலையில் இருந்த மிதமான நிலை மற்றும் கேள்வி குறைவடைந்தமை என்பனவும் பணவீக்கம் குறைவதற்கு பங்களிப்பச் செய்துள்ளன. இதேபோல், உள்நாட்டு விநியோகப் பக்க மேம்பாடுகள் மற்றும் தேவை நிலைமைகள் குறைந்தமை ஆகியவற்றைத் தொடர்ந்து உலகளாவிய விநியோகச் சங்கிலிகளின் மீட்சி ஆகியவை உணவுப் பொருட்களின் விலையில் மிதமான மாற்றத்திற்குக் காரணமாக அமைந்தது.

**அட்டவணை 1.1 பணவீக்க அசைவுகள் (%)**

| வருடம் | மாதம் | கொ.நு.வி.சு. | | | | தே.நு.வி.சு. | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முதன்மைப் பணவீக்கம் | | மையப் * பணவீக்கம் | | முதன்மைப் பணவீக்கம் | | மையப் * பணவீக்கம் | |
| | | புள்ளிக்குப் புள்ளி | ஆண்டுச் சராசரி | புள்ளிக்குப் புள்ளி | ஆண்டுச் சராசரி | புள்ளிக்குப் புள்ளி | ஆண்டுச் சராசரி | புள்ளிக்குப் புள்ளி | ஆண்டுச் சராசரி |
| 2023 | சனவரி | 54.2 | த.இ. | 45.6 | 37.6 | 53.2 | த.இ. | 52.0 | த.இ. |
| | பெப்ரவரி | 50.6 | த.இ. | 43.6 | த.இ. | 53.6 | த.இ. | 50.1 | த.இ. |
| | மார்ச் | 50.3 | த.இ. | 39.1 | த.இ. | 49.2 | த.இ. | 44.2 | த.இ. |
| | ஏப்பிரல் | 35.3 | த.இ. | 27.8 | த.இ. | 33.6 | த.இ. | 31.8 | த.இ. |
| | மே | 25.2 | த.இ. | 20.3 | த.இ. | 22.1 | த.இ. | 21.6 | த.இ. |
| | யூன் | 12.0 | த.இ. | 9.8 | த.இ. | 10.8 | த.இ. | 11.3 | த.இ. |
| | யூலை | 6.3 | த.இ. | 5.9 | த.இ. | 4.6 | த.இ. | 6.3 | த.இ. |
| | ஆகஸ்ட் | 4.0 | த.இ. | 4.6 | த.இ. | 2.1 | த.இ. | 4.1 | த.இ. |
| | செப்டெம்பர் | 1.3 | த.இ. | 1.9 | த.இ. | 0.8 | த.இ. | 1.7 | த.இ. |
| | ஒக்டோபர் | 1.5 | த.இ. | 1.2 | த.இ. | 1.0 | த.இ. | 0.6 | த.இ. |
| | நவம்பர் | 3.4 | த.இ. | 0.8 | த.இ. | 2.8 | த.இ. | 0.8 | த.இ. |
| | திசெம்பர் | 4.0 | 17.4 | 0.6 | 14.5 | 4.2 | 16.5 | 0.9 | 15.8 |

| வருடம் | மாதம் | கொ.நு.வி.சு. | | | | தே.நு.வி.சு. | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முதன்மைப் பணவீக்கம் | | மையப் * பணவீக்கம் | | முதன்மைப் பணவீக்கம் | | மையப் * பணவீக்கம் | |
| | | புள்ளிக்குப் புள்ளி | ஆண்டுச் சராசரி | புள்ளிக்குப் புள்ளி | ஆண்டுச் சராசரி | புள்ளிக்குப் புள்ளி | ஆண்டுச் சராசரி | புள்ளிக்குப் புள்ளி | ஆண்டுச் சராசரி |
| 2024 | சனவரி | 6.4 | 14.2 | 2.2 | 11.3 | 6.5 | 13.4 | 2.2 | 12.3 |
| | பெப்ரவரி | 5.9 | 11.3 | 2.8 | 8.5 | 5.1 | 10.2 | 2.7 | 9.2 |
| | மார்ச் | 0.9 | 8.0 | 3.1 | 6.1 | 2.5 | 7.2 | 3.4 | 6.5 |
| | ஏப்பிரல் | 1.5 | 5.7 | 3.4 | 4.4 | 2.7 | 5.2 | 3.0 | 4.6 |
| | மே | 0.9 | 3.9 | 3.5 | 3.3 | 1.6 | 3.7 | 3.1 | 3.3 |
| | யூன் | 1.7 | 3.1 | 4.4 | 2.8 | 2.4 | 3.0 | 3.9 | 2.7 |
| | யூலை | 2.4 | 2.8 | 4.4 | 2.7 | 2.5 | 2.9 | 3.0 | 2.5 |
| | ஆகஸ்ட் | 0.5 | 2.5 | 3.6 | 2.7 | 1.1 | 2.8 | 2.3 | 2.3 |
| | செப்டெம்பர் | -0.5 | 2.4 | 3.3 | 2.8 | -0.2 | 2.7 | 1.9 | 2.3 |

*மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

**கொ.நு.வி.சு. அடிப்படையில் பணவீக்கம் - மாறுபடும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து நீங்கலாக*

*2023 சனவரி அடிப்படை ஆண்டு 2013=100*

*2023 பெப்ரவரி முதல் அடிப்படை ஆண்டு 2021=100*

*த.இ. - தகவல் இல்லை.*

பொருளாதாரத்தில் அடிக்கடி விலை ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்ற உணவு, எரிசக்தி மற்றும் போக்குவரத்து வகைகளின் அகற்றல் பொருட்களைத் தவிர்த்து, அடிப்படைப் பணவீக்கப் போக்குகளைப் பிரதிபலிக்கும் தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டில் (2021=100) இன் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் மையப் பணவீக்கம் 2024 சனவரி மாதத்தில் பதிவு செய்யப்பட்ட 2.2 சதவீதத்திலிருந்து 2024 செப்தெம்பர் மாதத்தில் 3.3 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதேபோல், தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டினால் (2021=100) அளவிடப்படும் முக்கிய பணவீக்கம் 2024 சனவரியில் காணப்பட்ட 2.2 சதவீதத்திலிருந்து 2024 ஆகஸ்ட் மாதத்தில் 2.3 சதவீதமாக அதிகரித்தது. மேற்குறிப்பிட்டவாறு ஓரளவு அதிகரித்த போதிலும், பொருளாதாரத்தில் குறைந்த தேவை அழுத்தங்களை பிரதிபலித்து, மையப் பணவீக்கம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. உணவுப் பொருட்களின் விலை குறைவடைந்தமை மற்றும் பொருத்தமான கொள்கை நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டமை ஆகியவற்றின் காரணமாக பணவீக்கமானது எதிர்வரும் மாதங்களில் இலக்கு வைக்கப்பட்ட பெறுமதியாகிய 5 சதவீதத்தில் நிலைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**அட்டவணை 1.2 : பணம் மற்றும் தனியார்த் துறைக் கடன்**

ரூபா.பில்லியன்

| விடயம் | 2023 | | | | | | | | 2024 | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சன. | பெப். | மார்ச் | ஏப்பி. | மே | யூன் | யூலை | ஆக. | சன. | பெப். | மார்ச் | ஏப்பி. | மே | யூன் | யூலை | ஆக. | 2024 ஆக./ 2023 ஆக. வளர்ச்சி (%) |
| ஒதுக்குப் பணம் | 1,589.7 | 1,504.7 | 1,424.2 | 1,417.1 | 1,559.1 | 1,435.8 | 1,373.8 | 1,407.3 | 1,488.6 | 1,413.7 | 1,405.6 | 1,426.5 | 1,396.2 | 1,417.7 | 1,455.1 | 1,485.7 | 5.6 |
| விரிந்த பணம் (M2b) | 12,322.5 | 12,345.8 | 12,293.4 | 12,386.7 | 12,306.5 | 12,516.6 | 12,726.3 | 12,697.9 | 13,114.9 | 13,201.1 | 13,324.6 | 13,420.0 | 13,616.4 | 13,747.9 | 13,824.6 | 13,876.8 | 9.3 |
| தனியார்த் துறைக் கடன் | 7,315.4 | 7,257.9 | 7,138.4 | 7,087.7 | 6,999.0 | 7,072.7 | 7,086.2 | 7,092.1 | 7,314.2 | 7,321.5 | 7,393.4 | 7,377.2 | 7,437.9 | 7,512.4 | 7,572.6 | 7,707.7 | 8.7 |

*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

### 1.3 பணம் மற்றும் கடன்

2023 ஜுன் மாதம் முதல் இலங்கை மத்திய வங்கி நாணயக் கொள்கையை தளர்த்தியது. ஆண்டின் ஆரம்பத்தில் முறையே 9.00 சதவீதம் மற்றும் 10.00 சதவீதமாக இருந்த துணைநில் வைப்பு வசதி விகிதம் (SDFR) மற்றும் துணைநில் கடன் வசதி விகிதம் (SLFR), 2024 ஆம் ஆண்டின் செப்தெம்பர் மாதத்தில் தலா 75 அடிப்படை புள்ளிகள் குறைக்கப்பட்டு, அவை முறையே 8.25 சதவீதம் மற்றும் 9.25 சதவீதம் என நிர்ணயம் செய்யப்பட்டது. அதன் விளைவாக, சந்தை வட்டி விகிதங்கள் 2022 ஏப்ரல் மாதத்தில் பதிவு செய்யப்பட்ட வரலாற்றுரீதியான உயர் மட்டங்களிலிருந்து வீழ்ச்சியடைந்துள்ளன. குறைக்கப்பட்ட கொள்கை வட்டி விகிதங்களுக்கு இணங்கியதாக, அரசாங்கப் பிணையங்கள் மீதான இலாபத்திலும் தொடர்ந்து சரிவைச் சந்தித்தது. நியதிச்சட்ட ஒதுக்க விகிதம் (SRR) இந்த ஆண்டு முழுவதும் இதுவரை 2.00 சதவீதமாக மாறாமல் உள்ளது.

குறிப்பிடத்தக்க நாணயக் கொள்கையைத் தளர்த்தி, ஒட்டுமொத்த திரவத்தன்மை நிலைகளில் முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், தனியார் துறைக்கான கடன் பாய்ச்சல்கள் 2024 ஆம் ஆண்டின் சனவரி மாதத்தில் காணப்பட்ட ரூபா 7,314.21 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் ரூபா 7,707.7 பில்லியன் சிறிதளவு அதிகரிப்பை மட்டுமே காணக்கூடியதாக உள்ளன. சில்லறை கடன் வட்டி விகிதங்களை மேலும் குறைப்பது, தனியார் துறை கடன் வளர்ச்சியைத் தூண்டுவதற்கு உதவுகின்ற அதேவேளையில் அதன் மூலம் தற்போதைய பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிக்கின்றது.

## 1.4 பங்குச் சந்தை

இலங்கையின் பங்குச் சந்தை 2024 ஆம் ஆண்டில் இது வரை கலப்பு செயலாற்றுகையைக் காட்டியுள்ளது. அனைத்து பங்கு விலைச் சுட்டெண்களும் (ASPI, 1985=100) 2023 செப்தெம்பர் மாத இறுதியில் காணப்பட்ட 11,336 புள்ளிகளுடன் ஒப்பிடுகையில் 2024 செப்தெம்பர் மாத இறுதியில் 11,855 புள்ளிகள் வரை 4.6 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அதிக திரவத்தன்மையான பங்குகளை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற, ஸ்டாண்டர்ட் அண்ட் புவர்ஸ் ஸ்ரீ லங்கா 20 (S&P SL20, 2004=1,000) சுட்டெண், 2023 செப்தெம்பர் மாத இறுதியில் காணப்பட்ட 3,198 புள்ளிகளிலிருந்து 2024 செப்தெம்பர் இறுதியில் 3,453 புள்ளிகள் வரை 8.0 சதவீதத்தினால் அதிகரித்தது.

சந்தை மூலதனம் 2023 செப்தெம்பர் மாத இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 4,537 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2024 செப்தெம்பர் மாத இறுதியில் ரூபா 4,382 பில்லியன் வரை 3.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. 2024 செப்தெம்பர் மாதத்தில், கொழும்பு பங்குச் சந்தை (CSE) சராசரி நாளாந்த விற்பனைப் புரள்வு 2023 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 1,394 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2,946 மில்லியன் வரை 111.3 சதவீத குறிப்பிடத்தக்க அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது.

**அட்டவணை 1.3 மூலதன சந்தையின் இயக்கங்கள்**

| குறிகாட்டிகள் | 2020 | 2021 | 2022 | 2023 | செப்தெம்பர் மாத இறுதி 2023 | செப்தெம்பர் மாத இறுதி 2024 |
|---|---|---|---|---|---|---|
| அனைத்து பங்கு விலைச் சுட்டெண் (1985=100) | 6,774 | 12,226 | 8,490 | 10,594 | 11,336 | 11,855 |
| எஸ் அன்ட் பீ.எஸ்.எல். 20 சுட்டெண் | 2,638 | 4,233 | 2,636 | 3,010 | 3,198 | 3,453 |
| சந்தை மூலதனமாக்கல் (ரூபா. பில்) | 2,961 | 5,489 | 3,847 | 4,261 | 4,537 | 4,382 |
| வர்த்தகப் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 283 | 296 | 290 | 290 | 290 | 286 |
| நாளாந்த சராசரி புரள்வு (ரூபா.மில்) | 1,899 | 4,888 | 2,972 | 1,697 | 1,524 | 1,987 |
| வெளிநாட்டு விற்பனை (ரூபா.மில்) | 104,165 | 86,689 | 36,863 | 34,810 | 25,890 | 41,736 |
| வெளிநாட்டு கொள்முதல் (ரூபா.மில்) | 52,889 | 39,410 | 67,488 | 39,826 | 30,994 | 35,926 |
| தேறிய கொள்முதல் (ரூபா.மில்) | -51,276 | -47,279 | 30,625 | 5,017 | 5,104 | -5,809 |

*மூலம் : கொழும்பு பங்குச் சந்தை*

## 1.5 வெளிநாட்டுத் துறையின் அபிவிருத்திகள்

2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது, தொழிலாளர்களின் பண அனுப்பீடுகள் மற்றும் விரிவாக்கப்பட்ட வர்த்தகப் பற்றாக்குறைக்கு மத்தியிலும் சுற்றுலாத் துறையிலிருந்து பெறப்பட்ட வருமான உட்பாய்ச்சலின் அதிகரிப்புடன் சாதகமான நிலையினை வெளிப்படுத்தியுள்ளது. தொழிலாளர்களின் பண அனுப்பீடுகள் மூலமான உட்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 4,288.2 மில்லியன் வரை 11.0 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க அதிகரித்துள்ள அதேவேளையில் சுற்றுலாத்துறையின் மூலமான வருமானம் ஐ.அ.டொலர் 2,167.0 மில்லியன் வரை 66.1 சதவீதமாக அதிகரித்துள்ளது. மொத்த ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 8,499.1 மில்லியன் வரை 6.1 சதவீதம் அதிகரித்துள்ள அதேவேளையில் மொத்த இறக்குமதிகள் ஐ.அ.டொலர் 12,072.5 மில்லியன் வரை 10.0 சதவீதம் அதிகரித்துள்ளது. அது வர்த்தகப் பற்றாக்குறையை ஐ.அ.டொலர் 3,573.4 மில்லியன் வரை அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் இறுதியில் மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கம் ஐ.அ.டொலர் 6.0 பில்லியன் வரை அதிகரித்துள்ளது.

கொழும்பு பங்குச் சந்தை (CSE) 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 15.4 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 44.4 மில்லியன் வரை தேறிய உட்பாய்ச்சலில் அதிகரிப்பொன்று பதிவாகியுள்ளது. 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 351.6 மில்லியன் உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் அரசாங்க பிணையங்கள் சந்தையில் தேறிய வெளிப்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 251.4 மில்லியன் பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த கொடுப்பனவு மீதி 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 2,034.1 மில்லியன் மிகையுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 2,184.4 மில்லியன் மிகையொன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. 2024 செப்தெம்பர் மாத இறுதியில் இலங்கை ரூபாய் ஐக்கிய அமெரிக்க டொலருக்க எதிராக 8.2 சதவீதத்தினால் பெறுமதி கூடியுள்ளது.

## ஏற்றுமதி

பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் இருந்து அதிகரித்த கேள்வியுடன் உள்நாட்டு ஏற்றுமதி தொழில் மீட்சி காரணமாக கைத்தொழில், விவசாயம் மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகளின் வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்புடன், 2023 ஆம் ஆண்டின முதல் எட்டு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 8,010.1 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 8,499.1 மில்லியன் வரை 6.1 சதவீதத்தினால் ஏற்றுமதி மூலமான வருமானம் அதிகரித்துள்ளது. விவசாயம் மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதி வருமானம் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் முறையே 21.2 மற்றும் 0.2 சதவீதத்திற்கு கணக்கிடப்பட்டுள்ள அதேவேளையில் மொத்த ஏற்றுமதி வருமானத்திற்கு கைத்தொழில் ஏற்றுமதி வருமானம் 78.3 சதவீத பங்களிப்பை வழங்கியுள்ளது.

புடைவை மற்றும் ஆடை, பெற்றோலியப் உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை பொருட்களின் ஏற்றுமதி வருமானம் அதிகரித்ததன் காரணமாக கைத்தொழில் ஏற்றுமதிகளின் வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 6,273.6 மில்லியன்களிலிருந்து 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 6,658.6 மில்லியன் வரை 6.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. விவசாய ஏற்றுமதியின் மூலமான வருமானம் தேயிலை, தென்னை, வாசனைத் திரவியங்கள் மற்றும் மரக்கறிகள் ஆகியவற்றின் மூலமான வருமானத்தின் அதிகரிப்புடன் 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 1,702.9 மில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,804.0 மில்லியன் வரை 5.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அதேவேளையில், கனிப்பொருள் மூலமாக ஏற்றுமதி வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 15.7 மில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 18.8 மில்லியன் வரை 19.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

அட்டவணை 1.4 : **வெளிநாட்டு வர்த்தகம் : 2024 சனவரி - ஆகஸ்ட்**

ஐ.அ.டொ. மில்லியன்

| வகை | 2023 | 2024 | % மாற்றம் |
|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | **8,010.1** | **8,499.1** | **6.1** |
| விவசாய உற்பத்திகள் | 1,702.9 | 1,804.0 | 5.9 |
| தேயிலை | 870.4 | 942.3 | 8.3 |
| இறப்பர் | 21.2 | 16.4 | -22.8 |
| தென்னை | 224.0 | 272.2 | 21.5 |
| ஏனைய விவசாய உற்பத்திகள் | 587.3 | 573.1 | -2.4 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | 6,273.6 | 6,658.6 | 6.1 |
| உணவு, பானங்கள் மற்றும் புகையிலை | 354.4 | 427.7 | 20.7 |
| புடவை மற்றும் தைக்கப்பட்ட ஆடைகள் | 3,325.7 | 3,364.8 | 1.2 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 325.7 | 702.5 | 115.7 |
| இறப்பர் உற்பத்திகள் | 588.1 | 663.1 | 12.8 |
| இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 418.7 | 336.1 | -19.7 |
| ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் | 1,261.0 | 1,164.4 | -7.7 |
| கனிப் பொருட்கள் | 15.7 | 18.8 | 19.8 |
| ஏனையவை | 17.9 | 17.7 | -1.0 |
| **இறக்குமதிகள்** | **10,974.1** | **12,072.5** | **10.0** |
| நுகர்வுப் பொருட்கள் | 2,028.3 | 2,176.3 | 7.3 |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 1,158.0 | 1,214.1 | 4.8 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 870.3 | 962.2 | 10.6 |
| இடைநிலைப் பொருட்கள் | 7,185.5 | 7,750.0 | 7.9 |
| பெற்றோலியம் | 3,079.5 | 2,896.5 | -5.9 |
| உரம் | 139.8 | 102.9 | -26.4 |
| புடவைகள் மற்றும் தைக்கப்பட்ட ஆடைகள் | 1,584.0 | 1,839.3 | 16.1 |
| இரசாயண உற்பத்திகள் | 527.6 | 657.1 | 24.5 |
| பிளாஸ்ரிக் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த | 296.4 | 385.8 | 30.2 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 114.0 | 132.0 | 15.8 |
| முதலீட்டுப் பொருட்கள் | 1,747.9 | 2,140.3 | 22.5 |
| இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 1,219.0 | 1,438.6 | 18.0 |
| போக்குவரத்து உபகரணங்கள் | 481.4 | 601.9 | 25.0 |
| கட்டிட மூலப்பொருட்கள் | 45.6 | 98.0 | 115.0 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 1.9 | 1.8 | -5.9 |
| வகைபடத்தப்படாத இறக்குமதி | 12.4 | 5.9 | -52.5 |
| **வர்த்தக மீதி** | **-2,964.0** | **-3,573.4** | |

*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

### இறக்குமதிகள்

உலகலாவிய சந்தைகளின் உயர் நுகர்வுப் பொருள் விலைகளின் தாக்கத்துடன் இணைந்தாக பொருளாதார நடவடிக்கைகளின் மறுமலர்ச்சி மற்றும் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை நீக்குதல், நுகர்வோர், இடைநிலை மற்றும் முதலீட்டு பொருட்கள் மீதான இறக்குமதி செலவினங்களின் அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாக, இறக்குமதிக்கான செலவு 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 10,974.1 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 12,072.5 மில்லியன் வரை 10.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மொத்த இறக்குமதி செலவினத்தில் நுகர்வோர், இடைநிலை மற்றும் முதலீட்டு பொருட்கள் மீதான இறக்குமதி செலவு முறையே 18.0 சதவீதம், 64.2 சதவீதம் மற்றும் 17.7 சதவீதம் கணக்கிடப்பட்டுள்ளது.

உணவு மற்றும் குடிபானங்கள் மற்றும் உணவு அல்லாத நுகர்வோர் பொருட்கள் ஆகிய இரண்டின் மீதான இறக்குமதி செலவீனம் அதிகரித்தமையின் காரணமாக நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதி செலவீனம், 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 2,028.3 மில்லியனுடன் ஒப்பிடும்போது, 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 2,176.3 மில்லியன் வரை 7.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. புடவை மற்றும் ஆடை உற்பத்திகள், இரசாயன பொருட்கள், பிளாஸ்டிக் மற்றும் பிளாஸ்டிக் சார்ந்த உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள், மற்றும் கடதாசி மற்றும் திண்ம கடதாசிகள் மற்றும் பொருட்கள் மீதான செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக இடைநிலை பொருட்கள் மீதான இறக்குமதி செலவுகள் 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 7,185.5 மில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 7,750.0 மில்லியன் வரை 7.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. நிலக்கரி இறக்குமதிச் செலவு ஐ.அ.டொலர் 170.5 மில்லியன் வரை 50.0 சதவீதத்தினாலும் குறிப்பிடத்தக்க அளவில் குறைவடைந்ததுடன் எரிபொருளுக்கான இறக்குமதி செலவு 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ஐ.அ.டொலர் 2,896.5 மில்லியன் வரை 5.9 சதவீதத்தினால் குறைவடைந்துள்ள அதேவேளையில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றொலியத்திற்கான இறக்குமதிச் செலவு ஐ.அ.டொலர் 2,156.0 மில்லியன் வரை 11.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ள போதிலும், மசகு எண்ணெய் மீதான இறக்குமதிச் செலவீனம் ஐ.அ.டொலர் 570.1 மில்லியன் வரை 28.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிச் செலவு 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ஐ.அ.டொலர் 1,747.9 மில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 2,140.3 மில்லியன் வரை 22.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. வெளிநாட்டு சந்தைகளில் விலைகள் அதிகரித்தமை மற்றும் பொருளாதாரத்தின் மறுமலர்ச்சியுடன் முதலீட்டு நடவடிக்கைகள் உயர்வடைந்தமை ஆகியவற்றின் காரணமாக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்கான செலவீனம் ஐ.அ.டொலர் 1,438.6 மில்லியன் வரை 18.0 சதவீதத்தினாலும், கட்டிடப் பொருட்களின் செலவீனம் 601.9 மில்லியன் வரை 25 சதவீதத்தினாலும் போக்குவரத்து உபகரணங்கள் ஐ.அ.டொலர் 98.0 மில்லியன் வரை 115.0 சதவீதத்தினாலும் அதிகரித்து காணப்பட்டது.

### தொழிலாளர்களின் பண அனுப்பீடு மற்றும் சுற்றுலாத்துறை மூலமான வருமானம்

வெளிநாட்டு வேலைக்கான புறப்பாடுகள் அதிகரித்தமை மற்றும் உத்தியோகபூர்வ வழிகளின் மூலம் பணம் அனுப்புவதை ஊக்குவிப்பதற்கான அரசாங்கத்தின் கொள்கை நடவடிக்கையுடன் முறையான வழிகளினூடாக தொழிலாளர்களின் பண அனுப்பீடு அதிகரித்துள்ளதுடன் 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 3,862.7 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 4,288.2 மில்லியன் வரை 11.0 சதவீதத்தினால் தொழிலாளர்களின் பண அனுப்பீடு அதிகரித்துள்ளது. வெளிநாட்டு வேலைக்கான புறப்பாடுகள் 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் காணப்பட்ட 198,287 நபர்களுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 205,929 நபர்களாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதேவேளையில், சுற்றுலாத் துறையின் மறுமலர்ச்சியின் காரணமாக இந்த காலப் பகுதியில் இந்தியா, ஐக்கிய இராச்சியம், ரஷ்யா, ரஷ்யா, ஜெர்மனி, சீனா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து அதிகரித்த சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 1,304.5 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் மூலமான வருமானம் ஐ.அ.டொலர் 2,167.0 மில்லியன் வரை 66.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. அதன் பிரகாரம், சுற்றுலாப் பயணிகளின் வருகை 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் காணப்பட்ட 904,318 நபர்களுடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 1,362,668 நபர்கள் வரை 50.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

## 1.6 உலகளாவிய பொருளாதார முன்னோக்குகள்[1]

2022-2023 ஆண்டு காலப்பகுதியில் தொடர்ச்சியாக எழுந்த பொருளாதார சவால்களுக்கு மத்தியில் உலகளாவிய பொருளாதாரம் வலுவாக காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட வரலாற்று ரீதியாக உயர்ந்த பணவீக்கத்திலிருந்து உலகளாவிய பணவீக்கமற்ற நிலை மற்றும் அதிக வட்டி விகிதங்கள் இருந்தபோதிலும், உலகப் பொருளாதாரம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே 3.5 மற்றும் 3.2 சதவீதங்களினால் வளர்ச்சி அடைந்தது

1. உலகப் பொருளாதார கண்ணோட்டம், (2024 ஏப்ரல், ச.நா.நி.) உலக பொருளாதாரக் கண்ணோட்டம் (2024 யூலை, ச.நா.நி.), அரசிறை அவதானிப்பு (2024 ஏப்ரல், ச.நா.நி.), பொருட் சந்தை கண்ணோட்டம் (ஏப்ரல் 2024, உ.வ.), ஆசிய அபிவிருத்தி கண்ணோட்டம் (ஏப்ரல் 2024, ஆ.ச.வ.) மற்றும் ச.நா.நி, உலக வங்கி மற்றும் உலகளாவிய வலையிலிருந்தான பிற தரவு மற்றும் தகவல் ஆகியவற்றின் அடிப்படையில்

உலகப் பொருளாதாரம் 2024 ஆம் ஆண்டில் 3.2 சதவிகிதமாகவும் 2025 ஆம் ஆண்டுகளில் 3.3 சதவிகிதமாகவும் வளர்ச்சியடையவுள்ள அதேவேளையில் கொவிட்-19 தொற்றுநோய்க்குப் பின்னரான தாக்கம், புவி-அரசியல் பதட்டங்கள், உற்பத்தித் துறையின் பலவீனமான வளர்ச்சி மற்றும் அதிகரித்து வரும் புவி-பொருளாதார துண்டாடுதல் ஆகியவற்றின் அந்தப் பெருமதி குறிப்பாக 2000-2019 காலப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட ஆண்டு சராசரியான 3.8 சதவிகித வரலாற்று ரீதியான சாதாரண பெருமதியிலும் பார்க்க குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. ஒப்பீட்டுரீதியில் குறைந்த வளர்ச்சியை காட்டுகின்ற இந்த எதிர்கால நோக்கினூடாக கட்டுப்படுத்தப்பட்ட நாணயக் கொள்கைகள், அரசிறை ஆதரவைத் திரும்பப் பெறுதல் மற்றும் குறைந்த உற்பத்தித்திறன் வளர்ச்சி ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது.

வளர்ச்சி அடைந்த பொருளாதாரங்கள் மற்றும் வளர்ந்து வரும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்கள் இரண்டும் 2024-26 ஆண்டுகளுக்கான வளர்ச்சி தொற்றுநோய்க்கு முன்னரான தசாப்தத்தை விட மெதுவான வேகத்தில் வளரும். ஐக்கிய அமெரிக்காவில் 2.6 சதவீதம், ஐரோப்பிய பிராந்தியத்தில் 0.9 சதவீதம், ஜப்பானில் 0.7 சதவீதம் மற்றும் ஏனைய அபிவிருத்தி அடைந்த பொருளாதாரங்களில் 1.6 சதவீதம் என எதிர்வு கூறப்பட்டுள்ள வளர்ச்சியின் காரணமாக 2024 ஆம் ஆண்டில் வளர்ச்சி அடைந்த பொருளாதாரங்களின் வளர்ச்சி 1.7 சதவீதமாக இருக்கும் என எதிர்வுகூறப்படுகிறது. வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களின் மிதமான வளர்ச்சியானது, உக்ரைன்-ரஷ்யா மோதலின் அதிக வெளிப்பாடு காரணமாக 2023 ஆம் ஆண்டில் 0.4 சதவிகிதம் குறைந்த வளர்ச்சியை எடுத்துக்காட்டிய ஐரோப்பிய பிராந்தியத்தில் சுமுக நிலையை அடைந்தமை வளர்ச்சி அடைந்த பொருளாதரங்களின் நடுத்தர வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தது. 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் தற்காலிக விநியோக இடையூறுகள் மற்றும் தனியார் முதலீடுகள் காரணமாக ஜப்பானின் வளர்ச்சி குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**அட்டவணை 1.5 : உலகம் பற்றிய ஓர் பார்வை - 2023**

| நாடு | 2023 | | | | |
|---|---|---|---|---|---|
| | உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (வருடாந்த சதவீத மாற்றம்) | பணவீக்கம் (சதவீதம்) | வேலையிண்மை (சதவீதம்) | அரசிறை மீதி (உள்நாட்டு உற்பத்தி சதவீதம்) | மொத்த கடன்(உள்நாட்டு உற்பத்தி சதவீதம்) |
| ஆஜன்டீனா | -1.6 | 133.5 | 6.6 | -4.2 | 154.5 |
| அவுஸ்ரேலியா | 2.1 | 5.6 | 3.7 | -0.9 | 49.4 |
| பிரேசில் | 2.9 | 4.6 | 8.0 | -7.9 | 84.7 |
| கனடா | 1.1 | 3.9 | 5.4 | -0.6 | 107.1 |
| சிலி | 0.2 | 7.6 | 8.8 | -2.2 | 39.4 |
| சீனா | 5.2 | 0.2 | 5.2 | -7.1 | 83.6 |
| பிரான்ஸ் | 0.9 | 5.7 | 7.4 | -5.5 | 110.6 |
| ஜேர்மனி | -0.3 | 6.0 | 3.0 | -2.1 | 64.3 |
| கிரீஸ் | 2.0 | 4.2 | 10.9 | -1.6 | 168.8 |
| இந்தியா | 7.8 | 5.4 | ... | -8.6 | 82.7 |
| இந்தோனேசியா | 5.0 | 3.7 | 5.3 | -1.6 | 39.9 |
| இத்தாலி | 0.9 | 5.9 | 7.7 | -7.2 | 137.3 |
| யப்பான் | 1.9 | 3.3 | 2.6 | -5.8 | 252.4 |
| கொரியா | 1.4 | 3.6 | 2.7 | -1.0 | 55.2 |
| மலேசியா | 3.7 | 2.5 | 3.6 | -4.4 | 67.3 |
| மெக்சிகோ | 3.2 | 5.5 | 2.8 | -4.3 | 53.1 |
| ரஷ்யா | 3.6 | 5.9 | 3.2 | -2.3 | 19.7 |
| சிங்கப்பூர் | 1.1 | 4.8 | 1.9 | 3.6 | 162.1 |
| தென் ஆபிரிக்கா | 0.6 | 5.9 | 32.8 | -6.0 | 73.9 |
| ஸ்பெயின் | 2.5 | 3.4 | 12.1 | -3.6 | 107.5 |
| இலங்கை | -2.3 | 17.4 | 4.7 | -8.3 | 103.9 |
| தாய்லாந்து | 1.9 | 1.2 | 1.2 | -3.2 | 62.4 |
| ஐக்கிய இராச்சியம் | 0.1 | 7.3 | 4.0 | -6.0 | 101.1 |
| ஐக்கிய அமெரிக்கா | 2.5 | 4.1 | 3.6 | -8.8 | 122.1 |
| வியட்நாம் | 5.0 | 3.3 | 2.0 | -1.6 | 34.0 |
| வெனிசுலா | 4.0 | 337.5 | ... | -3.4 | 148.2 |

*மூலம் : "உலக பொருளாதாரக் கண்ணோட்டம்", சர்வதேச நாணய நிதியம் 2024 ஏப்ரல் நிதிக் கண்காணிப்பு கண்காணிப்பு, சர்வதேச நாணய நிதியம், 2024 ஏப்ரல்*

*... தகவல் இல்லை*

வளர்ந்து வரும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்களின் வளர்ச்சி 2024-26 ஆம் ஆண்டு காலப்பகுதியை விட ஆண்டுக்கு 4 சதவீதத்திற்கு மேல் இருக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. தொற்றுநோய்க்குப் பிறகு நுகர்வு அதிகரித்தமை மற்றும் அரசிறை ஊக்குவிப்பு உள்ளிட்ட ஒரு தடவை மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் நேர்மறையான விளைவுகள் வீழ்ச்சி அடைந்தமை மற்றும் சொத்து துறை தொடர்ச்சியாக பலவீனமடைந்தமை காரணமாக 2023 ஆம் ஆண்டில் பதிவாகிய 5.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு குறைந்து 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மேலும் எளிதாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சீனாவைத் தவிர்த்து, வளர்ந்து வரும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்களின் வளர்ச்சி இந்த ஆண்டு 3.5 சதவிகிதம் வரை அதிகரிக்கும் என்றும் பின்னர் 2025-26 ஆம் ஆண்டுகளில் சராசரியாக 3.9 சதவிகிதமாக வளர்ச்சி அடையும் என்றும் எதிர்ப்பு கூறப்பட்டுள்ளது. வலுவான உள்நாட்டு தேவை மற்றும் அதிகரித்து வரும் உழைக்கும் வயது மக்கள் தொகையின் அதிகாரிக்கும் தாக்கத்தின் காரணமாக இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 2024 ஆம் ஆண்டில் 7.0 சதவீதமாகவும், 2025 ஆம் ஆண்டில் 6.5 சதவீதமாகவும் நிலையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறைந்த வருமானம் கொண்ட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வளர்ச்சி 2023 ஆம் ஆண்டில் 4.2 சதவீதமாக காணப்பட்ட வளர்ச்சியில் இருந்து 2024 ஆம் ஆண்டில் 4.4 சதவீதமாகவும், 2025 ஆம் ஆண்டில் 5.3 சதவீதமாக மேலும் வளர்ச்சி அடையும் என்றும் எதிர் கூறப்பட்டுள்ளது. மிகச் சிறந்த முதலீடு, குறிப்பாக கிராமியப் பகுதிகளில் தனியார் நுகர்வு சுமுக நிலையை அடைதல், மற்றும் இலத்திரன்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியின் வளர்ச்சி ஆகியவற்றின் காரணமாக இந்தியா ஆசியாவில் பிரதான வளர்ச்சியடைந்த பொருளாதாரமாக தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகளாவிய முதன்மைப் பணவீக்கம் 2023 ஆம் ஆண்டில் காணப்பட்ட 6.8 சதவீதத்திலிருந்து 2024 ஆம் ஆண்டில் 5.9 சதவீதமாகக் குறைவடைந்து அதன் பின்னர், 2025 ஆம் ஆண்டில் 4.5 சதவீதமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. வர்த்தகப் பொருட்களின் விலையில் ஒரு சிறிய வீழ்ச்சிக்கு மேலதிகமாக சேவைகளின் தேவை நடுத்தர நிலையில் காணப்படுதல் மற்றும் சம்பள அதிகரிப்பு மிதமாக அமைவதுடன் முக்கிய பணவீக்கம் குறைவடைவது இந்த மந்த நிலைக்கு காரணமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும், வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களில் பணவீக்கத்தின் வேகம் 2024 மற்றும் 2025 இல் சேவைகளின் விலைகளில் நிலையான பணவீக்கம் மற்றும் உயர்மட்ட நுகர்வுப் பொருட்களின் விலைகளுடன் மெதுவாக அமைக்கப்பட்டுள்ளது. வளர்ந்துவரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்களில் பணவீக்கத்தின் வேகம் 2023 இல் காணப்பட்டவாறு 2024 ஆம் ஆண்டிலும் அதே மட்டத்தில் 8.3 சதவீதமாக குறைவாக உள்ளது. வளர்ந்துவரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதரங்கள் 2026 ஆம் ஆண்டில் மட்டுமே தொற்றுநோய்க்கு முன்னைய சராசரியான 5.0 சதவீதத்தை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகளாவிய கைத்தொழில் உற்பத்தியின் மந்தநிலை காரணமாக, பொருட்களின் வர்த்தகத்தின் அளவு 2023 ஆம் ஆண்டில் 1.9 சதவீத்தினால் சுருங்கியது. இவ்வாறாயினும், பொருட்களின் வர்த்தகத்தில் உள்ள மேம்பாடுகள் மற்றும் வீட்டு நுகர்வுப் பொருட்களின் அதிகரிப்பு ஆகியவற்றால் ஆதரிக்கப்படுகின்றபடியினால் உலகளாவிய வர்த்தகம் 2024 ஆம் ஆண்டில் முன்னேற்றத்தின் அறிகுறிகளைக் காட்டுகிறது. உலகளாவிய வர்த்தகம் குறிப்பாக தொழில்நுட்பத் துறையில் ஆசியாவிலிருந்து ஏற்றுமதிகளினால் வலுவூட்டப்படுகின்றபடியினால் 2024-25 ஆம் ஆண்டில் 3.25 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், பிராந்திய மோதல்கள் மற்றும் புவிசார் அரசியல் பதட்டங்கள் இந்த முன்னேற்றத்தை மோசமாக பாதிக்கும்.

பணவீக்கத்தை எதிர்க்கொள்வதற்கு பெரும்பாலான மத்திய வங்கிகள், அடமானச் செலவுகள் அதிகரிப்பு, படுகடனை மிள்நிதியிடுவதில் உள்ள சிரமங்கள், நிறுவனங்களின் வங்குரோத்து நிலைகள் மற்றும் குறைக்கப்பட்ட பணவீக்கம் ஆகியவற்றில் அதிகரிப்புக்கு இட்டுச் செல்லக்கூடிய கொள்கை வட்டி விகிதங்களை உயர்த்தியது. இருப்பினும், பணவீக்கத்தில் படிப்படியாக வீழ்ச்சி ஏற்படுவதனால், அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களில் உள்ள கொள்கை விகிதங்கள் 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் குறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெரும்பாலான மத்திய வங்கிகளின் அதிகாரிக்கும் சுழற்சிகள் பூர்த்தியடைந்துள்ள அதேவேளையில் சிலவற்றில் இலகுவாக்குவது ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், கொள்கை விகிதங்கள் உயர்வாகவே உள்ளன. பணவீக்கக் கண்ணோட்டத்தைச் சுற்றி தொடர்ந்து உயர்த்தப்பட்ட நிச்சயமற்ற தன்மை பாரிய அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களில் கொள்கை தளர்த்தலின் வேகத்தை பாதித்துள்ளது.இறுக்கமான நாணயக் கொள்கை மற்றும் அதிக விவசாய உற்பத்தியின் பின்தங்கிய விளைவுகள் தென் அசியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் கோகேசஸ் மற்றும் மத்திய ஆசியாவில் பணவீக்க இயக்கவியலையும் குறைக்கும். பணவீக்க செயல்முறையை ஆதரிப்பதற்கு அரசிறைக் கட்டுப்பாடும் அவசியமாகும்.

ஒட்டுமொத்தமாக, உலக வளர்ச்சியானது அரசிறைக் கொள்கை படிப்படியாக இறுக்கமடையத் தொடங்கியதைத் தொடர்ந்து தொழிலாளர் சந்தை சாந்தமடைகிறமை மற்றும் நுகர்வு மிதமான நிலையை அடைகின்றமை என்பவற்றின் காரணமாக 2025 ஆம் ஆண்டில் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது,

வர்த்தகப் பதட்டங்களின் அதிகரிப்பு, விநியோகச் சங்கிலியில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலையை அதிகரிப்பதன் மூலம் பணவீக்கத்திற்கு அருகிலுள்ள தவணை அபாயங்களை மேலும் உயர்த்தலாம். ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கில் உள்ள மோதல்கள் போன்ற அதிகரிக்கும் புவிசார் அரசியல் அபாயங்கள், நிதி ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தல்களை ஏற்படுத்துவதுடன் உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் தொடர்ந்து நிச்சயமற்ற நிலைக்கு வழிவகுக்கும்.

**அட்டவணை 1.6 : சர்வதேச பொருட்களின் விலைகள்**

| விடயம் | அலகு | உண்மையான | | மதிப்பிடப்பட்ட | |
|---|---|---|---|---|---|
| | | 2022 | 2023 | 2024 | 2025 |
| **சக்தி** | | | | | |
| நிலக்கரி, அவுஸ்திரேலியா | $மெ.தொ | 344.9 | 172.8 | 125.0 | 110.0 |
| கச்சா எண்ணெய், சராசரி | $/பெரல் | 99.8 | 82.6 | 84.0 | 79.0 |
| இயற்கை எரிவாயு, ஐ.அ. | $/MMBTU | 6.4 | 2.5 | 2.4 | 3.5 |
| **சக்தியற்ற** | | | | | |
| **விவசாயம்** | | | | | |
| **குடிபானங்கள்** | | | | | |
| கோலா | $/கிகி | 2.39 | 3.28 | 5.00 | 4.00 |
| கோப்பி, ரொபஸ்டா | $/கிகி | 2.29 | 2.63 | 3.50 | 2.80 |
| தேயிலை | $/கிகி | 3.05 | 2.74 | 2.75 | 2.77 |
| **உணவு** | | | | | |
| **கொழுப்புகள் மற்றும் எண்ணெய்கள்** | | | | | |
| பாம் எண்ணெய் | $மெ.தொ | 1,276 | 886 | 905 | 825 |
| சோயாபீன் உணவு | $மெ.தொ | 548 | 541 | 480 | 460 |
| சோயாபீன்கள் | $மெ.தொ | 675 | 598 | 500 | 475 |
| **தானியங்கள்** | | | | | |
| சோளம் | $மெ.தொ | 319 | 253 | 200 | 195 |
| நெல் | $மெ.தொ | 437 | 554 | 595 | 550 |
| கோதுமை | $மெ.தொ | 430 | 340 | 290 | 295 |
| **ஏனைய உணவுகள்** | | | | | |
| சீனி | $/கிகி | 0.40 | 0.52 | 0.50 | 0.46 |
| **மூலப் பொருட்கள்** | | | | | |
| பருத்தி | $/கிகி | 2.86 | 2.09 | 2.15 | 2.20 |
| இறப்பர் | $/கிகி | 1.54 | 1.38 | 1.55 | 1.60 |
| அறுக்கப்பட்ட மரம் | $/cum | 675 | 678 | 680 | 690 |
| **உலோகங்கள் மற்றும் கனிமங்கள்** | | | | | |
| அலுமினியம் | $மெ.தொ | 2,705 | 2,256 | 2,300 | 2,400 |
| செம்பு | $மெ.தொ | 8,822 | 8,490 | 8,900 | 8,800 |
| நிக்கல் | $மெ.தொ | 25,834 | 21,521 | 1,700 | 18,000 |

*மூலம் : பொருட் சந்தை கண்ணோட்டம் - 2024 ஏப்ரல்*

# அத்தியாயம் 2
# அரசிறை அபிவிருத்திகள்

## 2.1 மேன்நோக்கு

2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில், அரசாங்க வருவாயில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு மற்றும் குறைவடைந்த அரசாங்க செலவினங்கள் காரணமாக வட்டி செலுத்துதலின் சரிவினால் அரசிறை செயலாற்றுகை குறிப்பிடத்தக்களவில் விருத்தியடைந்துள்ளது. வருவாய் அடிப்படையிலான அரசிறை ஒருங்கிணைப்பு முயற்சிகளின் சாதகமிக்க தாக்கங்களைப் பிரதிபலிக்கும் வகையில், 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் பதிவு செய்யப்பட்ட முதன்மை உபரித்தொகையான ரூபா 30.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 543.4 பில்லியன் முதன்மை உபரித் தெகையினை பதிவு செய்துள்ளது. இது சர்வதேச நாணய நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2024 முதல் அரையாண்டுக்காக அளவு அடைவு பரிமாணம் ரூபா 140 பில்லியன் முதன்மை உபரி இலக்கை விஞ்சியுள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் ஒப்பிடும்போது 2024 இன் அதே காலப் பகுதியில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது ரூபா 1,242.6 பில்லியனிலிருந்து ரூபா 643.9 பில்லியனினால் ரூபா 598.7 பில்லியனுக்கு குறைவடைந்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு பகுதியில் வரி மற்றும் வரியல்லா வருமானம் மற்றும் மானியங்கள் உள்ளிட்ட அரசாங்கத்தின் மொத்த வருமானம் 2023 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ரூபா 1,317.1 பில்லியன் என்ற நிலையிலிருந்து 41.6 சதவீதத்தினால் அல்லது ரூபா 547.6 பில்லியனினால் ரூபா 1,864.6 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது. இது ரூபா 4,127.0 பில்லியன் கொண்ட வருடாந்த மதிப்பீட்டில் 45.2 சதவிகிதத்தினை எட்டியுள்ளது. வரி வருமானது 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் காணப்பட்ட ரூபா 1,198.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் பகுதியில் 42.6 சதவீதத்தினால் ரூபா 1,709.3 பில்லியனுக்கு கணிசமான அளவில் அதிகரித்துள்ளது. இது ரூபா 3,820.0 பில்லியன் கொண்ட வருடாந்த மதிப்பீட்டில் 44.7 சதவிகிதத்தினை எட்டியுள்ளது. இவ்வதிகரிப்பானது 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்ட வரிக் கொள்கை நடவடிக்கைகள், உள்நாட்டு வருமான நிர்வாகத்தில் ஏற்பட்ட படிப்படியான முன்னேற்றங்கள், மற்றும் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கம் போன்ற காரணிகளின் விளைவினால் ஏற்பட்டதாகும்.

வருமான வரி மூலம் சேகரிக்கப்பட்ட வருமானமானது 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுப் பகுதியில் 16.3 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 447.3 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது. இது ரூபா 1,080.0 பில்லியன் கொண்ட வருடாந்த மதிப்பீட்டில் 41.4 சதவீத அடைவாகும். 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலத்துடன் ஒப்பிடும்போது, 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் உயர் தனிநபர் வருமான வரி மற்றும் நிறுத்திவைப்பு வரி ஆகியவற்றிலிருந்து வருமான சேகரிப்பு அதிகரித்ததே இந்த எழுச்சிக்கு முக்கிய காரணமாகும்.

பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி 60.2 சதவீதம் அதிகரித்து 2024 இன் முதல் அரையாண்டு காலப்பகுதியில் ரூபா 1,043.9 பில்லியனினை அடைந்துள்ளது. இது முக்கியமாக பெறுமதி சேர் வரி விகிதங்களின் அதிகரிப்பு, பதிவு வரம்பைக் குறைப்பு மற்றும் பெரும்பாலான விலக்குகளை நீக்கியமையினால் பெறப்பட்ட பெறுமதி சேர் வரி மூலம் சேகரிக்கப்பட்ட வருவாயின் அதிகரிப்பால் உந்தப்பட்டதாகும். பெற்றோலியப் பொருட்கள் மீதான உற்பத்தி வரி, மதுபானம் மீதான மது வரி மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி ஆகியவற்றிலிருந்து அதிகரித்த வருமான ஆதாயங்களும் இந்த எழுச்சிக்குக் காரணமாகும்.

வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான வரி வருவாய் 34.2 சதவீதத்தினால் அதிகரித்து 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 218.2 பில்லியனாகக் காணப்பட்டதுடன், இது இறக்குமதி கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்பட்டதன் மூலம் வெளிப்பட்ட இறக்குமதியின் அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. சீனி மற்றும் உருளைக்கிழங்கு போன்ற அத்தியாவசியப் பொருட்களின் மீதான விசேட வியாபார பண்ட வரி விகிதங்களின் அதிகரிப்பு காரணமாக விசேட வியாபார பண்ட வரிகளிலிருந்தான வருவாய் சேகரிப்பானது 77 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 45.5 பில்லியனாக உயர்ந்தது. சுங்க இறக்குமதி தீர்வை மற்றும் செஸ் வரி ஆகியவற்றிலிருந்து வருமானங்கள் முறையே 54.1 சதவீதத்தினால் ரூபா 48.8 பில்லியனாகவும், 53.7 சதவீதத்தினால் ரூபா 37.9 பில்லியனாகவும் உயர்ந்துள்ளது. துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் மேம்பாட்டு வரியிலிருந்தான வருமான சேகரிப்பு 6.7 சதவீதத்தினால் சற்றே அதிகரித்துள்ளது.

வரி அல்லாத வருமானமானது, 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் ரூபா 116.0 பில்லியனாக இருந்து 2024 ஆம் ஆண்டின் அதே காலப் பகுதியில் பகுதியில் 30.4 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 151.3 பில்லியனுக்கு உயர்ந்தது. இதற்கு பிரதானமான காரணங்களாவன அபராதம், கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகள் மற்றும் வட்டி வருமானம் ஆகியவற்றிலிருந்தான வருவாய் அதிகரித்தமையாகும்.

2024 ஆம் ஆண்டில் முதல் அரையாண்டில் செலவினம் அரசின் 3.8 சதவீதத்தினால் ரூபா 2,463.3 பில்லியன்களாக குறைந்தது. 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுப் பகுதியில் மொத்த செலவினத்தில் சுமார் 90 சதவீதமாக இருந்த மீண்டெழும் செலவினம் 4.6 சதவீதத்தினால் ரூபா 2,218.4 பில்லியன்களுக்கு குறைந்தது. இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 2,325.5 பில்லியனாக காணப்பட்டது. இது முதன்மையாக வட்டிச் செலவில் 10.3 சதவீதத்தினால் 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் ரூபா 1,273.3 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 1,142.1 பில்லியனுக்கு குறைவடைந்தது. இது உள்நாட்டு வட்டி விகிதங்களின் சரிவு மற்றும் உள்நாட்டு கடன் மேம்படுத்தல் முடிவடைந்ததன் விளைவுகளால் உள்நாட்டு வட்டி செலுத்துதல்கள் 11.9 சதவீதத்தினால் குறைந்து ரூபா 1,073.7 பில்லியனுக்கு சரிவடைந்தது.

எவ்வாறாயினும், 2024 சனவரி மாதம் முதல் அமுலுக்கு வந்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவின் அதிகரிப்பு காரணமாக பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான செலவினம் 7.5 சதவீதத்தினால் ரூபா 146.7 பில்லியனுக்கும் மற்றும் சம்பளம் மற்றும் ஊதியங்களுக்கான செலவினம் 4.4 சதவீதத்தால் ரூபா 480.3 பில்லியனுக்கும் அதிகரித்ததன் மூலம் 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் பகுதியில் வட்டி அல்லாத மீண்டெழும் செலவினம் 2.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் காணப்பட்ட மானியங்கள் மற்றும் பணப் பரிமாற்றங்கள் மீதான செலவினம் ரூபா 455.8 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் அதே காலப் பகுதியில் 1.4 சதவீதத்தினால் குறைந்து ரூபா 449.3 பில்லியனாக காணப்பட்டது.

2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் ரூபா 234.1 பில்லியனாக இருந்த மூலதனம் மற்றும் நிகர கடன் 4.6 சதவீதம் அதிகரித்து 2024 ஆம் ஆண்டின் அதே காலப் பகுதியில் 244.9 பில்லியனாக காணப்பட்டது. நிலையான சொத்துக்களை கையகப்படுத்தியதற்காக மூலதனச் செலவினம் 12.5 சதவிகிதம் அதிகரித்ததை இது குறிக்கப்படுகிறது. எவ்வாறாயினும், அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான இடமாற்றங்கள் வீழ்ச்சியடைந்துள்ளன.

**அட்டவணை 2.1 : 2024 சனவரி முதல் யூன் வரையிலான வரவு செலவுத்திட்ட சுருக்கம்**

ரூபா.மில்லியன்

| விடயம் | 2023 | 2024 (தற்காலிகமானது) |
|---|---|---|
| **வருமானம் மற்றும் மானியங்கள்** | **1,317,053** | **1,864,607** |
| **வருமானம்** | **1,314,886** | **1,860,632** |
| வரி வருமானம் | 1,198,852 | 1,709,305 |
| வரி அல்லாத வருமானம் | 116,034 | 151,327 |
| மானியங்கள் | 2,167 | 3,975 |
| **செலவினம்** | **2,559,619** | **2,463,305** |
| **மீண்டெழும்** | **2,325,541** | **2,218,442** |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 1,273,291 | 1,142,105 |
| ஏனையவை | 1,052,250 | 1,076,337 |
| அரசாங்க முதலீடுகள் | 258,812 | 258,306 |
| ஏனையவை | -24,734 | -13,443 |
| **நடைமுறைக் கணக்கு மிகுதி(+) / பற்றாக்குறை (-)** | **-1,010,655** | **-357,810** |
| **வரவு செலவுத்திட்ட மிகுதி(+) / பற்றாக்குறை (-)** | **-1,242,566** | **-598,698** |
| **நிதியீட்டம்** | **1,242,566** | **598,698** |
| வெளிநாட்டு நிதியீட்டம் | 23,950 | 82,885 |
| கடன் பெறுகை | 192,500 | 167,131 |
| மீள் கொடுப்பனவுகள் | -168,550 | -84,246 |
| உள்நாட்டு நிதியீட்டம் | 1,218,616 | 515,814 |
| கடன் பெறுகை | 9,763,117 | 5,202,159 |
| மீள் கொடுப்பனவுகள் | -8,544,501 | -4,686,346 |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

## 2.2 அரசாங்க வருமானம்

மானியங்கள் தவிர்ந்த அரசின் மொத்த வருவாய் 41.5 சதவீதத்தினால் அதிகரித்ததுடன், 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் ரூபா 1,314.9 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் அதே காலப் பகுதியில் ரூபா 1,860.6 பில்லியனுக்கு உயர்ந்து காணப்பட்டது. இதற்கான காரணம் வரி வருவாயானது 42.6 சதவீதத்தினால் அதிகரித்து, 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் ரூபா 1,198.9 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ரூபா 1,709.3 பில்லியனாக பதிவு செய்யப்பட்டதாகும்.

வரி வருவாயில் அதிகரிப்பானது கீழ்வரும் விடயங் களிலிருந்தான வருவாய் அதிகரிப்பினால் ஏற்பட்டதாகும்:

1. பெறுமதிசேர் வரியானது 2024 சனவரி 1 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 15 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதமாக அதிகரிகரிக்கப்பட்டமை, பெறுமதி சேர் வரி பதிவு வரம்பு 2024 சனவரி 1 முதல் ஆண்டுக்கு ரூபா 80 மில்லியனிலிருந்து ரூபா 60 மில்லியனுக்கு குறைக்கப்பட்டடமை, 2024 சனவரி 1 முதல் நடைமுறைக்கு வரும் பெறுமதி சேர் வரி விலக்குகளின் பெரும்பகுதி நீக்கப்பட்டமை மற்றும் 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுடன் ஒப்பிடும்போது 2024 இன் இதே காலப் பகுதியில் 6.4 சதவிகிதத்தினால் இறக்குமதி அதிகரிக்கப்பட்டமை என்பவற்றால் பெறுமதி சேர் வரியானது 85.4 சதவிகிதத்தினால் அல்லது 284.3 பில்லியனினால் அதிகரிப்பினை பெற்றது.

2. பெற்றோலியத்தின் மீதான உற்பத்தித் தீர்வை 200.8 சதவீதத்தினால் அல்லது ரூபா 64.7 பில்லியனினால் அதிகரிப்பினைப் பெற்றது. இது 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் பகுதியில் பெற்றோலிய இறக்குமதியில் 115.7 சதவிகிதம் அதிகரிப்பு பெறப்பட்டமை, பெற்றோல் மற்றும் டீசல் விலை 2023 ஜுன் 1 அன்று லீட்டருக்கு ரூபா 25 அதிகரித்தமை மேலும் 2024 சனவரி 1 அன்று டீசல் லீட்டருக்கு ரூபா 6 மற்றும் பெற்றோல் லீட்டருக்கு ரூபா 5 குறைவடைந்தமை என்பவற்றின் மீதான கூட்டு விளைவினால் உற்பத்தித் தீர்வை விகிதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினால் உந்தப்பட்டதாகும்.

3. வருமான வரி 16.3 சதவீதம் அல்லது ரூபா 62.8 பில்லியன் அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு பல காரணிகளால் ஏற்பட்டதாகும். 2023 சனவரி 1 முதல் நடைமுறைக்கு வரும் வரிக் கொள்கையின் முழு தாக்கம், 2023 பெப்ரவரி முதல் வருமான அதிகரிப்பில் பிரதிபலிக்கத் தொடங்கியமை, பொது மற்றும் முறைசாரா தனியார் துறைகளில் அதிகரித்த ஊதியத்தின் தாக்கங்கள் (பொதுத்துறை மற்றும் முறைசாரா தனியார் துறையின் பெயரளவு ஊதிய விகிதம் ஆண்டுக்கு ஆண்டு யூன் 2024 இல் முறையே 21.2 சதவீதம் மற்றும் 5.9 சதவீதம்), பெறுநிறுவன மற்றும் தனிநபர் வருமான வரிகளில் அதிகரித்த பொருளாதார நடவடிக்கை மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு திரும்பும் நேர்மறையான விளைவுகள்.

4. சீனி மற்றும் உருளைக்கிழங்கு விலையை ஒரு கிலோவிற்கு ரூபா 50 அதிகரிப்பு மற்றும் முக்கிய பண்டங்களின் இறக்குமதி அளவு அதிகரிப்பு காரணமாக விசேட பண்டங்கள் வரி 77.0 சதவீதம் அல்லது ரூபா 19.8 பில்லியனாக அதிகரித்தமை.

5. 2023 ஜுலை 1 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட மதுபானத்தின் மீதான மது வரி விகித திருத்தங்களின் முழு தாக்கத்தை உணர்ந்தமை, பணவீக்கத்திற்கேற்ப மது வரியின் சுட்டியாக்கம் மற்றும் 2024 சனவரி 1 அன்று மது வரி விகிதங்கள் 14 சதவீதம் அதிகரித்தமை காரணமாக மதுபானத்தின் மீதான மது வரி 22.3 சதவீதத்தினால் அல்லது ரூபா 18.1 பில்லியனுக்கு அதிகரிப்படைந்தமை.

6. 2023 மார்ச் 28 முதல் சுங்க இறக்குமதி வரி விகிதங்கள் 0:10:15 சதவீதத்தில் இருந்து 0:15:20 சதவீதமாக திருத்தப்பட்டதன் காரணமாகவும், இறக்குமதிகள் அதிகரித்ததன் காரணமாகவும் சுங்க இறக்குமதி வரி 54.1 சதவீதத்தினால் அல்லது ரூபா 17.1 பில்லியனாக அதிகரித்தமை.

7. 2024 சனவரி 1 முதல் பதிவு வரையறை ஆண்டுக்கு ரூபா 120 மில்லியனிலிருந்து ஆண்டுக்கு ரூபா 60 மில்லியனாக ஆக்கப்பட்டதன் மூலம், வரி செலுத்துவோர் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் இறக்குமதி அதிகரிப்பின் தாக்கம் காரணமாக சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி 15.3 சதவீதத்தினால் அல்லது ரூபா 15.9 பில்லியனாக அதிகரித்தமை.

8. இறக்குமதி அதிகரிப்பு காரணமாக செஸ் வரி 53.7 சதவீதத்தினால் அல்லது ரூபா 13.2 பில்லியனால் அதிகரித்தமை.

2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுப் பகுதியில் வரி அல்லாத வருமானத்தில் ஏற்பட்ட 30.4 சதவீதம் அல்லது ரூபா 35.3 பில்லியனுக்கு அதிகரித்தமையானது வருமான அதிகரிப்புக்கு பங்களித்தது. இது வட்டி மூலமான வருமானம் ரூபா 17.2 பில்லியன் மற்றும் அபராதம், கட்டணம் மற்றும் அறவீடுகள் மூலம் ரூபா 20.0 பில்லியன் அதிகரிப்பினால் வருமான உயர்வுக்கு வழிவகுத்தது.

**அட்டவணை 2.2 : 2024 சனவரி முதல் யூன் வரையிலான மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானமும் செலவினமும்**

ரூபா.பில்லியன்

| விடயம் | மதிப்பிடப்பட்ட (வருடாந்த) | உண்மையான (தற்காலிக) | அடைவு (%) |
|---|---|---|---|
| **மொத்த வருமானம்** | **4,107** | **1,861** | **45.3** |
| வரி வருமானம் | 3,820 | 1,709 | 44.7 |
| வரியல்லா வருமானம் | 287 | 151 | 52.7 |
| **மொத்த செலவினம்** | **6,978** | **2,463** | **35.3** |
| மீண்டெழும் செலவினம் | 5,277 | 2,218 | 42.0 |
| மூலதனச் செலவினம் மற்றும் தேறிய பெறுகைகள் | 1,701 | 245 | 14.4 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம், திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம் மற்றும் அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

**அட்டவணை 2.3 : 2024 சனவரி முதல் யூன் வரையில் வருடாந்த மதிப்பீடு மற்றும் உண்மையான வரி வருமானம்**

ரூபா.பில்லியன்

| விடயம் | வருடாந்த மதிப்பீடு | உண்மையான (சன - யூன்) (தற்காலிகமானது) |
|---|---|---|
| **உள்நாட்டு இறைவரித் திணைக்களம்** | | |
| வருமானம் மற்றும் இலாபங்கள் மீதான வரி | 1,080 | 447 |
| பெறுமதிசேர் வரி - உள்நாட்டு | 740 | 353 |
| தேசக் கட்டுமான வரி - உள்நாட்டு | - | 0.1 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு - உள்நாட்டு | 195 | 91 |
| **உப மொத்தம்** | **2,015** | **892** |
| **சுங்கத் திணைக்களம்** | | |
| இறக்குமதித் தீர்வைகள் | 175 | 49 |
| பெறுமதிசேர் வரி - இறக்குமதிகள் | 660 | 264 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு - இறக்குமதி | 55 | 28 |
| தேசக் கட்டுமான வரி - இறக்குமதிகள் | - | 0.0 |
| துறைமுக மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு | 175 | 86 |
| இறக்குமதி/ஏற்றுமதி செஸ் | 60 | 38 |
| விசேட வியாபார பண்ட அறவீடு | 95 | 46 |
| உற்பத்தி வரி விசேட ஏற்பாடுகள் | 313 | 183 |
| சிகரட் | 143 | 53 |
| பெற்றோலியம் | 135 | 97 |
| மோட்டார் வாகனங்கள் மற்றும் பிற | 35 | 33 |
| **உப மொத்தம்** | **1,533** | **693** |
| **மதுவரித் திணைக்களம்** | | |
| மதுபானம்/புகையிலை | 232 | 100 |
| **உப மொத்தம்** | **232** | **100** |
| **ஏனையவை** | | |
| தொலைத்தொடர்பு அறவீடு | 19 | 9 |
| உரிமப் பத்திர வரி மற்றும் ஏனையவை | 22 | 16 |
| **உப மொத்தம்** | **40** | **25** |
| **மொத்த வரி வருமானம்** | **3,820** | **1,709** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*


**அட்டவணை 2.4 : 2024 சனவரி முதல் யூன் வரையில் அரசாங்க வருமான செயலாற்றுகையின் சுருக்கம்**

ரூபா.மில்லியன்

| விடயம் | 2023 | 2024 | வளர்ச்சி % |
|---|---|---|---|
| **வரி வருமானம்** | **1,198,852** | **1,709,305** | **42.6** |
| வருமான வரி | 384,463 | 447,252 | 16.3 |
| உள்நாட்டு நுகர்வு அடிப்படையிலான வரி | 461,570 | 600,369 | 30.1 |
| பெறுமதி சேர் வரி | 235,887 | 353,392 | 49.8 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு | 79,980 | 91,187 | 14.0 |
| உற்பத்தி வரி | 145,674 | 155,696 | 6.9 |
| தேச கட்டுமான வரி | 30 | 95 | 216.7 |
| இறக்குமதி அடிப்படையிலான வரி | 335,370 | 636,470 | 89.8 |
| சுங்கத் தீர்வை | 31,631 | 48,758 | 54.1 |
| பெறுமதிசேர் வரி | 96,806 | 263,552 | 172.2 |
| தேச கட்டுமான வரி | 155 | 3 | -98.1 |
| துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு | 80,612 | 85,992 | 6.7 |
| விசேட வியாபார பண்ட அறவீடு | 25,709 | 45,500 | 77.0 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு | 23,449 | 28,115 | 19.9 |
| உற்பத்தி வரி | 52,338 | 126,636 | 142.0 |
| செஸ் அறவீடு | 24,670 | 37,914 | 53.7 |
| உரிமப் பத்திர வரிகள் மற்றும் ஏனையவை | 17,449 | 25,214 | 44.5 |
| **வரி அல்லாத வருமானம்** | **116,034** | **151,327** | **30.4** |
| **மொத்த வருமானம்** | **1,314,886** | **1,860,632** | **41.5** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

**வரைபு 2.1 : 2024 சனவரி முதல் யூன் வரையில் அரச வருமானத்தின் பங்குகள்**




*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

## வருமான வரிகள்

2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் வருமான வரிகள் மூலம் சேகரிக்கப்பட்ட வருமானம் 16.3 சதவீதம் அதிகரித்து 447.3 பில்லியனாக இருந்தது. இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 384.5 பில்லியனாகக் காணப்பட்டது. இதற்கு தனிநபர் வருமான வரி மற்றும் நிறுவன வருமான வரி (நி.வ.வரி), உயர் தனிநபர் வருமான வரி (உ.த.வ.வரி) மற்றும் நிறுத்தி வைத்தல் வரி தொடர்பாக கடந்த 2023 ஆம் ஆண்டு சனவரி 01 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை மாற்றங்களின் முழு தாக்கம் காரணமாகும். மேலும் வரி நிர்வாக நடவடிக்கைகளின் பலப்படுத்தல் இந்த வருமான அதிகரிப்புக்கு பங்களித்தன.

2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் தனிநபர் வருமான வரி வருமானம் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 15.6 பில்லியனிலிருந்து கணிசமாக 43.2 சதவீதத்தினால் ரூபா 22.4 பில்லியனுக்கு அதிகரித்துள்ள அதேவேளை, நிறுவன வருமான வரி வருமானம் ரூபா 230.9 பில்லியனில் இருந்து 237.4 பில்லியனுக்கு 2.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் உயர் தனிநபர் வருமான வரி வருமானம் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 69.7 பில்லியனிலிருந்து கணிசமாக 43.7 சதவீதத்தினால் ரூபா 100.2 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் வட்டி மீதான நிறுத்திவைப்பு வரியின் வருமானமும் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 68.1 பில்லியனிலிருந்து கணிசமாக 27.8 சதவீத வளர்ச்சியுடன் ரூபா 87.1 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது.

**அட்டவணை 2.5 : 2024 சனவரி முதல் யூன் வரையில் வருமான வரி மூலமான வருமானங்களின் செயலாற்றுகை**

ரூபா.மில்லியன்

| வரி அடிப்படை | 2023 | 2024 (தற்காலிகமானது) | மாற்றம் % |
|---|---|---|---|
| நிறுவன மற்றும் நிறுவனமல்லாத | 246,520 | 259,742 | 5.4 |
| உழைக்கும் போது செலுத்தும் வரி / உயர் தனிநபர் வருமான வரி | 69,735 | 100,177 | 43.7 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 75 | 237 | 214.3 |
| நிறுத்தி வைத்தல் வரி | 68,132 | 87,096 | 27.8 |
| **மொத்தம்** | **384,463** | **447,252** | **16.3** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

வரி நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் வருமான வரிகளின் அதிகரிப்புக்கு பங்களித்தன. இந்த நடவடிக்கைகளில், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு தனிப்பட்ட அளவில் வரி செலுத்துவோர் பரிவர்த்தனை தகவலை சமர்ப்பிக்க நிதி நிறுவனங்களைக் கட்டாயப்படுத்துதல், தனிநபர் வருமான வரி செலுத்துவோருக்கான இலத்திரனியல் வரி கோவைப்படுத்தலை கட்டாயமாக்குதல், மற்றும் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகையை மீளப் பெறுதல், மொத்தமாக ஒரு நாளில் ரூபா 500,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகை, ஒற்றை பரிவர்த்தனை அல்லது நிகழ்வை வரி நோக்கங்களுக்காக செலவுகளாக கழிக்க அனுமதிக்காது பணப் பரிவர்த்தனைகளை பலவீனமடையச் செய்தல் மேலும், தனிநபர்கள் மற்றும் அரச நிறுவனங்கள் போன்றவற்றின் மூலம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு இதுபோன்ற பரிவர்த்தனைகள் குறித்து வழக்கமான தகவலை பகிர்ந்துகொள்ள ஒரு ஒழுங்குமுறையை வெளியிடல் போன்ற கொள்கை தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## பெறுமதி சேர் வரி

பெயரளவிலான அடிப்படையில், பெறுமதி சேர் வரி மூலமான வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் அடைந்த ரூபா 332.7 பில்லியன் தொகையுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டின் அதே காலப் பகுதியில் ரூபா 616.9 பில்லியனுக்கு 85.4 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. இது 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் 44.1 சதவிகித அடைவாகும். உள்நாட்டு நடவடிக்கைகள் மீதான பெறுமதி சேர் வரி மூலமான வருமானம் 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் 49.8 சதவிகிதத்தால் அதிகரித்து ரூபா 353.4 பில்லியனாக காணப்பட்ட அதே வேளையில், இறக்குமதியிலிருந்து பெறப்பட்ட பெறுமதி சேர் வரி வருமானம் 172.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து ரூபா 263.6 பில்லியனை அடைந்தது.

**அட்டவணை 2.6 : 2024 சனவரி முதல் யூன் வரையில் பெறுமதி சேர் வரி மூலமான வருமானங்களின் செயலாற்றுகை**

ரூபா.மில்லியன்

| வரி அடிப்படை | 2023 | 2024 (தற்காலிகமானது) | வளர்ச்சி % |
|---|---|---|---|
| உள்நாட்டு | 235,887 | 353,392 | 49.8 |
| இறக்குமதி | 96,806 | 263,552 | 172.2 |
| **மொத்த வருமானம்** | **332,692** | **616,944** | **85.4** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*


## உற்பத்தித் தீர்வை மற்றும் மதுவரி

2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் உற்பத்தி தீர்வை வரி மூலம் கிடைத்த வருமானம் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் அடைந்த ரூபா 198.0 பில்லியனுடன் ஒப்பிடும் போது 42.6 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 282.3 பில்லியனை அடைந்துள்ளது. சிகரெட்டுகளின் வருமானம் குறைந்துள்ள போதிலும், பெற்றோலியம், மதுபானம், மோட்டார் வாகனங்கள் மற்றும் பிற உற்பத்திப் பொருட்களிலிருந்து வருமான அதிகரிப்பு ஏற்பட்டமை இதற்கு முக்கிய காரணமாகும். உற்பத்தித் தீர்வை வருமானம் 16.5 சதவீதமாக கணக்கிடப்பட்டுள்ளதுடன், 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானத்தில் உற்பத்தி தீர்வை வரி வருமானமானது 15.2 சதவீதமாகும். இது ஆண்டு மதிப்பீட்டில் 51.8 சதவீதத்தை எட்டியிருந்தது.

பெற்றோலியப் பொருட்களிலிருந்தான வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் அடைந்த ரூபா 32.2 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 200.8 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 97.0 பில்லியனாக இருந்தது. 2024 முதல் அரையாண்டில் பதிவுசெய்யப்பட்ட பொருளாதார வளர்ச்சியுடன் தீர்வை விகித அதிகரிப்பு, கோட்டா முறை நீக்கம் மற்றும் தேவை அதிகரிப்புடன் எரிபொருள் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு ஆகியனவும் வருமான வளர்ச்சிக்கு பங்களித்தன.

மதுபானங்கள் மீதான வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் ரூபா 81.0 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியில் 22.3 சதவீதம் அதிகரித்து ரூபா 99.1 பில்லியனை அடைந்தது. இது 2024 சனவரி 01 முதல் மது வரி விகிதங்கள் 14 சதவீதம் அதிகரித்ததன் காரணமாகும். இருப்பினும், 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் மொத்த மதுபான உற்பத்தி 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 17.5 மில்லியன் முழுமையான லீட்டருடன் ஒப்பிடுகையில் 9 சதவீதம் குறைந்து 15.9 மில்லியன் முழுமையான லீட்டராக இருந்தது. 2024 முதல் அரையாண்டில் வன் மதுபானத்தின் வருமானம் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 54.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 13 சதவீதம் அதிகரித்து ரூபா 61.9 பில்லியனாக இருந்தது. எனினும், சேக் மற்றும் மோல்ட் மதுபானங்களின் வருமானம் முறையே 84 மற்றும் 40 சதவீதங்களாக கனிசமானளவு அதிகரித்தன. 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் மதுபானத்தின் மீதான மது வரி சேகரிப்பு 2024 ஆம் ஆண்டின் மொத்த மதிப்பீட்டு வருவாயில் 43.1 சதவீதமாக இருந்தது.

**வரைபு 2.2 : 2023 மற்றும் 2024 சனவரி முதல் யூன் வரையில் உற்பத்தி வரி செயலாற்றுகை**




*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் மோட்டார் வாகனங்களுக்கான உற்பத்தித் தீர்வை வருமானமானது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 20.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 47.5 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 29.6 பில்லியனுக்கு அதிகரித்தது. குறிப்பாக சில நிபந்தனைகளுடன் வெளிநாட்டில் வேலைசெய்யும் இலங்கையர்களுக்காக முழுமையாக மின்சக்தியினால் இயங்கும் வாகனங்களின் இறக்குமதிக்காக உரிமம் வழங்கும் திட்டத்தின் ஊடாக மோட்டார் வாகனங்களின் இறக்குமதிக்கான தற்காலிகக் கட்டுப்பாடுகளை ஓரளவு தளர்த்தியமை இதற்குக் காரணமாகும்.

மேலும், 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில், கொழுப்பு அடங்கிய உற்பத்தி பொருட்கள் சுண்ணாம்பு மற்றும் சீமெந்து, சீனி மற்றும் சீனி கலந்த தின்பண்டங்கள் மற்றும் இயந்திர சாதனங்கள் போன்ற ஏனைய பொருட்களிலிருந்தான உற்பத்தித் தீர்வை வருமானம் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் அடைந்த ரூபா 1.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 57.6 சதவீதம் அதிகரித்து ரூபா 3.0 பில்லியனை அடைந்தது. இது இறக்குமதி கட்டுப்பாடுகளின் படிப்படியான தளர்வின் விளைவை பிரதிபலிக்கிறது.

இருப்பினும், சிகரெட் வருமானம் 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் அடைந்த ரூபா 62.8 பில்லியனுடன் ஒப்பிடுகின்ற போது, 2024 சனவரி 1 முதல் ஆண்டு தோறும் சராசரி பணவீக்கத்திற்கு வரியை சீர்செய்யும் அடிப்படையில் அனைத்து வகையான சிகரெட்டுகளின் மதுவரி விகிதம் 14 சதவிகிதம் அதிகரித்த போதிலும் 14.6 சதவீதம் குறைந்து ரூபா 53.6 பில்லியனை அடைந்திருந்தது. வரி அதிகரிப்புடன் கூடிய மேல்நோக்கிய விலை சீராக்கங்களின் விளைவாக சிகரெட்டுகளின் விற்பனை குறைந்ததுடன், (60 மிமீ முதல் 67 மிமீ நீளம் வரையானவை தவிர) 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில சிகரெட்டுகள் மீதான மது வரி வருவாயைக் குறைத்தது.

**அட்டவணை 2.7 : 2024 சனவரி முதல் யூன் வரையில் மதுவரி செயலாற்றுகை**

ரூபா.மில்லியன்

| வரி அடிப்படை | 2023 | 2024 (தற்காலிகமானது) | வளர்ச்சி % |
|---|---|---|---|
| மதுபானம் | 81,020 | 99,116 | 22.3 |
| சிகரெட்டு | 62,778 | 53,624 | -14.6 |
| மோட்டார் வாகனங்கள் | 20,098 | 29,649 | 47.5 |
| பெற்றோலியம் | 32,240 | 96,987 | 200.8 |
| ஏனையவை | 1,876 | 2,956 | 57.6 |
| **மொத்தம்** | **198,012** | **282,331** | **42.6** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

## ஏனைய வரிகள்

பிற வரிகளின் மூலம் கிடைக்கும் வருவாய் 2024 முதல் அரையாண்டில், 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் அடைந்த ரூபா 283.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 27.9 சதவீதம் அதிகரித்து ரூபா 362.8 பில்லியனாக உயர்ந்தது.

சுங்க இறக்குமதி தீர்வை வருமானம் 2024 முதல் அரையாண்டில் 2023 ஆம் ஆண்டின் அதே கால கட்டத்தில் அடைந்த ரூபா 31.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க வகையில் 54.1 சதவீதம் அதிகரித்து ரூபா 48.8 பில்லியனாக இருந்தது. இது முக்கியமாக 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் காரணமாகவும், சுங்க இறக்குமதி தீர்வை விகிதங்கள் மேல்நோக்கித் திருத்தப்பட்டதன் காரணமாகவும் ஆகும்.

செஸ் வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் அடைந்த ரூபா 24.7 பில்லியனுடன் ஒப்பிடும் போது, 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் காரணமாக 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 53.7 சதவீதத்தினால் ரூபா 37.9 பில்லியனாக இருந்தது. இதற்கிணங்க, இறக்குமதி மீதான செஸ் வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட வருவாய் 2024 முதல் அரையாண்டில், 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் அடைந்த 23.6 பில்லியனிலிருந்து குறிப்பிடத்தக்க வகையில் 56.2 சதவீதம் அதிகரித்து ரூபா 36.9 பில்லியனாக இருந்தது. 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் ஏற்றுமதி மீதான செஸ் வரியிலிருந்து கிடைத்த வருவாயானது, 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 1.1 பில்லியனிலிருந்து 2.0 சதவீதத்தால் ரூபா 1.0 பில்லியனுக்கு சற்றே சரிவடைந்துள்ளது. இதற்கான காரணம் நாணய மாற்று விகித உயர்வின் தாக்கமாகும். 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் சேகரிக்கப்பட்ட செஸ் வருவாய் 2024 ஆம் ஆண்டிற்கான ரூபா 60.0 பில்லியன் ஆண்டு மதிப்பீட்டின் 63.2 சதவிகித அடைவாகும்.

2023 ஏப்ரலில் 1,631 பொருட்களும், 2024 சனவரியில் 26 பொருட்களும் படிப்படியாகக் குறைக்கப்பட்ட போதிலும், 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டின் மூலமான வருவாய் 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் காரணமாக 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் அடையப்பெற்ற 80.6 பில்லியனிலிருந்து 6.7 சதவீதம் அதிகரித்து ரூபா 86.0 பில்லியனாக இருந்தது. 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில், துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து சேகரிக்கப்பட்ட வருவாய் 2024 ஆம் ஆண்டுக்கான ரூபா 175 பில்லியன் கொண்ட ஆண்டு மதிப்பீட்டின் 49.1 சதவிகிதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

2023 மூன்றாம் காலாண்டில் இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதாலும், சீனி மற்றும் உருளைக்கிழங்கு மீதான விகிதங்கள் மேல்நோக்கி திருத்தப்பட்டதாலும் விசேட பண்ட வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட வருவாய் கணிசமாக 77.0 சதவீதத்தால் ரூபா 45.5 பில்லியனுக்கு அதிகரித்தது.

சமூகப் பாதுகாப்பு பங்கீட்டு அறவீடு மூலமான வருவாய் இறக்குமதி மற்றும் உள்நாட்டு நடவடிக்கைகள் இரண்டின் வருவாய் அதிகரிப்பின் காரணமாக, 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் காணப்பட்ட 103.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 15.3 சதவீதம் அதிகரித்து ரூபா 119.3 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது. 2024 முதல் அரையாண்டில் தொலைத்தொடர்பு வரி வருமானம் 2023 இன் அதே காலகட்டத்தில் காணப்பட்ட ரூபா 8.2 பில்லியனுடன் ஒப்பிடும்போது 7.3 வீதத்தால் ரூபா 8.8 பில்லியனுக்கு உயர்ந்துள்ளது.

## வரி அல்லாத வருமானம்

வரி அல்லாத வருமானமானது, 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் அடைந்த ரூபா 116.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் பிரதானமாக அபராதங்கள், கட்டணங்கள், அறவீடுகள் மற்றும் வட்டி வருமானம் ஆகியவற்றிலிருந்து வருமானம் கணிசமானளவு அதிகரித்ததன் காரணமாக 30.4 சதவீதம் அதிகரித்து ரூபா 151.3 பில்லியனை அடைந்தது. அபராதங்கள், கட்டணங்கள், அறவீடுகளிலிருந்தான வருமானமானது, 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் அடைந்த ரூபா 59.3 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் கணிசமானளவில் 33.6 சதவீதத்தால் ரூபா 79.3 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது. அதன்படி, அபராதம், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் மூலமான வருவாயானது, வரி அல்லாத வருவாயின் முதன்மை ஆதாரமாக இருந்து, மொத்த வரி அல்லாத வருவாயில் 52.4 சதவீத பங்களிப்பை அளித்தது. இதற்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மற்றும் ஆட்பதிவு திணைக்களம் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படும் கட்டணங்கள் மற்றும் கட்டணங்களின் மேல்நோக்கிய

திருத்தம் காரணமாகும். அதேபோல், வட்டி வருமானம் 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் அடைந்த ரூபா 6.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 276.8 சதவீதம் அதிகரித்து ரூபா 23.4 பில்லியனை அடைந்தது. மேலும், அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் இலாபம் மற்றும் பங்கிலாப பற்றுச்சீட்டுகளும் 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் அடைந்த ரூபா 13.7 பில்லியனிலிருந்து 8.6 சதவீதம் அதிகரித்து ரூபா 14.9 பில்லியனை அடைந்தது. அதே சமயம் சமூக பாதுகாப்பு பங்களிப்புகளின் வருமானம் 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் அடைந்த ரூபா 17.4 பில்லியனிலிருந்து 13.9 சதவீதம் அதிகரித்து ரூபா 19.8 பில்லியனை அடைந்தது. அதேசமயம், வாடகை வருவாய் மூலமான வருவாயானது 2024 முதல் ஆறு மாதங்களில் 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் அடைந்த ரூபா 2.8 பில்லியனிலிருந்து 13.0 சதவீதம் அதிகரித்து ரூபா 3.2 பில்லியனை அடைந்தது. 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியில் சேகரிக்கப்பட்ட வரி அல்லாத வருவாய் 2024 ஆம் ஆண்டிற்கான ரூபா 287.0 பில்லியன் கொண்ட ஆண்டு மதிப்பீட்டின் 52.7 சதவிகிதமாகும்.

**அட்டவணை 2.8 : அரசாங்க வருமான மாறுபடுதலுக்கான பகுப்பாய்வு**

ரூபா. பில்லியன்

| விடயம் | 2023 சனவரி - ஜுன் | 2024 (வருடாந்த மதிப்பீடு) | 2024 சனவரி - ஜுன் (அ) | மாறுபடுதலுக்கான முக்கிய காரணங்கள் |
|---|---|---|---|---|
| வருமான வரிகள் | **384.5** | **1,080.0** | **447.3** | தேறிய வருமான வரி வருமானம் ஆண்டு மதிப்பீட்டுக்கு எதிராக 41.4 சதவிகிதம் ஆகும். இதற்கு முக்கியமான காரணங்கள் பின்வருமாறு:<br>- 2024ல் முதல் ஆறு மாதங்களுக்கும் 2023 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை மாற்றங்களின் முழு தாக்கத்தை எய்தப்பட்டமை;<br>- பொது மற்றும் தனியார் துறையினரின் ஊதிய உயர்வு ; மற்றும்<br>- பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக இயல்படைந்தமை. |
| பெறுமதி சேர் வரி | **332.7** | **1,400.0** | **616.9** | தேசிய பெறுமதி சேர் வரி வருவாய் ஆண்டு மதிப்பீட்டில் 44.1 சதவிகிதமாக இருந்தது.<br>இதனை அடைந்ததற்கான முக்கியமான காரணங்கள் பின்வருமாறு:<br>- அதிகரித்த பெறுமதி சேர் வரி விகிதம்;<br>- பெறுமதி சேர் வரி பதிவு வரம்பை குறைத்தமை ;<br>- பெரும்பாலான பெறுமதி சேர் வரி விலக்குகளை நீக்கியமை; மற்றும்<br>- மொத்த இறக்குமதி 6.4 சதவீதத்தால் அதிகரித்தமை. |
| உற்பத்தித் தீர்வை மற்றும் மது வரி | **198.0** | **545.0** | **282.3** | ஆண்டு மதிப்பீட்டிற்கு எதிராக உற்பத்தித் தீர்வை மற்றும் மது வரியிலிருந்து தேசிய வருவாய் 51.8 வீதமாகும். இதற்கான முக்கியமாக காரணமாக இருப்பது:<br>- அனைத்து வகையான பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதி மீதான உற்பத்தித் தீர்வையின் நிகர அதிகரிப்பு காரணமாக பெற்ரோலிய பொருட்கள் மீதான உற்பத்தித் தீர்வை வருவாய் அதிகரிப்பு மற்றும் பெற்றோல் மற்றும் பெற்றோலிய இறக்குமதி 5.3 சதவிகிதம் அதிகரித்தமை.<br>- சில திட்டத்தின் கீழ் மோட்டார் வாகன இறக்குமதி அதிகரிப்புடன் மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தித் தீர்வை வருவாய் அதிகரிப்பு மற்றும் 2023 ஜுலை இல் நடைமுறைப்படுத்தப்பட்ட மதுபானத்தின் மீதான மது வரி விகித திருத்தங்களின் முழு தாக்கத்தை அடைந்ததால் மதுபானத்தின் மீதான மது வரியிலிருந்து வருவாய் அதிகரிப்பு, பணவீக்கத்திற்கான மது வரி அட்டவணைப்படுத்தல். |
| இறக்குமதித் தீர்வை | **31.6** | **175.0** | **48.8** | வரவு செலவு திட்ட மதிப்பீட்டுக்கு எதிராக தேசிய இறக்குமதி தீர்வை 27.9 சதவிகிதம் ஆகும். இதற்கான காரணம்:<br>– சுங்க இறக்குமதி தீர்வையினை மேல்நோக்கி திருத்தியதன் முழு தாக்கத்தின் தேற்றமாகும் மற்றும்<br>– 2024 முதல் ஆறு மாதங்களில் இறக்குமதி 6.4 சதவீதத்தினால் அதிகரித்தமை. |

ரூபா. பில்லியன்

| விடயம் | 2023 சனவரி - ஜுன் | 2024 (வருடாந்த மதிப்பீடு) | 2024 சனவரி - ஜுன் (அ) | மாறுபடுதலுக்கான முக்கிய காரணங்கள் |
|---|---|---|---|---|
| துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (பிஏஎல்) | 80.6 | 175.0 | 86.0 | ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 49.1 சதவீதத்தை அடைந்ததன் காரணம் :<br>— உப - கட்டணத்தை படிப்படியாக அகற்றுவதன் ஒரு பகுதியாக 2023 ஏப்ரல் 4 முதல் நடைமுறைக்கு வரும் மொத்த துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு பொறுப்புப் பொருட்கள் மீதான 20 சதவீத விலக்கு ; மற்றும்<br>— 2024 மார்ச் 29 முதல் நடைமுறைக்கு வரும் இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின விதிகளின்படி 3,117 பொருட்களுக்கு சலுகை விலைகளைப் பயன்படுத்தியமை மற்றும் சிங்கப்பூரில் இருந்து அத்தகைய பொருட்களை இறக்குமதி செய்யும் போது 595 பொருட்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டமை |
| விசேட பண்ட வரி அறவீடு | 25.7 | 95.0 | 45.5 | வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 47.9 வீதம் அடையப்பெற்றமைக்கான காரணம்<br>— சீனி மற்றும் உருளைக்கிழங்கு மீதான வரி விகிதங்கள் மேல்நோக்கி திருத்தப்பட்டமை ; மற்றும்<br>— முக்கிய பண்டங்களின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு |
| சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு | 103.4 | 250.0 | 119.3 | சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரியிலிருந்து வருவாய் சேகரிப்பு ஆண்டு மதிப்பீட்டில் 47.7 சதவீதத்தை எட்டியுள்ளது. இதற்கான காரணம்<br>— சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரிக்கு பொருந்தக்கூடிய பதிவு வரம்பு 2024 சனவரி 1 முதல் ஆண்டுக்கு ரூபா 120 மில்லியனிலிருந்து ஆண்டுக்கு ரூபா 60 மில்லியன் ஆகக் குறைக்கப்பட்டதன் விளைவாக வரி செலுத்துவோர் அதிகரித்தமை ; மற்றும்<br>— 2024 இன் முதல் ஆறு மாதங்களில் அதிகரித்த இறக்குமதியின் தாக்கம் |
| இதர வரிகள் | 42.3 | 100.0 | 63.2 | இதர வரிகளின் வருவாய் 2024 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டில் 63.2 ஆக இருந்தது. இதற்கான காரணம்<br>— இறக்குமதி அதிகரிப்பின் காரணமாக செஸ் வரி 63.2 சதவீதத்தினாலும்<br>— தொலைத்தொடர்பு வரி 47.6 சதவீதத்தினாலும் ; மற்றும்<br>— இதர வரிகள் 76.3 சதவீதத்தினாலும் அதிகரித்தது. |
| வரியற்ற வருமானம் | 116.0 | 287.0 | 151.3 | 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் வரி அல்லாத வருவாய் 2024 ஆண்டு மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் 52.7 சதவீதமாக எட்டியுள்ளது.<br>வட்டி வருமானம், வாடகை, அபராதம், கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகள் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களிருந்தான இலாபம் மற்றும் பங்கிலாபம் ஆகியவற்றின் அதிகரித்த வருவாய் செயல்திறன் காரணமாகும். |
| **மொத்தம்** | **1314.9** | **4,107.0** | **1860.0** | |

*அரசிறை கொள்கைத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்டது*

*(அ) தற்காலிகமானது*

கட்டம் 2.1 | முக்கிய அரசிறை நடவடிக்கைகள்: 2024 சனவரி - செப்டெம்பர்

| பயன்வலு திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **வருமான வரி- 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள்** | |
| 01.04.2024 | 21.03.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2376/25<br>- அரசாங்க நிறுவனங்கள் உட்பட தனிநபர்களால் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு கிரமமான முளயின் அடிப்படையில் பகிரப்பட வேண்டிய தகவல்களை விதித்துரைப்பதற்கு. |
| **2010 இன் 17 ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம்** | |
| 12.01.2024 | 12.01.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2366/33<br>- 2022 ஆம் ஆண்டின் சீட்டாட்டத் தொழில் உரிம ஒழுங்குவிதி இல. 01 இன் பிரிவு 05 ஐ பதிலிடுவதோடு அதில் கொடுக்கப்பட்டுள்ள உரிமக் கட்டணம் மற்றும் உரிமம் புதுப்பித்தல் கட்டணக் கட்டமைப்புகளை திருத்தும் அட்டவணை 11 இனை இணைப்பதற்கும். |
| 02.02.2024 | 02.02.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2369/42<br>- ஒழுங்குவிதியின் அட்டவணை 11 இல் கொடுக்கப்பட்டுள்ள உரிமக் கட்டணங்கள் மற்றும் உரிமம் புதுப்பித்தல் கட்டணங்களுடன் தொடர்புடைய முதலீட்டு அளவுகோல்களைத் திருத்துவதற்கு. |
| 22.04.2024 | 22.04.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2381/16<br>- 2024 சனவரி 12 தேதியிட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2366/33 மற்றும் 2024 பெப்ரவரி 02 தேதியிட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2369/42 ஆகியவற்றில் உள்ள சிங்கள மொழிபெயர்ப்பு பிழைகளை திருத்துவதற்கு. |
| 29.05.2024 | 29.05.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2386/09<br>- ஒழுங்குவிதியின் அட்டவணை 11 இல் கொடுக்கப்பட்டுள்ள உரிமக் கட்டணங்கள் மற்றும் உரிமம் புதுப்பித்தல் கட்டணங்களுடன் தொடர்புடைய முதலீட்டு அளவுகோல்களைத் திருத்துவதற்கு. |
| **சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு – 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டுச் சட்டம்** | |
| 01.01.2024 | 2024 இன் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி (திருத்தம்) சட்ட இல.15<br>- சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரிக்கு பொருந்தும் வகையில் பதிவு வரையறையினை ஆண்டுக்கு ரூபா 120 மில்லியனிலிருந்து ஆண்டுக்கு ரூபா 60 மில்லியனிற்கு குறைப்பதற்கு |
| **பெறுமதி சேர் வரி – 2002 ஆம் ஆண்டின 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம்** | |
| 01.01.2024 | 19.12.2023 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2363/22<br>- பெறுமதி சேர் வரியை 15 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக உயர்த்துவதற்கு. |
| 01.01.2024 | 2023 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்தம்) சட்டம்<br>- முக்கிய பொருட்களுக்கு பொருந்தக்கூடிய பெரும்பாலான **பெறுமதி சேர் வரி** விலக்குகளை அகற்றுவதற்கு. |
| 01.01.2024 | 2024 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்தம்) சட்டம்<br>- பெறுமதி சேர் வரி பதிவு வரையறையினை ஆண்டுக்கு ரூபா 80 மில்லியனிலிருந்து ஆண்டுக்கு ரூபா 60 மில்லியனிற்கு குறைப்பதற்கு |
| **உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) வரி - 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்** | |
| 01.01.2024 | 31.12.2023 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2364/36<br>- அலகு விகிதங்கள் கொண்ட அனைத்து உற்பத்தித் தீர்வைகளையும் ஒரு குறியீட்டு அடிப்படையில் 14 சதவிகிதத்தினால் திருத்தவும் மற்றும் ஒரு லீட்டர் பெற்ரோலின் மீதான உற்பத்தித் தீர்வையை 5 ரூபாயினாலும், டீசலினை லீட்டருக்கு 6 ரூபாயினாலும் குறைப்பதற்கு |
| **மதுவரிக் (கட்டளைச் சட்டம்) – மதுவரிக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 52)** | |
| 01.01.2024 | மது வரி அறிவித்தல் இல.04/2023 (31.12.2023 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2364 /35)<br>- மது வரிக்கான வருடாந்த பணவீக்க சீராக்கலினை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் அனைத்து வகையான மதுபானங்கள் மீதான மது வரிகளை 14 சதவீதம் உயர்த்துவதற்கு. |
| 12.01.2024 | மது வரி அறிவித்தல் இல.01/2024 (12.01.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2366 /38)<br>- வருடாந்த மது உரிமக் கட்டணங்களைத் திருத்துவதற்கு. |
| 12.01.2024 | மது வரி அறிவித்தல் இல.02/2024 (12.01.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2366 /39)<br>- 902 ஆம் இலக்க மது வரி அறிவித்தலிலுள்ள விதிகளை திருத்துவதற்கு. |
| 01.02.2024 | மது வரி அறிவித்தல் இல. 03/2024 (01.02.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2369/32)<br>- வருடாந்த மது உரிமக் கட்டணங்களைத் திருத்துவதற்கும் ஒருநேர தொழில் நுழைவுக் கட்டணத்தை அறிமுகப்படுத்துவதற்கும். |

கட்டம் 2.1 | முக்கிய அரசிறை நடவடிக்கைகள்: சனவரி - யூன் 2024 (தொடர்ச்சி)

| பயன்வலு திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **13.08.2024** | மது வரி அறிவித்தல் இல. 05/2024 (13.08.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2397/22)<br>- 666 ஆம் இலக்க மது வரி அறிவித்தலிலுள்ள விதிகளை திருத்துவதற்கு. |
| **துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு – 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடுச் சட்டம்.** | |
| **01.01.2024** | 31.12.2023 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2364/37<br>- 2023 வரவுசெலவுத் திட்ட முன்மொழிவு இல. 34.6 (உப கட்டணங்களை படிப்படியாக நீக்குதல்) இன் பிரகாரம் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டினை ஐந்து (05) ஆண்டுகளுக்குள் முழுமையாக நீக்க வேண்டியதால் பெற்ரோல், டீசல் மற்றும் உரங்கள் உள்ளிட்ட 26 அத்தியாவசியப் பொருட்களுக்கு துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டினை விலக்கு அளிப்பதற்கு, |
| **29.03.2024** | 28.03.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2377/39<br>- இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின விதிகளின்படி, 3,117 பொருட்களுக்கு சலுகைக் கட்டணங்களைப் பயன்படுத்துதல் மற்றும் சிங்கப்பூரில் இருந்து அத்தகைய பொருட்களை இறக்குமதி செய்யும் போது 595 பொருட்களுக்கு விலக்கு அளித்தல். |
| **செஸ் வரி – 1979 ஆம் ஆண்டின் 40 இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்** | |
| **06.01.2024** | 04.01.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2365/50<br>- இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் பிரகாரம் செஸ் வரி தொடர்பான கட்டண தாராளமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தை வெளியிடுவதற்கு. |
| **06.09.2024** | 05.09.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2400/25<br>- 26.08.2024 ஆந் திகதிய இல. 24/1709/631/026-1 மற்றும் 12.08.2024 ஆந் திகதிய இல. 24/1541/622/002-11 அமைச்சரவைத் தீர்மானங்களுக்கமைய செஸ் வரியை திருத்துவதற்கு |
| **வரி அல்லாத (கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகள்) – 2021 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்** | |
| **01.02.2024** | 12.01.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2366/34<br>- சந்தை இடைத்தரகர்கள் மற்றும் சந்தை நிறுவனங்களுக்காக பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் வசூலிக்கப்படும் கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகளை மறுபரிசீலனை செய்வதற்காக. |
| **சுங்க இறக்குமதி தீர்வை - 1962 ஆம் ஆண்டு 19 இலக்க வருமான பாதுகாப்புச் சட்டம்** | |
| **06.01.2024** | **06/2023** ஆம் **இலக்க வருமான பாதுகாப்புச் சட்டம் (04.01.2024** இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2365/51)<br>- இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் 1,222 கட்டண வரிகளில் சுங்க இறக்குமதி தீர்வையின் சுங்கவரி தாராளமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் வகை "6" இன் கீழ் ஆறு வருடாந்த தவணைகளில் இரண்டாவது தவணையை நீக்குவதற்கு |
| **விசேட வியாபார பண்ட அறவீடு – 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபார பண்ட அறவீட்டுச் சட்டம்** | |
| **02.01.2024** | 02.01.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2365/04<br>- 02.01.2024 முதல் 21.01.2024 வரை அமுலுக்கு வரும் வகையில் அரிசி இறக்குமதியில் ஒரு கிலோவுக்கு ரூபா 64.00 தீர்வை விலக்கு அளிப்பதற்கு |
| **08.01.2024** | 07.01.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2365/84<br>- 2024 டிசம்பர் 31 வரை உருளைக்கிழங்கு இறக்குமதிக்கான விசேட வியாபார பண்ட வரியைத் தொடர்வதற்கு. |
| **20.02.2024** | 19.02.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2372/06<br>சோளம், உளுந்து மற்றும் பச்சைப்பயறு இறக்குமதியின் மீதான நடைமுறையில் உள்ள விசேட வியாபார பண்ட அறவீட்டினை செல்லுபடியாகும் காலத்தை நீடிக்கவும், அதேசமயம் கௌபி மற்றும் குரக்கன் மீதான விசேட வியாபார பண்ட வரி விகிதத்தை கிலோவிற்கு ரூபா.70.00 இலிருந்து ரூபா 300.00 விற்கு அதிகரிப்பதற்கும் |
| **02.03.2024** | 01.03.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2373/42<br>– 2024 ஏப்ரல் 11 வரை ரமலான் பண்டிகைக் காலத்தைக் கருத்தில் கொண்டு பேரிச்சம்பழம் இறக்குமதிக்கு ஒரு கிலோவுக்கு ரூ.199 வரி விலக்கு அளிப்பதற்காக. |
| **27.03.2024** | 26.03.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2377/17<br>- 2024 ஏப்ரல் 30 பண்டிகைக் காலத்தைக் கருத்தில் கொண்டு 01 கிலோ ரோஜா வெங்காயத்தின் இறக்குமதிக்கு ரூபா10 என்ற சலுகை விசேட பண்ட வரி விகிதத்தைப் பயன்படுத்தவும், 02.01.2024 முதல் 21.01.2024 வரையிலான காலக்கட்டத்தில் ஒரு கிலோ அரிசி இறக்குமதிக்கு ரூபா 64 வரி விலக்கினை நீடிக்கவும் |

கட்டம் 2.1 I முக்கிய அரசிறை நடவடிக்கைகள்: சனவரி - யூன் 2024 (தொடர்ச்சி)

| பயன்வலு திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **18.05.2024** | 17.05.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2384/31<br>- 34 பொருட்களுக்கு விதிக்கப்பட்ட வி.வி.ப. அறவீட்டின் செல்லுபடியாகும் காலத்தை மேலும் ஒரு வருட காலத்திற்கு டிசம்பர் 31, 2024 வரை நீடிப்பதற்கு. |
| **31.07.2024** | 31.07.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2395/32<br>- 6 பொருட்களின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கும் மற்றும் மருந்தாக்கல் தொழில்துறைக்கான உப்பு இறக்குமதி வரிவிலக்கினை டிசம்பர் 31 வரை தொடர்வதற்கு. |
| **03.10.2024** | 02.10.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2404/19<br>- உள்ளூர் உற்பத்தியின் அறுவடை காலத்தை கருத்திற் கொண்டு உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான விசேட வி.வி.ப. அறவீட்டினை ரூபா 60.00 ஆகவும் பெரிய வெங்காயத்திற்கான வி.வி.ப. அறவீட்டினை ரூபா 30.00 ஆகவும் உயர்த்துவதற்கு. |
| **இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள்- 1969 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) சட்டம்** | |
| **11.01.2024** | 2024 ஆம் ஆண்டு 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (11.01.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2366/19<br>- பல அரச நிறுவனங்களின் குறிப்பிட்ட தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதித்தல் |
| **07.02.2024** | 2024 ஆம் ஆண்டின 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (07.02.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல 2370/15).<br>- 2024 ஆம் ஆண்டின 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளினால் வெளியிடப்பட்ட (2312/78 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) ஒழுங்குவிதிகள் இலக்கம் 12(அ) ஐ திருத்துவதன் மூலம் வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட காலத்தை நீடிக்க.* |
| **19.02.2024** | 2024 ஆம் ஆண்டு 03 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (19.02.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல 2372/04)<br>- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் பதனிடல் மற்றும் மீள்ஏற்றுமதி நோக்கங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட வாசனை திரவியங்களை (எ.கா. மிளகு, ஜாதிக்காய் மற்றும் மசாலா போன்றவை) இறக்குமதி செய்ய அனுமதிப்பதற்கு.** |
| **29.02.2024** | 2024 ஆம் ஆண்டு 04 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (28.02.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2373/28)<br>- டிபி மற்றும் டிஏ கட்டண விதிமுறைகளின் முன் ஒப்புதல் தேவையுடன் தொடர்புடைய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்குமுறையின் ஒழுங்குவிதி இல.06 இனை நீக்குவதற்கு, |
| **19.03.2024** | 2024 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (19.03.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2376/14)<br>- பல அரசு நிறுவனங்களின் குறித்துரைத்த தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதித்தல். |
| **08.04.2024** | 2024 ஆம் ஆண்டு 06 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (08.04.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2379/03)<br>- ஒழுங்குவிதிகளின் அட்டவணை ரோமன் இல.5 இல் வகைப்படுத்தப்பட்டு பட்டியலிடப்பட்ட மொத்த அளவிளான 2,000 மெட்ரிக் தொன் உளுந்து இறக்குமதி தொடர்பான இறக்குமதி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதியை (ஐசிஎல்) வெளியிடுவதற்காக |
| **17.05.2024** | 2024 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (17.05.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2384/34)<br>- தற்காலிகமாக இறக்குமதி தடைசெய்யப்பட்டுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு சுற்றுலாத் துறைக்கு அனுமதி வழங்குவதற்கு. |
| **17.05.2024** | 1969 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான தரப்படுத்தல் மற்றும் தரக்கட்டுப்பாடு ஒழுங்கு விதிகள் (17.05.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2384/35)<br>- தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்வதற்கான இலங்கை தரநிர்ணயங்களை நிர்ணயிப்பதற்கு. |

| பயன்வலு திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **06.06.2024** | 2024 ஆம் ஆண்டு 08 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (06.06.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2387/35)<br>- அமைச்சரவை தீர்மானத்துக்கமைய அனுமதியளிக்கப்பட்ட நிறுவனங்களின் மீள் ஏற்றுமதி செயன்முறைக்காக விசேட இறக்குமதி அனுமதிப்பத்திர ஒழுங்குவிதி இலக்கம் 01/2023 (01/01/2023 இன் வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2312/77) இன் அட்டவணை 5 இல் பட்டியல்படுத்தப்பட்டுள்ள பாக்கு விதைகளை இறக்குமதி செய்வதை அனுமதிப்பதற்காக.** |
| **28.06.2024** | 2024 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (28.06.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2390/19)<br>- தேர்ந்தெடுக்கப்பட்ட உண்ணக்கூடிய தானியங்களுக்கான இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திர தேவைப்பாட்டை நீக்குவதற்கும், ஆளில்லா விமானங்களுக்கான இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திர தேவைப்பாட்டை விதிப்பதற்கும். |
| **18.07.2024** | 2024 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (18.07.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2393/36)<br>- அமைச்சரவை தீர்மானத்துக்கமைய அனுமதியளிக்கப்பட்ட நிறுவனங்களின் மீள் ஏற்றுமதி செயன்முறைக்காக விசேட இறக்குமதி அனுமதிப்பத்திர ஒழுங்குவிதி இலக்கம் 01/2023 (01/01/2023 இன் வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2312/77) இன் அட்டவணை 5 இல் பட்டியல்படுத்தப்பட்டுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட வாசனைத் திரவியங்கள் (உ+ம் - மிளகு, சாதிக்காய், பிற.) இறக்குமதி செய்வதை அனுமதிப்பதற்காக. |
| **21.08.2024** | 2024 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (21.08.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2398/18)<br>- 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நபர்களை திறந்த கணக்கு கொடுப்பனவு முறைமையின் கீழ் பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதியளிப்பதற்கு. |
| **11.09.2024** | 2024 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (11.09.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2401/21)<br>- அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைவாக இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் செயற்படும் மோட்டார் வாகன பொருத்தீட்டு திட்டங்களுக்கா புத்தம் புதிய பகுதியளவு பொருத்தீடு செய்யப்பட்ட பாகங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிப்பதற்கு. |
| **புறப்படுகை அறவீடு – 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்டம்** | |
| **01.02.2024** | 01.02.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2369/27<br>- கொழும்பு சர்வதேச விமான நிலையம் மற்றும் கொழும்பு சர்வதேச விமான நிலையத்திலிருந்து செயல்படத் தொடங்கும் விமானங்களுக்கு விமானம் மூலம் இலங்கையை விட்டு வெளியேறும் நபருக்கு 60 அமெரிக்க டொலர்களின் பொருந்தக்கூடிய புறப்படுகை அறவீட்டிலிருந்து 30 அமெரிக்க டொலர் சலுகை விகிதத்திதை, ஒரு வருடத்திற்கு நீடிப்பு வழங்குவதற்காக |
| **07.03.2024** | 06.03.2024 வர்த்தமானி அறிவிப்பு இல. 2374/19<br>- படகு மூலம் இலங்கையை விட்டு வெளியேறும் நபருக்கு எம்பார்கேசன் வரியில் அமெரிக்க டொலர் 05 மற்றும் கப்பல் மூலம் இலங்கையை விட்டு வெளியேறும் நபருக்கு அமெரிக்க டொலர் 20 என்ற சலுகை விகிதத்தை 2024 மார்ச் 07 முதல் 2026 டிசம்பர் 31 வரை மூன்று வருட காலத்திற்கு 60 அமெரிக்க டொலர்கள் பொருந்தக்கூடிய வரியிலிருந்து வழங்குதல். |
| **மோட்டார் வாகனத்தின் மீதான சொகுசு வரி – 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டம்** | |
| **24.01.2024** | 24.01.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2368/24<br>- 2023.02.10 இன் அதிவிசேட வர்த்தமானி இல. 2318/53 இல் வெளியிடப்பட்ட, பணம் அனுப்புதல், நாணயக் கடிதங்களைத் திறப்பது மற்றும் வாகனங்களைப் பதிவு செய்வதற்கான பரிசீலனை காலத்தை மேலும் நீடிப்பதற்கு (புலம்பெயர் தொழிலாளர்களுக்கு ரூபா 6 மில்லியனிலிருந்து ரூபா 12 மில்லியன் வரை முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் வாகனல்களிற்கு வரம்பினை அதிகரித்தல்) |

* தற்போது பயன்பாட்டிலில்லை.

** தற்போது செல்லுபடியாகாது.

### 2.3 அரசாங்க செலவினம்

2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதத்துடன் ஒப்பிடும்போது ரூபா 2,559.6 பில்லியனாக இருந்த மொத்த அரசாங்கச் செலவினம், 2024 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியில் 3.8 சதவீதமாக குறைவடைந்து ரூபா 2,463.3 பில்லியனாக இருந்தது. 2023 இன் முதல் ஆறு மாதக் காலப்பகுதியில் ரூபா 2,325.5 பில்லியனாகக் காணப்பட்ட மீண்டெழும் செலவினம் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 4.6 சதவிகிதத்தினால் ரூபா 2,218.4 பில்லியனுக்கு குறைவடைந்துள்ளது. இதற்கான பிரதான காரணம் வட்டி செலுத்தல் மீதான செலவினம் சரிவடைந்தமையாகும். 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் ரூபா 234.1 பில்லியனாக இருந்த மூலதனச் செலவினம் மற்றும் நிகரக் கடன் 2024 ஆம் ஆண்டின் அதே காலப் பகுதியில் ரூபா 244.9 பில்லியனாக 4.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

**அட்டவணை 2.9 : 2024 சனவரி முதல் யூன் வரையில் அரசாங்க செலவினங்களின் செயலாற்றுகை**

ரூபா.மில்லியன்

| விடயம் | 2023 | 2024 |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **2,325,541** | **2,218,442** |
| சம்பளம் | 459,991 | 480,326 |
| ஓய்வூதியம் | 169,822 | 188,086 |
| வட்டிக் கொடுப்பனவு | 1,273,291 | 1,142,105 |
| ஏனையவை | 19,643 | 407,925 |
| **மூலதன செலவினம் மற்றும் தேறிய கடன்** | **234,078** | **244,863** |
| **மொத்தம்** | **2,559,619** | **2,463,305** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

### வட்டிக் கொடுப்பனவுகள்

2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதக் காலப்பகுதியில் உள்ள ரூபா 1,273.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் உட்பட வட்டி செலுத்துதலுக்கான மொத்தச் செலவு 10.3 சதவீதம் குறைந்து ரூபா 1,142.1 பில்லியனாக வீழ்ச்சியடைந்துள்ளது. உள்நாட்டு கடனுக்கான வட்டிக் கொடுப்பனவுகள் 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் ரூபா 1,219.2 பில்லியனாக இருந்து, 11.9 சதவீதம் குறைந்து 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 1,073.7 பில்லியனாக குறைவடைந்தது. எவ்வாறாயினும், வெளிநாட்டுக் கடனுக்கான வட்டி செலுத்துதல் 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது ரூபா 54.0 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 26.4 சதவீதம் அதிகரித்து ரூபா 68.4 பில்லியனாக உயர்வடைந்துள்ளது.

### சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்கள்

மாகாண சபைகள் உட்பட அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஊதியத்திற்கான செலவு 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் ரூபா 460.0 பில்லியனாக இருந்து, 2024 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியில் 4.4 சதவீதத்தால் ரூபா 480.3 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது. 2024 சனவரி முதல் அமுலான அதிகரித்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு இந்த அதிகரிப்புக்கு பிரதானமாக காரணமாகும்.

யாதேனும் நிலுவைத் தொகையை நீக்கும் பணிக்கொடையினை சரியான நேரத்தில் செலுத்தியதன் காரணமாக ஓய்வூதியங்களுக்கான செலவினம் 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் காணப்பட்ட ரூபா 169.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 10.8 சதவீதம் அதிகரித்து ரூபா 188.1 பில்லியனாக இருந்தது.

### நலன்புரிச் செலவுகள்

2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களின் போது, அஸ்வெசும குடும்ப மானியங்கள், முதியோருக்கான கொடுப்பனவு, சிறுநீரக நோயாளிகளுக்கு நிதியுதவி கொடுப்பனவு, மாற்றுத் மாற்றுதிறனாளிகளுக்கு உதவி, குறைந்த வருமானம் ஈட்டுவோரக்கான உதவித்தொகை, ஊனமுற்ற படைவீரர்களுக்கான உதவித்தொகை, கர்ப்பிணி தாய்மார்களுக்கான உணவு பொதிகள், உர மானியம் உள்ளிட்ட அபிவிருத்தி உதவிகள் மற்றும் பாடசாலை சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் உள்ளிட்ட சமூக நலன் மற்றும் சமூகப் பாதுகாப்பிற்காக அரசாங்கம் ரூபா 401.4 பில்லியனினை செலவிட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட அஸ்வெசும நிதிய மானியங்களுக்கான சமூகப் பாதுகாப்புச் செலவுகள் ரூபா 73.3 பில்லியனாகும். 2024 ஆம் ஆண்டிற்கான அஸ்வெசும மற்றும் பிற வகைப்பட்ட வீட்டு பண மானியங்களுக்கான செலவினங்களுக்காக ரூபா 205 பில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் அரசாங்க மருத்துவமனைகளுக்கான மருத்துவப் பொருட்கள் உட்பட சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து திட்டங்கள் மீதான அரசாங்க செலவினம் ரூபா 29.0 பில்லியனாகும். 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் மாணவர்களுக்கான இலவச பாடப்புத்தகங்கள், சீருடைகள் மற்றும் காலணிகள் போன்ற கல்விக்கான நலன்புரி திட்டங்களுக்காக ரூபா 4.6 பில்லியன் செலவானது. இரசாயன உரத்துக்கான அரசாங்கத்தின் மானியத்திற்கான செலவீனமானது வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் ரூபா 20.4 பில்லியன் ரூபாவாகும் என்பதை கவனத்திற் கொள்வது முக்கியமானதாகும்.

அட்டவணை 2.10 : பிரதான நலன்புரி செலவினம்: 2024 சனவரி – யூன்

ரூபா.மில்லியன்

| நிகழ்ச்சித்திட்டம் | 2023 (தற்காலிகமானது) | 2024 (தற்காலிகமானது) |
|---|---|---|
| **சமூக நலன்புரி** | | |
| குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கான உதவித்தொகை | 69,383 | 64,079 |
| குறை வருமான அங்கவீனமுற்றவர்களுக்கான ஒத்துழைப்பு | 2,293 | 2,514 |
| வயோதிபர்களுக்கான நிதி ஒத்துழைப்பு | 9,929 | 5,527 |
| சிறுநீரக நோயாளர்களுக்கான நிதி ஒத்துழைப்பு | 1,239 | 1,183 |
| “ரணவிரு மாபிய ரக்கவரண” கொடுப்பனவு | 1,131 | 1,084 |
| முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு | 129 | 111 |
| அரச ஊழியர்களுக்கான சொத்துக் கடன் வட்டி | 997 | 855 |
| "சுவசரிய" – 1990 இலவச அம்பியுலன்ஸ் சேவை | 1,167 | 591 |
| ஏனையவை | 1,874 | 1,002 |
| **சமூகப் பாதுகாப்பு** | | |
| ஓய்வூதியம் | 169,822 | 188,085 |
| இறந்த மற்றும் காயமடைந்த வீரர்களுக்கான இழப்பீடு | 20,804 | 23,338 |
| ஓய்வூதியர்களுக்கான அக்ரஹார காப்புறுதித் திட்டம் | 450 | 460 |
| பாடசாலை மாணவர்களுக்கான சுகாதாரக் காப்பீடு (Suraksha) | 697 | – |
| விவசாயிகளுக்கான ஓய்வூதியம் | 2,173 | 2,434 |
| ஏனையவை | 117 | 107 |
| **சுகாதார மற்றும் போசாக்கு** | | |
| அரசாங்க வைத்தியசாலைகளுக்கான மருத்துவ வழங்கல்கள் (ஆயுர்வேத உள்ளடங்களாக) | 58,731 | 28,961 |
| திரிபோஷா நிகழ்ச்சித்திட்டம் | 252 | 978 |
| கர்ப்பிணி தாய்மார்களுக்கான போசாக்குணவு பொதி | 931 | 2,790 |
| பாடசாலை போசாக்குணவு நிகழ்ச்சித்திட்டம் | 2,547 | 6,349 |
| முன்பள்ளி மாணவர்களுக்கான காலை உணவு | 17 | 344 |
| ஏனையவை | – | – |
| **கல்வி** | | |
| பாடசாலை பாடப்புத்தகங்கள் | 11,757 | 3,364 |
| பாடசாலை சீருடைகள் | 1,612 | 1,034 |
| கஷ்ட பாடசாலைகளின் மாணவர்களுக்கான பாதணிகள் | – | 200 |
| புலமைப்பரிசில் - தரம் 5 மாணவர்கள் | 328 | 418 |
| மஹாபொல மற்றும் மாணவர் உதவு தொகைகள் | 888 | 1,250 |
| அரச பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற முடியாத மாணவர்களுக்கான கடன் திட்டம் | 383 | 812 |
| ஏனையவை | 279 | 134 |
| **அபிவிருத்தி உதவி** | | |
| உரம் மற்றும் பயிர் மானியம் | 32,208 | 21,061 |
| மூத்த குடிமக்கள் வங்கிக் கணக்குகளில் வட்டி வேறுபாடு | – | 20,000 |
| சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக நிறுவனங்களின் கடன் வரிசை | 4,973 | 12,653 |
| நகர அபிவிருத்தித் திட்ட வீட்டு மானியம் | 8,852 | 3,551 |
| ஏனையவை | 156 | 337 |
| **ஏனைய மானியங்கள்** | | |
| இ.போ.ச வருமானமீட்டாத பாதைகளுக்கான மானியம் மற்றும் படைவீரர்களுக்கு பருவச்சீட்டு மற்றும் பேரூந்து அனுமதிப்பத்திரங்கள் | 12,156 | 5,829 |
| **மொத்தம்** | **418,275** | **401,435** |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## துறைரீதியான செலவினங்கள்

### பாடசாலைக் கல்வி

2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களின் போது, பாடசாலைக் கல்விக்காக ரூபா 160.5 பில்லியன் செலவிடப்பட்டதுடன், இதில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவு முறையே ரூபா 157.5 பில்லியன் மற்றும் ரூபா 3.0 பில்லியன் ஆகும்.

பாடசாலை மாணவர்களுக்கான ஊட்டச்சத்து உணவுத் நிகழ்ச்சித்திட்டம், பாடசாலை பாடப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுச்சான சீருடைகள் வழங்குதல் மற்றும் கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களுக்கு பாதணிகள் வழங்குதல் போன்ற நலத் திட்டங்களுக்காக ரூபா 11.4 பில்லியனினை செலவளித்து முதலீடு செய்வதனை அரசு தொடர்ந்துள்ளது. எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், இந்த நலத்திட்டங்களுக்கான செலவினம் 30 சதவீதம் குறைவடைந்துள்ளது.

பாடசாலை மாணவர்களின் போசாக்கு நிலையை மேம்படுத்துவதற்காக, ஒரு மாணவருக்கு சத்தான உணவுக்கான தினசரி கொடுப்பனவை 85 ரூபாயில் இருந்து ஒரு மாணவருக்கு 110 ரூபாயாக அரசாங்கம் உயர்த்தி, 2024 ஆம் ஆண்டில் முதல் ஆறு மாதங்களில 6.3 பில்லியன் ரூபாயை செலவிட்டுள்ளது.

ரூபா 3 பில்லியன் பெறுமதியான மூலதனச் செலவினமானது முக்கியமாக மாகாண கல்வித் துறை உட்பட பாடசாலைகளில் புனர்வாழ்வு / உட்கட்டமைப்பு மேம்பாட்டு அபிவிருத்திக்காக செலவிடப்பட்டது.

**அட்டவணை 2.11: பாடசாலைக் கல்வி தொடர்பான பிரதான செயற்பாட்டுச் செலவினம் : 2024 சனவரி – யூன்**

ரூபா.மில்லியன்

| விபரம் | 2023 சன-யூன் | 2024 சன-யூன் (தற்காலிகமானது) |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | | |
| பாடசாலை ஆசிரியர்கள், ஏனைய பதவியனருக்கான வேதனாதிகள் | 132,348 | 135,839 |
| தேசிய | 26,377 | 29,372 |
| மாகாண | 105,971 | 106,467 |
| நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் | 16,244 | 11,414 |
| பரீட்சை மதிப்பீடு | 1,466 | 2,361 |
| **மூலதனச் செலவினம்** | | |
| பாடசாலைகள் புனரமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 42 | 319 |
| ஆசிரிய அபிவிருத்தி | 19 | 29 |
| கல்வியில் விசேட அபிவிருத்தி சீர்திருத்தம் | 2,394 | - |
| மாகாணக் கல்வி | 1,402 | 820 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## உயர் கல்வி

2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதக் காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியில் பல்கலைக்கழகக் கல்விக்கான செலவு 0.4 வீதத்தால் ரூபா 37.9 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதக் காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் முதல் இதே காலப் பகுதியில் மீண்டெழும் செலவினம் 0.6 வீதத்தால் அதிகரித்து ரூபா 29.3 பில்லியனாக இருந்தது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் மூலதனச் செலவினம் 0.4 சதவீதத்தினால் குறைந்து ரூபா 8.6 பில்லியனாக காணப்பட்டது.

வேலைநிறுத்தம் முடிந்து ஜுலையில் சம்பளம் வழங்கப்பட்டதால், இரண்டு மாதங்களுக்கும் மேலாக நீடித்த கல்வி சாரா வேலைநிறுத்தத்தின் காரணமாக 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் பதிவான வளர்ச்சியை விட 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் மீண்டெழும் செலவினங்களின் வளர்ச்சி குறைவாக இருந்தது.

**அட்டவணை 2.12 : உயர் கல்வியின் பிரதான செயற்பாடுகளுக்கான செலவினம் : 2024 சனவரி – யூன்**

ரூபா.மில்லியன்

| விபரம் | 2023 | 2024 |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | | |
| பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களின் ஆள்சார் வேதனாதிகள் | 25,117 | 24,050 |
| மஹாபொல மற்றும் மாணவர் உதவு தொகைக் கொடுப்பனவு | 888 | 1,250 |
| **மூலதனச் செலவினம்** | | |
| உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி கருத்திட்டத்தினைத் துரிதப்படுத்தல் (உலக வங்கி) | 1,822 | 758 |
| விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப, மனிதவள அபிவிருத்தி கருத்திட்டம் (இ.அ/ஆசிய அபிவிருத்தி வங்கி) | 2,282 | 3,158 |
| வயம்ப பல்பலைக்கழக நகர அபிவிருத்தித் திட்டம் (இ.அ/ சவுதி) | 355 | 163 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற் கல்வி

2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் திறன் மேம்பாடு மற்றும் தொழிற்கல்விக்காக செலவிடப்பட்ட மொத்த செலவினம் ரூபா 4.2 பில்லியனாக இருந்தது. இதில் ரூபா 3.9 பில்லியன் மற்றும் ரூபா 293 மில்லியன் முறையே மீண்டெழும் மற்றும் மூலதனம் செலவினங்களுக்காக செலவிடப்பட்டது.

**அட்டவணை 2.13 : திறன் அபிவிருத்தி சார்ந்த பிரதான செயற்பாடுகள் மீதான செலவினம் : 2024 சனவரி – யூன்**

ரூபா.மில்லியன்

| விபரம் | 2023 சன - யூன் | 2024 சன - யூன் |
|---|---|---|
| நிபுனதா சிசு திரிய | 232 | 45 |
| திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (ஆ.அ.வ./உ.வ.) | 235 | - |
| 07 தொழில்நுட்ப மற்றும் பொறிமுறைத் தொழில்நுட்ப கல்லூரிகளின் நவீனமயமாக்கல் | 21 | 83 |
| கொள்திறன் மேம்பாடு கருத்திட்டம் இலங்கையின் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறிமுறைத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் பாடநெறிகளுக்கானது. (இலங்கை அரசாங்கம்/ KOICA) | 81 | 4 |
| யூ லீட் (யூஎஸ்ஏஐடீ) | - | 3 |
| இலங்கையில் தொழிற்பயிற்சி (ஜேர்மனி) | - | 7 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## விஞ்ஞானம் மற்றும் கண்டுபிடிப்புகள்

2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், விஞ்ஞானம் மற்றும் கண்டுபிடிப்புகளுக்குச் செலவிடப்பட்ட மொத்தச் செலவு ரூபா 654 மில்லியனாக இருந்தது, இதில் ரூபா 529 மில்லியன் மற்றும் ரூபா 125 மில்லியன் முறையே மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காகச் செலவிடப்பட்டது.

**அட்டவணை 2.14: 2024 சனவரி முதல் யூன் வரையான பிராதன விஞ்ஞானம் மற்றும் புத்தாக்க செயற்பாடுகளுக்கான செலவினம்**

ரூபா.மில்லியன்

| விபரம் | 2023 சன - யூன் | 2024 சன - யூன் |
|---|---|---|
| சிதைந்த மண்ணை மேம்படுத்தல் | - | 2 |
| அறிவியல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 3 | - |
| இருதரப்பு மற்றும் பல்தரப்பு கூட்டமைப்பின் கீழ் இணைந்த அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் | - | 2 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திற்கான முதலீட்டு கட்டமைப்பை செயற்படுத்தல் | - | 1 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## சுகாதாரம்

2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதக் காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியில் மேலைத்தேய மற்றும் சுதேச மருத்துவத் துறைகள் உட்பட மாகாண மற்றும் மத்திய அரசின் சுகாதாரச் செலவினங்களுக்கான மொத்த அரசாங்கச் செலவினம் 9 வீதத்தால் ரூபா 168.7 பில்லியனுக்கு குறைவடைந்துள்ளது. மொத்த சுகாதாரச் செலவினங்களில், மீண்டெழும் செலவு ரூபா 158.1 பில்லியனாகவும், மூலதன செலவு ரூபா 10.6 பில்லியனாகவும் இருந்தது. மீண்டெழும் செலவினத்தில் மருந்து பொருட்கள், சத்திரசிகிச்சைப் பொருட்கள் மற்றும் ஆய்வுகூடப் பொருட்கள் அடங்கலாக மருத்துவப் பொருட்கள் விநியோகம் சம்பந்தமாக, ரூபா 29.0 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.15 : 2024 சனவரி முதல் யூன் வரை சுகாதாரத் துறையில் பிரதான செயற்பாடுகள் மீதான செலவினம்**

ரூபா.மில்லியன்

| விபரம் | 2023 சன - யூன் | 2024 (தற்காலிகமானது) |
|---|---|---|
| **மொத்த மீண்டெழும் செலவினம்** | 173,681 | 158,091 |
| சேவை வழங்கல் செலவினம் | 71,867 | 85,705 |
| அதில் மருத்துவ பணியாளர் மற்றும் ஆதரவு ஊழியர்கள் சம்பளங்கள் | 57,911 | 67,711 |
| மருத்துவத்திற்கான வழங்கல் | 58,730 | 28,961 |
| மாகாண சுகாதாரம் | 43,084 | 43,425 |

ரூபா.மில்லியன்

| விபரம் | 2023 சன - யூன் | 2024 (தற்காலிகமானது) |
|---|---|---|
| **அரச முதலீட்டுச் செலவினம்** | **10,967** | **10,569** |
| மருத்துவ உபகரணம் | 763 | 577 |
| சுகாதார முறைமை மேம்பாட்டுக் கருத்திட்டம் - ஆ.அ.வங்கி | 401 | 1254 |
| இலங்கை கொவிட் 19 அவசர பொறுப்பு மற்றும் சுகாதார முறைமை தயார்நிலைக் கருத்திட்டம் (உ.வ) | 214 | 844 |
| நிரல் அமைச்சு வைத்திய சாலைகளின் கீழ் அவசர சிகிச்சைப் பிரிவை மேம்படுத்தல் | 137 | 0 |
| உயர் சக்தி கதிரியக்கத்துடன் இலங்கையில் புற்று நோயாளர் களுக்கான உயர் தர கதிரியக்க சிகிச்சை ஏற்பாடு | 53 | 0 |
| தாதியர் பீடம்/ விடுதி நிர்மாணம் | 93 | 83 |
| ஏனைய மூலதன முதலீடு | 5,345 | 2,591 |
| மாகாண சுகாதார முதலீடு | 3,235 | 2,795 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## விவசாயம்

பெருந்தோட்டம், கால்நடைகள், மீன்பிடி மற்றும் காணி அபிவிருத்தி உள்ளிட்ட விவசாயத் துறைக்கான செலவினம் 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் காணப்பட்ட ரூபா 60.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் அதே காலப் பகுதியில் 11 சதவீதத்தினால் ரூபா 53.3 பில்லியனுக்கு சரிவடைந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் 2024 ஆம் ஆண்டில் ஹெக்டேயருக்கு உர மானியத்தை ரூபா. 20,000 இலிருந்து ரூபா 15,000 இற்கு குறைத்ததும் 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மானியங்கள் மற்றும் கடன் வரிகள் மூலம் பெறப்பட்ட உரத்திற்கான வரிகள் மற்றும் உரங்களுக்கான தொடர்புடைய செலவுகளின் கணக்கீடு செய்ததுமாகும். 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில மொத்த செலவினத்தொகையில், உர மானியத் திட்டத்திற்காக ரூபா 20.4 பில்லியனும், மீன்பிடி அபிவிருத்திக்காக ரூபா 1.9 பில்லியனும், பெருந்தோட்டத் துறை அபிவிருத்திக்காக ரூபா 1.0 பில்லியனும், காணி அபிவிருத்திக்காக ரூபா 760 மில்லியனும் பயிர் விவசாயத்திற்காக ரூபா 355 மில்லியனும் செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை கால்நடை அபிவிருத்தி மற்றும் விவசாய துறைக்கு தேவையான வசதிகளை வழங்க உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக செலவிடப்பட்டது.

### நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாடு

2024 இன் முதல் ஆறு மாதங்களில், பாதுகாப்பான குடிநீர் மற்றும் தரமான துப்புரவு சேவைகளை அணுகுவதை உறுதி செய்வதற்காக நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் மீதான முதலீடுகளை அரசாங்கம் தொடர்ந்தது. இந்த செலவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வங்கிகளில் இருந்து ரூபா 9.8 பில்லியன் செலவில் பெறப்பட்ட கடன்களுக்கான சேவையும் அடங்கும். மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக முறையே ரூபா 652 மில்லியன் மற்றும் ரூபா 9.1 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது. உற்பத்தி திறனை மேம்படுத்துதல், புதிய நீர் வழங்கல் திட்டங்களை நிறுவுதல் மற்றும் முழு மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதை உறுதிசெய்யும் கருத்திட்டப்பணிகளை விரைவுபடுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் திறன் மேம்பாடு மற்றும் விநியோக விரிவாக்க கருத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### வீதிகளும் பாலங்களும்

2024 இன் முதல் ஆறு மாதங்களில், வீதிகள் மற்றும் பாலங்களுக்கான செலவினம் ரூபா 95.1 பில்லியனாக இருந்தது, இது 2023 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 5 வீதம் குறைவாகும். 2024 இன் முதல் ஆறு மாதங்களில், தற்போதுள்ள வீதி வலையமைப்பைப் பராமரிப்பதற்கும், ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டங்களின் முக்கியமான செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கும், அவ்வாறான திட்டங்களால் மூடப்பட்ட வீதிகளை வாகனம் செல்லக்கூடிய மட்டத்திற்கு அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் மத்திய அதிவேகப் பாதையினை நிறைவு செய்வதற்கும் அரசாங்கம் அதிக முன்னுரிமை அளித்துள்ளது. மொத்தத் தொகையில், தேசிய மற்றும் கிராமப்புற வீதி மேம்பாட்டுக்காக ரூபா 25.7 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இதன் கீழ், ஒருங்கிணைந்த பாதை முதலீட்டுத் திட்டத்தின் (ஐ-ரோடு) மீதிப் பணிகளை நிறைவு செய்வதற்கு ரூபா 3.2 பில்லியன் செலவிடப்பட்டுள்ள அதே நேரத்தில் பிரதான சாலைகளை அணுகும் வகையில் 100,000 கி.மீ மாற்று பாதைகளை மேம்படுத்த ரூபா 9.1 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது. வீதி பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 7.2 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

மேலும், அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்திக்காக 20.6 பில்லியன் செலவிடப்பட்டது, பொத்துஹெர முதல் ரம்புக்கன வரையிலான மத்திய அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தித் திட்டத்திற்கு பெரும்பான்மையான நிதி கிடைத்துள்ளது. சாலை விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டுக்கான செலவு ரூபா 344 மில்லியன், வீதி மற்றும் மேம்பாலம் கட்டுமானத்திற்கான செலவு ரூ. 1.3 பில்லியன் ஆகும்.

மேலும், வீதி புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக உள்ளூர் வங்கிகளிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பெறப்பட்ட கடனுக்கான வட்டி மற்றும் மூலதனத் திருப்பிச் செலுத்தலுக்காக மொத்த செலவினமான சுமார் ரூபா 43.1 பில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.16 : 2024 சனவரி முதல் யூன் வரை பாதைகள் மற்றும் பாலங்கள் மீதான செலவினம்**

ரூபா.மில்லியன்

| | கருத்திட்டம்/நிகழ்ச்சித்திட்டம் | 2023 சன - யூன் | 2024 சன - யூன் (தற்காலிகமானது) |
|---|---|---|---|
| 1 | **அதிவேக பாதை அபிவிருத்தி** | **20,293** | **20,608** |
| | மத்திய அதிவேகப் பாதை கருத்திட்டம் | 14,582 | 14,427 |
| | கொழும்பு - இரத்தினபுரி - பெல்மதுல்ல அதிவேகப் பாதை | 16 | 1,787 |
| | புதிய களனி பாலத்திலிருந்து உயர்த்தப்பட்ட அத்துருகிரியவிற்கான அதிவேகப் பாதை | 13 | - |
| | துறைமுக அடைவு உயர்த்தப்பட்ட அதிவேகப்பாதை கருத்திட்டம் | 3,785 | 3,894 |
| | தெற்கு அதிவேக நெடுஞ்சாலை திட்டத்தின் விரிவாக்கம் | 1,897 | 500 |
| 2 | **நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி** | **26,410** | **25,727** |
| | பாதைகள் பராமரிப்பு மற்றும் மேம்பாடு | 2,280 | 7,192 |
| | கொழும்பு மாவட்ட பாதை அபிவிருத்தி கருத்திட்டம் | 592 | 792 |
| | தெற்கு பாதை இணைப்புக் கருத்திட்டம் | 316 | - |
| | ஒருங்கிணைந்த பாதை முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (ஐ பாதை) | 4,760 | 3,220 |
| | மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வீதிகள், பாலங்களை விரிவுபடுத்தல் மற்றும் மேம்படுத்தல் | 21 | - |
| | உள்ளடக்கிய இணைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் | 3,043 | 2,652 |
| | கண்டி பல்வகை போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டம் | 43 | 176 |
| | பிரதான பாதைகள் , அதிவேகப் பாதைகள் அடைவுக்கான மற்றும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான மாற்றுச்சாலைத் தொடர்பு அபிவிருத்தி | 12,644 | 9,095 |
| | ஏனைய நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி | 2,711 | 2,600 |
| 3 | **பாதைகள் விரிவாக்கல் மற்றும் மேம்பாடு** | **765** | **344** |
| 4 | **பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் நிர்மாணம்** | **1,182** | **1,257** |
| | தேசிய அதிவேகப் பாதைகளில் சேதமடைந்த பலவீனமான பாலங்களின் மீள்கட்டமைப்பு | 157 | 106 |

ரூபா.மில்லியன்

| | கருத்திட்டம்/நிகழ்ச்சித்திட்டம் | 2023 சன - யூன் | 2024 சன - யூன் (தற்காலிகமானது) |
|---|---|---|---|
| | பழைய பாலங்களின் தொகுதிகளைக் கொண்டு கிராமிய பாலங்கள் நிர்மாணம் | 151 | 125 |
| | இரண்டாவது புதிய களனி பால நிர்மாணக் கருத்திட்டம் | 6 | - |
| | கொஹுவல மற்றும் காதம்பே மேம்பாலங்களின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் | 124 | 97 |
| | உத்தரனாந்த மாவத்தையிலும், சிலேவாயில் ரயில் நிலையத்திற்கு அருகாமையிலும் ரயில் பாதைக்கு மேல் மேம்பாலங்கள் கட்டுதல் | 733 | 829 |
| | தேசிய அதிவேகப் பாதையிலுள்ள 25 பாலங்களை புணரமைத்தல் | 11 | 100 |
| **5** | **மகநெகும கிராமிய பாதை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்** | **2,358** | **915** |
| **6** | **வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கான மாற்றல்கள்** | **4,500** | **–** |
| **7** | **காணி மற்றும் காணி மேம்பாடு (முன்னுரிமை கருத்திட்டங்கள் நீங்களாக ஏனைய கருத்திட்டங்கள்** | **1,999** | **3,128** |
| **8** | **வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அர்ப்பணிப்புகளுக்கு இடைவெளி நிதியளிப்பு** | **42,429** | **43,145** |
| **9** | **ஏனையவை** | **-** | **-** |
| | **மொத்தம்** | **99,936** | **95,124** |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## போக்குவரத்து

போக்குவரத்துத் துறைக்கான மொத்த அரசாங்கச் செலவு 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதக் காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் அதே காலப் பகுதியில் 2.9 சதவீதம் குறைவடைந்து ரூபா 27.5 பில்லியனாக இருந்தது. மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக முறையே ரூபா 20.5 பில்லியன் மற்றும் ரூபா 7.0 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது. கொழும்பு புறநகர் புகையிரத பாதைத்திட்டம், மஹவ முதல் ஓமந்தை வரையிலான புகையிரத பாதையை புனரமைத்தல், தற்போதுள்ள புகையிரத பாதைகளை பராமரித்தல் மற்றும் சிறிய மற்றும் பாரிய அளவிலான திருத்தப்பணிகளுக்காக புகையிரத திணைக்களத்தினால் ரூபா 3.8 பில்லியன் செலவிடப்பட்டது.

2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், பேருந்து போக்குவரத்துக்கான மொத்தச் செலவு ரூபா 5.8 பில்லியனாகும். இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகளை பொருளாதார ரீதியாக இலாபமில்லாத பாதைகளில் இயக்குதல், பாடசாலை மற்றும் உயர்கல்வி பருவச் சீட்டுகள் மற்றும் ஆயுதப் படைகளுக்கு பேருந்து அனுமதிப்பத்திரம் வழங்குதல் போன்ற நலன்புரி சேவைகளுக்காக செலவிடப்பட்டது. இந்த காலப்பகுதியில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் ரூபா 1.5 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## வீடமைப்பு அபிவிருத்தி

2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், மோதலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மீள்குடியேற்றம் / நிரந்தர வீடுகள் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட மக்களுக்கான சீன உதவித் திட்டத்தின் கீழ் 2,000 வீட்டு அலகுகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட வீடுகள் மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்புகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 959 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## நகர அபிவிருத்தி

2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் நகர்ப்புற அபிவிருத்திக்கான மொத்தச் செலவு ரூபா 6.2 பில்லியனாகும். இதில் ரூபா 900 மில்லியன் மற்றும் ரூபா 5.3 பில்லியன் முறையே மீண்டெழும் செலவு மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக செலவிடப்பட்டது. நகர அபிவிருத்தித் துறைக்கான மொத்த செலவினங்களில், கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம், நகர மறுசீரமைப்புத் திட்டம், மூலோபாய நகர அபிவிருத்தித் திட்டம் (யாழ்ப்பாணம்) மற்றும் “சியாக் நகர” நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ரூபா 3.9 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது. வெராஸ் கங்கை வெள்ள நீர் வடிகால் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டு திட்டம் மற்றும் மெட்ரோ கொழும்பு திண்மக்கழிவு முகாமைத்துவக் கருத்திட்டத்திற்கு ரூபா 631 மில்லியன் செலவிடப்பட்டது.

## சுற்றாடல்

2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், சுற்றுச்சூழல் துறைக்கான மொத்த அரசாங்க செலவினம் ரூபா 4.0 பில்லியனாக இருந்தது, இதில் முறையே ரூபா 3.7 பில்லியன் மற்றும் 296 மில்லியன் மீன்டெழும் செலவினங்களுக்காகவும் மூலதனச் செலவினங்களுக்காகவும் மேற்கொள்ளப்பட்டது. சுற்றாடல் பாதுகாப்புக்காக ரூபா 52 மில்லியனும், வனப் பரப்பு மற்றும் வனப் பாதுகாப்பிற்காக ரூபா 156 மில்லியனும், மின்சார வேலிகள் அமைத்தல் உட்பட யானைகளின் தாக்குதல்களிலிருந்து மனிதனைப் பாதுகாக்க ரூபா. 183 மில்லியன் தேசிய பூங்காக்களிலுள்ள வீதி வலையமைப்பினை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா. 5 மில்லியன் விலங்கியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா. 18 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வனவிலங்குகள் மற்றும் வனப் பாதுகாப்பு தொடர்பான பிற திட்டங்கள் மற்றும் கொள்கைகளை செயற்படுத்த சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டது.

### நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம்

2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவத்துக்கான மொத்த முதலீடு ரூபா 12.6 பில்லியனாகும். மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு திட்டத்திற்காக ரூபா 3.9 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது. நீர்ப்பாசன அமைப்புகளின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்ற நடவடிக்கைகளுக்காக நீர்ப்பாசன அமைச்சு மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்தினால் மீதியான ரூபா 8.7 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

### 2.4 பொது திறைசேரியின் காசுப்பாய்ச்சல் செயலாற்றுகை

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட வருவாய் அடிப்படையிலான நிதி ஒருங்கிணைப்பு நடவடிக்கை களின் பயனாக, 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் காசு உட்பாய்ச்சல்கள் அதிகரித்து, பொது திறைசேரி செயல்பாடுகளை இலகுவாக்கியது. மேம்படுத்தப்பட்ட வருவாய், சந்தையில் இருந்து முழுத் தேவையையும் உயர்த்துவதற்குப் பதிலாக கடன் சேவைக் கொடுப்பனவுகளுக்கு நிதியளிப்பதற்கு பொது திறைசேரி காசுப்பாய்ச்சலினை நியாயமான முறையில் இலகுபடுத்தியது. அரசாங்கத்தால் மேலும், வங்கித் துறையின் மேம்பட்ட திரவத்தன்மை நிலைமை மூலம் பணம் மற்றும் மூலதனச் சந்தைகளில் உள்ள திரவத்தன்மை மிகை சந்தை வட்டி விகிதங்களை பராமரிக்க துணை புரிகிறது. எந்த நேரத்திலும் மூன்று மாதங்களுக்கும் மேலாக நிலுவையில் உள்ள பணம் செலுத்தாமல் இருக்க வேண்டும் என்பதற்காக ஐஎம்எப்-இஎப்எப் குறிகாட்டியான இலக்குகளுடன் இணங்கும்போது, அரசாங்கத்தின் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குபவர்கள் செலுத்த வேண்டிய பட்டியல்களை உடனடியாகத் தீர்ப்பது தொழில்துறை செயல்திறனை இலகுபடுத்தியது.

இதற்கிணங்க, 2024 இன் முதல் ஆறு மாதங்களில், பொது திறைசேரிக்கு வருவாய் மற்றும் பிற வரவுகள் மூலம் கிடைத்த காசு உட்பாய்ச்சல்கள் ரூபா 1,812.3 பில்லியனாகும். இது ரூபா 1,802.0 பில்லியன் கொண்ட மதிப்பீட்டுக்கு எதிராக மதிப்பீட்டில் 100.6 சதவீதத்தை அடைந்துள்ளது. இதற்கிடையில், 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், ரூபா 2,948.0 பில்லியன் மதிப்பீட்டிற்கு எதிராக, 2,644.8 பில்லியனாக மீண்டெழும் செலவினம் மற்றும் பொது முதலீட்டிற்கான காசுப்பாய்ச்சல் காணப்பட்டது. இது மதிப்பீட்டில் 89.7 சதவீதத்தை எட்டியுள்ளது. இதன்படி, 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 2,432.0 பில்லியனாக காணப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில், மீண்டெழும் செலவினம் மற்றும் பொது முதலீடுகள் இரண்டிற்குமான மொத்த காசு வெளிப்பாய்ச்சல் 8.8 சதவீதமான அதிகரிப்பினை பிரதிபலிக்கிறது.

2024 ஜுன் 30 இல் மொத்த காசுப் பற்றாக்குறை ரூபா 832.5 பில்லியனாக இருந்தது. இது ஜுன் 2023 இன் இறுதியில் இருந்த ரூபா 1,181.9 பில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடும்போது 30.0 சதவீதம் சரிவை பிரதிபலிக்கிறது. இதற்கான பிரதான காரணம் 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களின் போது வருமானத்திலும் ஏனைய பெறுகைகளிலும் ஏற்பட்ட 44.9 சதவீத அதிகரிப்பாகும். இருப்பினும், மீண்டெழும் செலவினம் மற்றும் பொது முதலீட்டுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல் முந்தைய ஆண்டின் இதே காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க மாறுபாட்டைப் பிரதிபலிக்கவில்லை. மொத்தக் கடன் வாங்கல் 13.3 சதவீதத்தினால் குறைந்துள்ள அதே சமயம் கடனைத் திருப்பிச் செலுத்தல் முந்தைய ஆண்டை விட 21.2 சதவீத அதிகரிப்பினை பிரதிபலிக்கிறது. இது முக்கியமாக அதிகரித்த வருவாயின் ஒரு பகுதியை கடன் சேவை கொடுப்பனவுகளுக்கு பயன்படுத்தியதால் ஏற்பட்டதாகும், அவை சந்தை கடன்கள் மூலம் நிதியளிப்பதற்காக ஒதுக்கப்பட்டன. அதன்படி, சாதகமான காசு மீதி 2024 முதல் ஆறு மாதங்களின் முடிவில் ரூபா 646.7 பில்லியனாக காணப்பட்டது.

**அட்டவணை 2.17: 2024 சனவரி முதல் யூன் வரை அரசாங்க திறைசேரி காசுப்பாய்ச்சல் செயற்பாடுகளின் கூற்று**

ரூபா.பில்லியன்

| விடயம் | சனவரி - யூன் | | |
|---|---|---|---|
| | 2023 | 2024 | |
| | உண்மையான | மதிப்பிடப்பட்ட | உண்மையான |
| ஆரம்ப காசு மீதி | -84.2 | 599.5 | 599.5 |
| வருமானம் மற்றும் ஏனைய பெறுகைகளிலிருந்து மொத்த காசு உட்டபாய்ச்சல் | 1,250.1 | 1,802.0 | 1,812.3 |
| மீண்டெழும் கொடுப்பனவுகளுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல் | -2,166.9 | -2,501.9 | -2,265.5 |
| மூலதன கொடுப்பனவுகளுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல் * | -265.1 | -446.1 | -379.3 |
| தேறிய காசு மிகை (பற்றாக்குறை) | -1,181.9 | -1,146.0 | -832.5 |
| மொத்த பெறுகை * | 1,922.1 | 1,712.6 | 1,665.3 |
| படுகடன் மீள் கொடுப்பனவு | -617.8 | -591.2 | -749.0 |
| தேறிய பெறுகை | 1,304.3 | 1,121.4 | 916.4 |
| முன்னைய ஆண்டின் வணிய கடன் பெறுகையின் இருப்பு | 0.0 | - | – |
| சீராக்கல் கணக்கு மீதி (தற்காலிக ஊழிய மீதி, தேறிய வைப்புக்கள், ஏனைய மாற்றல்கள் முதலியன) | 5.9 | - | -36.6 |
| முடிவுறுத்தல் காசு மீதி | 44.1 | 574.9 | 646.7 |

*மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

**2024 யூன் 30 அன்றுள்ளவாறு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் கணக்கிடப்பட்ட கருத்திட்ட/ நிகழ்ச்சித்திட்ட கடன்கள் உள்ளடங்கலாக*

## 2.5 அரச படுகடன் முகாமைத்துவம்

2024 ஆம் ஆண்டிற்கான பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த கடன்வாங்கல் வரம்பு வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு மற்றும் வங்கி மறுமூலதனத்திற்கு நிதியளிப்பதற்கான ஏற்பாடுகள் உட்பட ரூபா 7,350 பில்லியன் ஆகும். 2024 சனவரி 01 முதல் ஜூன் 30 வரையிலான காலப்பகுதியில் அரசாங்க கடன்களின் பயன்பாடு ரூபா 1,513.4 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்காலப்பிரிவின் மொத்த கடன் பெறுகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கருத்திட்ட மற்றும் நிகழ்ச்சித்திட்ட கடன்கள் முறையே ரூபா 1,344.2 பில்லியன் மற்றும் ரூபா 169.2 பில்லியன் ஆகும். இது இக்காலகட்டத்தில் கடன் சேவை கொடுப்பனவுகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக பயன்படுத்தப்பட்டதாகும்.


2024 முதல் ஆறு மாதங்களில் பெறப்பட்ட மொத்தக் கடன்களில், சமார் 89.0 சதவீதம் உள்நாட்டுக் கடன் பெறுதலை உள்ளடக்கியது. திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன்களின் முக்கிய மூலங்களாக இருந்தன. அதன்படி, மொத்த உள்நாட்டுக் கடன்களில் சுமார் 91.0 சதவீதம் திறைசேரி முறிகள் மூலம் திரட்டப்பட்டது, அவை ஆண்டில் செய்யப்பட்ட கடன்களின் பெறுமதியில் பதிவு செய்யப்பட்டுள்ளன, அதே சமயம் திறைசேரி உண்டியல்கள் மூலம் பெறப்பட்ட கடன்கள், முதிர்ச்சியடையும் திறைசேரி உண்டியல்களில் காசு வெளிப்பாய்ச்சலை அமைத்த பிறகு நிகர மதிப்பில் பதிவு செய்யப்பட்டதனால் 9.0 சதவீத உள்நாட்டுக் கடன்கள் 2024 முதல் ஆறு மாதங்களில் திறைசேரி உண்டியல்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

**அட்டவணை 2.18 : மொத்த உள்நாட்டுக்கடன் பெறுகைகள் - 2024 சனவரி - யூன்**

| கருவிகள் | ரூபா. பில்லியன் |
|---|---|
| திறைசேரி பிணைகள் | 1,198.5 |
| திறைசேரி உண்டியல்கள் (தேறிய) | 58.2 |
| **மொத்தம்** | **1,256.7** |

*மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

**வரைபு 2.3 : மொத்த உள்நாட்டுக்கடன் பெறுகைகள் (2024 சனவரி - யூன்)**




*மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

### திறைசேரி உத்தரவாதங்கள் மீதான எதிர்பாரா பொறுப்புகளை வெளிப்படுத்துதல்

2024 ஜூன் 30 இல் வழங்கப்பட்ட மற்றும் செல்லுபடியாகும் திறைசேரி உத்தரவாதங்களின் மதிப்பு ரூபா 2,364.4 பில்லியன் ஆகும், அதேசமயம் அத்தகைய உத்தரவாதங்கள் மீதான நிலுவையிலுள்ள பொறுப்பு ரூபா 1,743.7 பில்லியன் ஆகும். 2024 ஜூன் 30 இல் உள்ளவாறு பொது திறைசேரியினால் விநியோகிக்கப்பட்ட திறைசேரி உத்தரவாதங்களின் பட்டியல் அட்டவணை 2.19 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.19 : பொதுத் திறைசேரியினால் விநியோகிக்கப்பட்ட உத்தரவாதங்களின் விபரப் பட்டியல் மற்றும் ஆதரவுக் கடிதங்கள் 2024.06.30 வரை**

| தொ. இல | வங்கி/ நிறுவனத்தின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | 2024.06.30 அன்றுள்ளவாறு விநியோகிக்கப்பட்ட பெறுமதி (ரூபா மில்.) | | 2024.06.30 அன்றுள்ளவாறு நிலுவையிலுள்ள பெறுமதி (ரூபா மில்.) | |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஆசிய அபிவிருத்தி வங்கி | இலங்கை மின்சார சபை | 124,141.32 | 139,658.99 | 96,069.86 | 111,587.53 |
| | | பிராந்திய அபிவிருத்தி வங்கி | 15,517.67 | | 15,517.67 | |
| 2 | ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) | இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி | 55,863.59 | 55,863.59 | 43,449.46 | 43,449.46 |
| 3 | இலங்கை வங்கி | வரை. கட்டிட பொருள் கூட்டுத்தாபனம் | 500.00 | 430,761.19 | 500.00 | 282,258.22 |
| | | இலங்கை மின்சார சபை | 4,540.00 | | 4,415.00 | |
| | | இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம் | 250.00 | | 158.62 | |
| | | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | 100,000.00 | | 56,356.74 | |
| | | ஜெ. சே. ஜோன் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம் | 835.00 | | 103.90 | |
| | | மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை | 200.00 | | 125.06 | |
| | | லங்கா நிலக்கரி நிறுவனம் (பிரைவேட்) லிமிடெட் | 49,500.00 | | 2,764.00 | |

| தொ. இல | வங்கி/ நிறுவனத்தின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | 2024.06.30 அன்றுள்ளவாறு விநியோகிக்கப்பட்ட பெறுமதி | | 2024.06.30 அன்றுள்ளவாறு நிலுவையிலுள்ள பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | வரை. வியாபார முகாமைத்துவத் தேசிய பாடசாலை | 8,600.00 | | 6,155.00 | |
| | | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 66,512.05 | | 40,284.30 | |
| | | நோர்த் சீ லிமிடெட் | 38.63 | | 37.41 | |
| | | நெல் சந்தைப்படுத்தல் சபை | 374.50 | | 363.23 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 147,102.33 | | 118,836.92 | |
| | | இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் | 93.00 | | 78.66 | |
| | | சிறி லங்கன்ஸ் எயார்லைன்ஸ் லிமிடெட் | 45,487.10 | | 45,487.10 | |
| | | அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனம் | 1,126.81 | | 990.52 | |
| | | அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | 2,400.00 | | 2,399.99 | |
| | | மிஹின் லங்கா லிமிடெட் | 3,201.77 | | 3,201.77 | |
| 4 | சீனா அபிவிருத்தி வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 51,211.58 | 51,211.58 | 70,180.19 | 70,180.19 |
| 5 | சீனா நெஷனல் கெமிகல் எஞ்சினியரிங் இல.14 கன்ஸ்ரக்ஷன் கம். லிமிடெட் | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | 13,585.72 | 13,585.72 | 7,969.87 | 7,969.87 |
| 6 | வர்த்தக வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 968.36 | 5,724.29 | 621.33 | 5,377.26 |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 4,755.93 | | 4,755.93 | |
| 7 | டீ.பீ. ட்ரஸ்டீஸ் (ஹாங்கங்) லிமிடெட் | ஸ்ரீ லங்கா எயார்லைன்ஸ் லிமிடெட் | 54,311.83 | 54,311.83 | 54,311.83 | 54,311.83 |
| 8 | டீ எப் சீ சீ வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 6,026.24 | 11,922.75 | 3,978.18 | 9,222.52 |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 5,896.51 | | 5,244.34 | |
| 9 | சீனா எக்சிம் வங்கி | இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | 27,514.37 | 27,514.37 | 4,366.67 | 4,366.67 |
| 10 | இந்தியா எக்சிம் வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 79,667.69 | 79,667.69 | 47,291.64 | 47,291.64 |
| 11 | ஹட்டன் நெஷனல் வங்கி | விமான நியை, விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் | 4,000.00 | 43,279.73 | 4,000.00 | 33,278.08 |
| | | இலங்கை மின்சார சபை | 3,818.64 | | 450.01 | |
| | | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 15,327.94 | | 8,694.92 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 20,133.15 | | 20,133.15 | |
| 12 | ஹொங்கொங் என்ட் ஷங்காய் பேங்கின் கொ லிமிடெட் | விமான நியை, விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் | 13,698.36 | 13,698.36 | 9,155.42 | 9,155.42 |
| 13 | இன்டஸ்ரியல் என்ட் கொமர்ஷியல் பெங் ஒப் சைனா | இலங்கை மின்சார சபை | 13,026.27 | 13,026.27 | 8,233.67 | 8,233.67 |
| 14 | ஐ.என்.ஜீ. வங்கி, என். வீ. ஒப் நெதர்லாந்து | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 27,667.49 | 27,667.49 | 23,787.83 | 23,787.83 |
| 15 | யப்பான் இன்டநெஷனல் கோபரேஷன் ஏஜன்சி (JICA) | விமான நியை, விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் | 144,203.71 | 144,203.71 | 31,053.31 | 31,053.31 |
| 16 | தேசிய அபிவிருத்தி வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 21,380.43 | 27,679.63 | 16,109.02 | 22,408.86 |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 6,299.21 | | 6,299.84 | |

| தொ. இல | வங்கி/ நிறுவனத்தின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | 2024.06.30 அன்றுள்ளவாறு விநியோகிக்கப்பட்ட பெறுமதி | | 2024.06.30 அன்றுள்ளவாறு நிலுவையிலுள்ள பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| 17 | தேசிய சேமிப்பு வங்கி | இலங்கை மின்சார சபை | 5,000.00 | 199,709.66 | 5,000.00 | 183,796.15 |
| | | ஜெ. சே. ஜோன் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம் | 40,563.39 | | 33,377.22 | |
| | | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 32,710.61 | | 29,813.74 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 114,415.66 | | 113,582.32 | |
| | | இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் | 3,500.00 | | 1,200.87 | |
| | | டெக்னோ பார்க் அபிவிருத்தி கம்பெனி பிரைவேட் லிமிடெட் | 750.00 | | 750.00 | |
| | | நகர அபிவிருத்தி அதிகார சபை | 2,770.00 | | 72.00 | |
| 18 | மக்கள் வங்கி | இலங்கை மின்சார சபை | 15,333.33 | 177,816.02 | 14,195.65 | 141,799.47 |
| | | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | 2,397.48 | | 1,800.05 | |
| | | வரை. இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் | 22,317.65 | | 15,384.21 | |
| | | லங்கா சதோச லிமிடெட் | 8,241.00 | | 4,226.53 | |
| | | தேசிய கடதாசி கூட்டுத்தாபனம் | 140.00 | | 62.77 | |
| | | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 7,107.12 | | 3,468.83 | |
| | | நெல் சந்தைப்படுத்தல் சபை | 760.75 | | 759.08 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 57,255.95 | | 46,074.29 | |
| | | இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் | 100.00 | | 96.30 | |
| | | ஸ்ரீ லங்கா எயார்லைன்ஸ் லிமிடெட் | 59,045.97 | | 51,354.55 | |
| | | அரச அச்சு கூட்டுத்தாபனம் | 1,165.00 | | 524.52 | |
| | | டெக்னோ பாரக் அபிவிருத்திக் கம்பனி (பிரவைட்) லிமிடெட் | 750.00 | | 750.00 | |
| | | மிஹின் லங்கா லிமிடெட் | 3,201.77 | | 3,102.69 | |
| 19 | சம்பத் வங்கி | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 14,500.00 | 14,500.00 | 11,204.55 | 11,204.55 |
| 20 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் | 3,724.24 | 3,724.24 | 3,724.24 | 3,724.24 |
| 21 | இலங்கை சேமிப்பு வங்கி | நோர்த் சீ லிமிடெட் | 60.00 | 60.00 | 58.51 | 58.51 |
| 22 | யுனி க்ரடிட் பேன்க் ஆஸ்திரியா ஏஜீ | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 16,876.95 | 16,876.95 | 13,608.29 | 13,608.29 |
| 23 | இன்டர்நஷனல் எயார் ட்ரான்ஸ்போட் எஸோ ாசியேஷன் (IATA) | சிறி லங்கன்ஸ் எயார்லைன்ஸ் லிமிடெட் | 3,600.10 | 3,600.10 | 3,600.10 | 3,600.10 |
| 24 | இந்திய ரிசர்வ் வங்கி | இலங்கை மத்திய வங்கி | 807,362.39 | 807,362.39 | 621,150.07 | 621,150.07 |
| 25 | நெல் சந்தைப்படுத்தல் சபை | கூட்டுத்தாபன மொத்த விற்பனை நிறுவனம் | 880.00 | 880.00 | 729.60 | 729.60 |
| 26 | ஏற்றுமதி அபிவிருத்திச் சபை | இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி | 60.00 | 60.00 | 60.00 | 60.00 |
| **மொத்தம்** | | | **2,364,366.55** | **2,364,366.55** | **1,743,663.34** | **1,743,663.34** |

*மூலம் : திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம்*

# அத்தியாயம் - 03

# அரசுடமைத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை

## 3.1 மேன்நோக்கு

மின்சாரம் மற்றும் எரிபொருளுக்கான செலவு-பிரதிபலிப்பு விலை நிர்ணயம், தெரிவுசெய்யப்பட்ட முக்கிய அரசுடமைத் தொழில்முயற்சிகளின் ஐந்தொகைகளை மறுசீரமைப்பு செய்தல் மற்றும் ஏனையவற்றுக்கிடையே மேலதிக தனியார்த் துறை நிறுவனங்களை பெற்றோலியத் துறையில் நுழைவதற்கு அனுமதித்தல் உட்பட முக்கியமான சீர்திருத்தங்களை அரசுடமைத் தொழில்முயற்சிகள் (SOEs) மேற்கொண்டன. இந்த சீர்திருத்தங்கள் மூலம் 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் பதிவு செய்யப்பட்ட ரூபா 193.5 பில்லியன் மொத்த இலாபத்துடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் ரூபா 280.7 பில்லியன் மொத்த இலாபத்தைப் பதிவுசெய்து முக்கியமான 52 அரசுடமைத் தொழில்முயற்சிகள் பயனடைந்துள்ளன.

இலங்கை மின்சார சபையின் (CEB) உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநியோக நிலைகளுக்கு அதிக செயல்பாட்டு மற்றும் நிதி சுயாட்சியை உருவாக்கும் நோக்கங்களுடன், 2024 ஜுன் மாதத்தில் 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க மின்சார சட்டம் இயற்றப்பட்டது. மேலும், மேற்குறிப்பிட்ட 3 நிலைகளிலும் தனியார்த் துறையின் பங்குபற்றுதலை அனுமதிக்கும் அதேவேளையில், மின்சாரத் துறையில் வினைத்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை மேம்படுத்துவதைச் சட்டம் எதிர்பார்க்கிறது. இதற்கிடையில், எம்/எஸ் ஆர்எம் பார்க்ஸ் நிறுவனம் கீழ்நிலை பெற்றோலிய சந்தையில் அதன் செயல்பாடுகளை 2024 மே 08 அன்று தொடங்கியது. இது இலங்கையில் பெற்றோலிய சில்லறை சந்தையில் போட்டியை அதிகரிப்பதுடன் நுகர்வோரின் நலனுக்காக சேவை தரத்தை மேம்படுத்தும்.

ஆளுகை, இடர் முகாமைத்தவம் மற்றும் மேற்பார்வை ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு, அரசுடமை வங்கிகளை (SOBs) மறுசீரமைப்பதற்கு 2024 ஏப்ரல் மாதத்தில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு, வெளிப்படையான நடைமுறையின் கீழ் அரசுடமைத் தொழில்முயற்சிகளுக்கான சுயாதீன பணிப்பாளர்களைத் தெரிவுசெய்வதற்கு நிபுணர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது. மேலும், அரசுடமைத் தொழில்முயற்சிகளை மேற்பார்வை செய்வதற்கு பொதுத் திறைசேரியின் பொது தொழில்முயற்சித் திணைக்களத்தின் கீழ் ஒரு விசேட பிரிவு நிறுவப்பட்டு வருகின்றது. 2024 மார்ச் மாதத்தில், ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட்டின் (SLA) திறைசேரியின் உத்தரவாத படுகடன் ஐ.அ.டொலர் 210 மில்லியன் மற்றும் ரூபா 31.4 பில்லியன் (அண்ணளவாக ஐ.அ.டொலர் 100 மில்லியனுக்குச் சமம்) தொகையை அரசாங்கத்தின் ஐந்தொகைக்கு மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

அரசுடமைத் தொழில்முயற்சிகளிடமிருந்து திரட்டப்பட்ட அறவீடுகள் மற்றும் பங்கிலாபங்கள் என்பன 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 13.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில், ரூபா 14.9 பில்லியனாக அதிகரித்துள்ளது.

## 3.2 பிரதான பத்து அரசுடமை வணிகத் தொழில்முயற்சி நிறுவனங்கள் பற்றிய மீளாய்வு

### இலங்கை வங்கி

இலங்கை வங்கியின் சொத்து அடித்தளமானது 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 4,412 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் ஜுன் மாத இறுதியில் உள்ளவாறு ரூபா 4,423 பில்லியனாக ஓரளவு அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், வங்கியின் வைப்புத்தளமானது 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 3,882 பில்லியனுடன் ஒப்பிடுகையில், ரூபா 3,832 பில்லியன் வரை 1.3 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. வங்கியின் III ஆம் கட்ட கடன் விகிதம், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவுசெய்யப்பட்டிருந்த 5.07 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டு ஜுன் மாத இறுதியில் 5.68 சதவீதமாக சிறிதளவு சீரழிந்துள்ளது. இலங்கை வங்கி 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் வரிக்கு முன்னரான இலாபமாக ரூபா 22.4 பில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவான ரூபா 10.5 பில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகும்.

### மக்கள் வங்கி

மக்கள் வங்கியின் சொத்து அடித்தளமானது 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 3,038 பில்லியனிலிருந்து 2024 ஆண்டின் ஜுன் மாத இறுதியில் ரூபா 3,195 பில்லியன் வரை 5.2 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. வங்கியின் வைப்புத்தளமானது 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 2,653 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் ஜுன் மாத இறுதியில் ரூபா 2,794 பில்லியன் வரை 5.3 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,709 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டிருந்த கடன்கள் மற்றும் முற்பணங்கள்

என்பன 2024 ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் ரூபா 1,747 வரை 2.2 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. வங்கியின் III ஆம் கட்ட கடன் விகிதம், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவுசெய்யப்பட்டிருந்த 8.83 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் 8.51 சதவீதமாக ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளது. மக்கள் வங்கி 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் வரிக்கு முன்னரான இலாபமாக ரூபா 2.6 பில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவான ரூபா 6.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 60.4 சதவீத வீழ்ச்சியாகும்.

### தேசிய சேமிப்பு வங்கி

தேசிய சேமிப்பு வங்கியின் சொத்து அடித்தளமானது, 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 1,687 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் ஜூன் மாத இறுதியில் உள்ளவாறு ரூபா 1,692 பில்லியன் வரை சிறியளவு அதிகரிப்பு ஒன்றைப் பதிவு செய்துள்ளது. வங்கியின் வைப்புத்தளமானது 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 1,483 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் ஜூன் மாத இறுதியில் உள்ளவாறு ரூபா 1,495 பில்லியன் வரை 0.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 527 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்த கடன்களும் முற்கொடுப்பனவுகளும், 2024 ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் ரூபா 515 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இது 2.2 சதவீத வீழ்ச்சியை காட்டுகிறது. தேசிய சேமிப்பு வங்கியானது, 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் பதிவுசெய்யப்பட்டிருந்த வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 582 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் வரிக்கு முன்னரான இலாபமாக ரூபா 14,996 மில்லியனைப் பதிவு செய்துள்ளது.

### வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வரிக்கு முன்னரான இலாபமாக ரூபா 1.8 பில்லியன்களை பதிவு செய்துள்ளது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் முழுமையான உரிமையை கொண்ட துணை நிறுவனங்களான வரையறுக்கப்பட்ட இலங்கை ஆயுள் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பொதுக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பன முறையே ரூபா 15.3 பில்லியன் மற்றும் ரூபா 1.3 பில்லியன்களை 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் பதிவு செய்துள்ளது. அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை பிரித்தெடுக்கும் செயல்முறை, தகுதிகளுக்கான கோரிக்கையை வழங்குவதன் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள அதே வேளையில் விலை மனுதாரர்களை குறுகிய பட்டியலிடும் பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அமைச்சரவையினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் மூலம், லங்கா ஹொஸ்பிடல்ஸ் பிஎல்சி, லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட், லிட்ரோ கேஸ் டெர்மினல் லங்கா லிமிடெட் மற்றும் கன்வில் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வைத்திருக்கும் பங்குகளை பொது திறைசேரிக்கு மாற்றுவது தற்போது நடந்து கொண்டிருக்கிறது.

### இலங்கை மின்சார சபை

2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மின்சார விற்பனை வருமானம் ரூபா 314.4 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 296.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 5.9 சதவீதத்தால் ஓரளவு அதிகரித்துள்ளது. இதற்கான முக்கிய காரணம் 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியில் மின்சாரத்திற்கான தேவை 7.3 சதவீதம் அதிகரித்து 7,487 GWh ஆக இருந்துடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 6,975 GWh ஆகவும் காணப்பட்டது. சாதகமான வானிலை நிலவியமை மற்றும் நாணய மதிப்பு உயர்வின் விளைவாக நிலக்கரி விலை குறைவடைந்தமை ஆகியவற்றின் காரணமாக, இலங்கை மின்சார சபையின் நேரடி மின் உற்பத்தி செலவு 2024 ஆம் ஆண்டின் முதல் அறு மாதங்களில் ரூபா 158.1 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 233.6 பில்லியனுடன் ஒப்பிடும் போது 32 சதவீதத்தால் கணிசமாக குறைவடைந்துள்ளது. இதன் விளைவாக, இலங்கை மின்சார சபை 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் ரூபா 99.7 பில்லியன் மொத்த இலாபத்தைப் பதிவு செய்ததுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 17.8 பில்லியன் மொத்த இலாபத்தினை பதிவு செய்திருந்தது. வரையறுக்கப்பட்ட அதன் துணை நிறுவனமான லங்கா டிரான்ஸ்ஃபோர்மர்ஸ் லிமிடெட்டின் பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் கிடைத்த ரூபா 26 பில்லியன் இலாபத்திலிருந்து நன்மையடைந்ததன் விளைவாக, இலங்கை மின்சாரசபை 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் வரிக்கு முன்னரான தேறிய இலாபமாக ரூபா 119.2 பில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 13.7 பில்லியன் தேறிய நட்டத்தினை பதிவு செய்திருந்தது.

2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், உற்பத்தி கலவை அனல் (நிலக்கரி): நீர்மின்: பாரம்பரியமற்ற மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் காற்றும் கூரை மேலும் அனல் (எரிபொருள்) என்பவை 36:30:18:16 எனும் விகிதத்தில் சாதகமாக மாறியதுடன் இது 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 38:22:17:23 என்பதாக பதிவு செய்யப்பட்டிருந்தது. இதற்கமைவாக, விற்பனைப் புள்ளியில் அலகொன்றுக்கான செலவினம், 2023 இன் முதல் ஆறு மாதங்களில் காணப்பட்ட கி.வோ. ஒன்றுக்கான 45.48 ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2024 இன் முதல் ஆறு மாதங்களில் கி.வோ. ஒன்றுக்கு ரூபா 31.12 ஆக குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது.

2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 79.2 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன மின்வலு கொள்வனவாளர்களுக்கான இலங்கை மின்சார சபையின் நிலுவையிலுள்ள கடன் பொறுப்புக்களுடன் ஒப்பிடும்போது. 2024 ஜூன் மாத இறுதியில் 78 சதவீதத்தால் குறைவடைந்து ரூபா 17.4 பில்லியன் ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 263.6 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்த நிலுவையிலுள்ள கடன் பொறுப்புக்கள், கருத்திட்டக் கடன்களின் அதிகரிப்பின் காரணமாக 2024 ஜூன் மாத இறுதியில் ரூபா 289.4 பில்லியன் வரை 9.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

2024 இல் செய்யப்பட்ட இரண்டு கட்டணத் திருத்தங்களின் விளைவாக, 2024 மார்ச் மாதத்தில் இறுதிப் பயனரின் சராசரி கட்டணக் குறைப்பு 21.9 சதவீதமாக இருந்த அதேவேளையில் பின்னர் 2024 ஜூலை மாதத்தில் மேலும் 22.5 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

மின்சாரச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின்படி தேசிய மின்சார ஆலோசனைச் சபை மற்றும் தேசிய முறைமை செயப்பாட்டாளர் மற்றும் மற்றைய அமைப்புகள் ஆகியவற்றுக்கான புதிய நியமனங்களுக்கும் அமைச்சரவையினால் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளது.

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெற்றோலியம் மற்றும் பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதிச் செலவு 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 1,380 மில்லியனுடன் ஒப்பிடுகையில், ஐ.அ.டொலர் 1,235 மில்லியன்களாகக் குறைந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் சராசரி இறக்குமதி விலையின் அதிகரிப்புக்கு மத்தியில் புதிய பங்குதாரர்கள் நுழைந்ததிலிருந்து வெளிவரும் இறக்குமதி அளவு குறைவடைந்தமையாகும்.

இறக்குமதிச் செலவில் ஏற்பட்ட வீழ்ச்சியானது, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான விற்பனைச் செலவு 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதக் காலப்பகுதியில் காணப்பட்ட 564.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 467.7 பில்லியன் வரை 17.2 சதவீதத்தினால் குறைவடைவதற்கு இட்டுச்சென்றது. இதன் விளைவாக, 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் ரூபா 681.5 பில்லியனாகப் பதிவுசெய்யப்பட்டிருந்த பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் வருமானத்துடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் ரூபா 544.3 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இது 20.1 சதவீதமான குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை காட்டுகிறது. எனவே, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இலாபமானது 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் பதிவுசெய்யப்பட்டிருந்த ரூபா 69.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ரூபா 20.7 பில்லியனாக 70.2 வீதத்தால் குறைவடைந்துள்ளது.

மேலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இனி இலங்கை வங்கிக்கு அல்லது மக்கள் வங்கிக்கு கடன்பட்டிருக்காது என்பதுடன் தேசிய ஈரானிய எண்ணெய் நிறுவனத்திற்கு 2023 திசெம்பர் இறுதியில் செலுத்த வேண்டிய ஐ.அ.டொலர் 230.9 மில்லியன் 2024 ஜூன் மாத இறுதியில் உள்ளவாறு ஐ.அ.டொலர் 191 மில்லியன்களாகக் குறைக்கப்பட்டது.

### ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடட்

பாரம்பரிய செயல்பாட்டு பிரச்சினைகள் மற்றும் கடந்த கால கடனிலிருந்து ஏற்பட்ட நிதிச் செலவுகள் ஆகியவற்றினால் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதன் காரணமாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடட் தொடர்ச்சியான பணப்புழக்கச் சவால்களை எதிர்கொண்டது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடட்டின் செயல்பாடுகளை ஆதரிப்பதற்காக பொதுத் திறைசேரியினால் சமபங்கு உள்ளீடுகள் மற்றும் கடன் உத்தரவாதங்கள் போன்ற பிற நடவடிக்கைகளை வழக்கமாக வழங்கியுள்ளது.

தேசிய விமான சேவையினைப் பாதுகாப்பதற்கு 2024 இன் முதல் ஆறு மாதங்களில் காணப்பட்ட காசுப்பாய்ச்சல் பிரச்சினைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு ரூபா 5 பில்லியன் பங்கினை விநியோகித்ததன் மூலம் அரசாங்கம் உதவியளித்தது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதியளிப்பு நெருக்கடியான சவால் காணப்பட்ட போதிலும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் 2024/25 அரசிறை வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் ரூபா 63.8 பில்லியனை மொத்த வருமானமாக பெற்றது. இது 2023/24 இல் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 73.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 12.7 சதவீதம் குறைவானதாகும். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 2023/24 இல் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 8.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் (நிதிக் கட்டணங்கள் மற்றும் செலாவணி வேறுபாடுகள் நீங்கலாக) 2024/25 அரசிறை வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் வரிக்கு முன்னரான இலாபமாக வெறும் ரூபா 0.6 பில்லியனைப் பதிவு செய்துள்ளது. நிதி கட்டணங்கள் மற்றும் செலாவணி வேறுபாடுகளை சீராக்கம் செய்தபின்னர், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டடின் குழுமம் 2023/24 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 25.8 பில்லியன் தேறிய இலாபத்துடன் ஒப்பிடும்போது 2024/25 இன் அதே காலப் பகுதியில் 12.9 பில்லியன் தேறிய நட்டத்தைப் பதிவு செய்துள்ளது.

## தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

2023 ஆம் ஆண்டின் ஜூன் மாத இறுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட குழாய் நீர் மற்றும் பாதுகாப்பான குடிநீர் விநியோகம் முறையே 61.0 சதவீதம் மற்றும் 96.7 சதவீதம் ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது 2024 ஆண்டின் ஜூன் மாத இறுதியில் முறையே 62.4 சதவீதம் மற்றும் 98.1 சதவீதமாக அதிகரித்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது 81,000 புதிய இணைப்புக்களை சேர்த்ததன் மூலம் 2024 ஆம் ஆண்டின் ஜூன் மாத இறுதியில் மொத்த இணைப்புக்களின் எண்ணிக்கை 3.08 மில்லியனாக அதிகரித்துள்ளது. நீர் வழங்கலுக்கான புதிய தீர்வைத் திருத்தத்தை அமுல்படுத்தியதன் மூலம் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது இந்தக் காலப் பகுதியில் ரூபா 42.8 பில்லியன் வருமானத்தைப் பதிவு செய்துள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 25.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 69.8 சதவீத அதிகரிப்பாகும். அதேவேளை, 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் ரூபா 14.8 பில்லியனாக பதிவுசெய்யப்பட்ட, விற்பனை செலவானது, மின்சாரக் கட்டணம் மற்றும் ஏனைய பொருள் செலவு என்பவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக, 2024 ஆம் ஆண்டின் அதே காலப் பகுதியில் 26.3 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 18.7 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இருப்பினும், சபையானது மீளாய்வின் கீழிருந்த இந்தக் காலப்பகுதியில் ரூபா 24.1 பில்லியன் மொத்த இலாபத்தைப் பதிவுசெய்துள்ளது. இதன் விளைவாக, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட தேறிய இலாபமான ரூபா 2.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் ரூபா 13.8 பில்லியன் தேறிய இலாபத்தைப் பதிவு செய்துள்ளது.

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது, 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 414 மில்லியன் கன மீட்டர் நீரை உற்பத்தி செய்துள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 399 மில்லியன் கன மீட்டராக பதிவு செய்யப்பட்டிருந்த அதேவேளையில் நீர் விற்பனை 313 மில்லியன் கன மீட்டராக பதிவாகியுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியினது நீர் விற்பனையானது 298 மில்லியன் கன மீட்டராக பதிவு செய்யப்பட்டிருந்தது. மேலும், வருமானம் தராத நீர் குறைவடைந்து வரும் போக்கைக் காட்டியுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் காணப்பட்ட 25.41 சதவீதத்திற்கு எதிராக 24.39 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும், பொதுத் திறைசேரியானது உள்நாட்டு வங்கிகளின் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கும், நடந்துகொண்டிருக்கும் கருத்திட்டங்களின் பொறுப்புகளைத் தீர்ப்பதற்கு ஆதரவளிப்பதற்கும் உரிமைப் பங்காக ரூபா 13.1 பில்லியன்களை வழங்கியுள்ளது.

மேலும், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது, நீர் துறை மறுசீரமைப்புகளுக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் கொள்கை அடிப்படையிலான கடனின் கீழ் கொள்கை நடவடிக்கைகளில் ஒன்றாக 2024 ஜூலை 25 அன்று பொதுத் திறைசேரி, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு மற்றும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு முத்தரப்பு ஒப்பந்தத்தில் கூட்டுறவு நோக்க அறிக்கையில் கைச்சாத்திட்டது. மேலும், அமைச்சரவையின் அங்கீகாரத்துடன், மின்சாரக் கட்டணக் குறைப்பைக் கருத்தில் கொண்டு, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, 2024 ஆகஸ்ட் 21 முதல் செயல்வலுப்பெறும் விதமாக வீடு, வைத்தியசாலைகள், பாடசாலைகள் மற்றும் ஏனைய தொண்டு நிறுவனங்களுக்கான ஒட்டுமொத்த சராசரி விகிதமான 5.94 சதவீதத்தினால் நீர் கட்டணத்தை குறைத்தது. .

## இலங்கை துறைமுக அதிகார சபை

செங்கடல் நெருக்கடி மற்றும் அதன் விளைவுகள் உட்பட பல்வேறு காரணிகளால் 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், கொள்கலன் செய்யப்பட்ட சரக்குகள் 1,207,675 TEU களையும், வழக்கமான சரக்கு 4,747,911 மெட்ரிக் தொன்களையும் பதிவு செய்துள்ள அதேவேளையில் இது 2023 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், முறையே 18 சதவீதம் மற்றும் 22 சதவீதம் அதிகரித்துள்ளது. 2024 இன் முதல் ஆறு மாதங்களில் இலங்கை துறைமுக அதிகார சபையின் மொத்த தேறிய செயல்பாட்டு வருமானம் ரூபா 36.9 பில்லியனாகக் காணப்பட்ட அதேவேளையில் இதில் 46 சதவீத வருமானமான ரூபா 17.1 பில்லியன் ஸ்டீவ்டோரிங் மூலமாகவும், 27 சதவீத வருமானமான ரூபா 9.9 பில்லியன் கப்பல் திசைவழிகாட்டுதல் மூலமாகவும், 12 சதவீத வருமானமான ரூபா 4.3 பில்லியன் கப்பல்துறைக் கையாளுகை மூலமாகவும், ஈட்டப்பட்டிருந்தது.

2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் காணப்பட்ட 19.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024 அதே காலகட்டத்தில் இலங்கை துறைமுக அதிகார சபை ரூபா 18.4 பில்லியனை செயல்பாட்டு இலாபத்தைப் பதிவு செய்தது. முக்கியமாக 2024 ஜனவரி 01 முதல் செயல்வலுப்பெறும் விதமாக கூட்டு ஒப்பந்தத்தின் திருத்தத்திலிருந்து வெளிப்படும் சம்பளச் செலவு அதிகரிப்புடன் ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் மேலதிக நேரச் செலவு என்பன முறையே ரூபா 10.1 பில்லியன் மற்றும் ரூபா 4 பில்லியன் ஆகும். இது இலங்கை துறைமுக அதிகார சபையின் மொத்த செலவினத்தில் 58.4 சதவீதமாகும். 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 21.8 பில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்துடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டின் அதே காலப் பகுதியில் இலங்கை துறைமுக அதிகாரசபையானது 19.8 பில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தைப் பதிவுசெய்துள்ளதுடன், இது 9.2 சதவீத வீழ்ச்சியாகும்.

**வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமான நிலைய, விமானப் போக்குவரத்து சேவை (தனியார்)**

அரசாங்கத்தின் கடன் நிறுத்த முடிவுடன் 2022 ஆம் ஆண்டில் டெர்மினல் 2 பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் முனையம் விரிவாக்கத் திட்டம் முடிவுறுத்தத்தை வந்ததைத் தொடர்ந்து, விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) லிமிடெட் நிர்வாகம் ஜப்பானிய ஒப்பந்தக்காரரால் பகுதியளவில் செய்து முடிக்கப்பட்ட துணை கட்டமைப்பு பணிகளை இறுதி செய்வதற்கான திட்டத்தை வகுத்தது. ஆரம்ப திட்டத்திற்கான ஆலோசகரின் நேரடி மேற்பார்வையின் கீழ் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) லிமிடெட் ஆனது தனது நிதியைப் பயன்படுத்தி உள்ளூர் கட்டுமான ஒப்பந்தக்காரர் மூலம் மீதமுள்ள பணிகளை முடிப்பதை இந்த திட்டம் கொண்டுள்ளது. விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் நிறுவனமானது, ஏற்கனவே இலங்கையின் பிரதான விமான நிலையத்தின் தற்போதைய கொள்ளளவை மிகைத்துள்ளமையினால் இந்த திட்டத்தை நிறைவு செய்வது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் நிறுவனமானது, வான் வழிசார்ந்த வருமானம் ஊடாக ரூபா 3,924 மில்லியனையும், வான்வழி சாராத வருமானம் ஊடாக ரூபா 16,824 மில்லியனையும், ஏனைய வருமானங்கள் ஊடாக ரூபா 74 மில்லியனையும் பதிவு செய்து, மொத்த வருமானமாக ரூபா 20,823 மில்லியனை எட்டியுள்ளது. 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மொத்த செலவினம் ரூபா 12,400 மில்லியனாக பதிவாகியுள்ளதுடன், இதில் 55 சதவீதம் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட விமானப் போக்குவரத்துக் கட்டுப்பட்டாளர்களின் சம்பள அதிகரிப்பு மற்றும் 2024 ஆம் ஆண்டில் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் நிறுவனத்தின் ஏனைய பணியாளர்களுக்காக பொதுத் திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பள அதிகரிப்பு காரணமாக ஏற்பட்ட ரூபா 6,809 மில்லியன் செலவுகளைக் குறிக்கிறது. 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் நிதி வருமானம் மற்றும் செலாவனிப் பரிமாற்ற வருமானம் என்பன முறையே ரூபா 4,315 மில்லியன் மற்றும் ரூபா 4,587 மில்லியனாக் காணப்பட்டது. 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் நிறுவனமானது வரிக்கு முன்னரான இலாபமாக ரூபா 17,324 மில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்டிருந்த ரூபா 19,885 மில்லியனுடன் ஒப்பிடும்போது 13 சதவீத வீழ்ச்சியாகும்.

**அட்டவணை 3.1 : பாரிய அரச உடமை தொழில்முயற்சிகளுக்கான மறுசீரமைப்பு / முக்கிய முன்னெடுப்புக்கள்**

| நிறுவனம் | மறுசீரமைப்பு / முக்கிய முன்னெடுப்புக்கள் |
|---|---|
| **அரசுடமை வங்கிகள்** | • கடன் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு, சேகரிப்புகள் என்பவற்றை மேம்படுத்தல்.<br>• வளர்ந்து வரும் ஒழுங்குமுறை அமைப்புகளுடன் இற்றைப்படுத்திக் கொள்ளல், தேவையான மாற்றங்களைச் செயல்படுத்தல் மற்றும் வெளிப்படையான அறிக்கையிடல் நடைமுறைகளைப் பேணிவருதல்.<br>• தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்கு டிஜிட்டல் தொழில்நுட்பங்களை பின்பற்றுதல், வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தல், வீச்செல்லையை விரிவுபடுத்தல்.<br>• தற்போதுள்ள வாடிக்கையாளர்களுக்கு உதவதற்கும் புதிய வாடிக்கையாளர்களைக் கவர்ந்தீர்ப்பதற்கும் புதிய உற்பத்திகளை விருத்திசெய்தல்.<br>• பின்தங்கிய மக்களுக்கு நிதிச் சேவைகளை விரிவுபடுத்துதல் மற்றும் நிதி உள்ளடக்கத்தை ஊக்குவித்தல்.<br>• அரசுடமை வங்கிகளை சந்தையில் மிகவும் போட்டித்தன்மை மிக்கதாக்கும் நோக்கில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளை பலப்படுத்தல். |
| **ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட்** | • அரசாங்கத்தினால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட ஐ.அ.டொலர் 310 மில்லியன் பெறுமதியான கடன்களை அரசாங்கத்தின் ஐந்தொகைக்கு மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.<br>• தொழிற்படு மூலதன பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்காக ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு ரூபா 5 பில்லியன் பெறுமதியான பங்கு உட்செலுத்தப்பட்டுள்ளது. |
| **இலங்கை மின்சார சபை** | • நிறுவனத்தின் உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநியோக பிரிவுகளுக்கு இடையில் அதிக தன்னுரிமை மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்து, இலங்கை மின்சார சபையை பல பகுதிகளாக பிரிக்கும் நிலைப்பாட்டைக் கொண்ட இலங்கை மின்சாரச் சட்டமூலம் 2024 ஆண்டு ஜூன் மாதம் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.<br>• தேசிய மின்சார ஆலோசனை சபை (NEAC) மற்றும் தேசிய முறைமை இயக்குனர் (NSO) மற்றும் இலங்கை மின்சார சட்டத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட புதிய நியமனங்களுக்கு அமைச்சர்கள் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. |

| நிறுவனம் | மறுசீரமைப்பு / முக்கிய முன்னெடுப்புக்கள் |
|---|---|
| **இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை** | • அடுத்த 3 ஆண்டுகளுக்கு ஊழியர்களுடன் கூட்டு பேரம்பேசல் ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டு பிரதான செயலாற்றுகைச் சுட்டிகளை அடைவதற்கான நிபந்தனைகளுடன் கைச்சாத்திடப்பட்டது. |
| **விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட்** | • விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் நிறுவனத்தின் சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதற்காக, 2024 ஆம் ஆண்டில் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் தவிர்ந்த ஏனைய ஊழியர்களுக்கான ஒரு தனிச் சம்பள கட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்டது.<br>• சுற்றுலாத்துறைக்காக விரிவடைந்து வரும் கேள்வியைப் பூர்த்தி செய்யும் வகையில் விமான நிலையத்தின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு அவசியமான பதவியணியினருக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |

*மூலம்: அரச உடமை தொழில்முயற்சிகள் மற்றும் பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களம்*

**அட்டவணை 3.2 : பிரதான 52 அரச தொழில் முயற்சிகளின் இலாமீட்டும் தன்மை**

ரூபா மில்லியன்

| | தொழில்முயற்சிகள் | 2022 | 2023(அ) | 2024.06.30 (அ) |
|---|---|---|---|---|
| 1 | இலங்கை வங்கி | 30,977 | 40,342 | 22,373 |
| 2 | மக்கள் வங்கி | 21,338 | 15,345 | 17,432 |
| 3 | தேசிய சேமிப்பு வங்கி | 4,510 | 6,117 | 14,996 |
| 4 | அரச ஈட்டு, முதலீட்டு வங்கி | (89) | (1,043) | 70 |
| 5 | எச்டீஎப்சீ வங்கி | 303 | 2,465 | 322 |
| 6 | பிரதேச அபிவிருத்தி வங்கி | 359 | 1,388 | 492 |
| 7 | ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை | 43,428 | 64,959 | 30,182 |
| 8 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 23,494 | 29,272 | 1,753 |
| 9 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 8,530 | 12,547 | 8,056 |
| 10 | இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்பறுதிக் கூட்டுத்தாபனம் | 711 | 1,056 | 483 |
| 11 | விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபை | 2,651 | 1,043 | 1,284 |
| 12 | இலங்கை மின்சார சபை | (298,189) | 61,236 | 119,209 |
| 13 | இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | (617,588) | 120,346 | 20,706 |
| 14 | இலங்கை துறைமுக அதிகார சபை | 57,027 | 40,359 | 19,823 |
| 15 | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | (2,701) | 5,286 | 13,767 |
| 16 | விமான நிலையங்கள் விமானப் போக்குவரத்துச் சேவைகள் லிமிடட் | 6,434 | 33,640 | 17,324 |
| 17 | ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் லிமிடட் | (73,264) | 1,124 | (13,707)* |
| 18 | இலங்கை போக்குவரத்துச் சபை | 1,421 | 2,189 | (1,373) |
| 19 | அரச பொறியியல் கூட்டுத்தபானம் | (1,269) | (2,458) | (420) |
| 20 | மத்திய பொறியியல் ஆலோசனைச் சேவைப் பணியகம் | 69 | 748 | 106 |
| 21 | அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தாபனம் | 27 | (579) | (64) |
| 22 | மில்கோ (பிரைவெட்) லிமிடட் | (392) | (216) | 89 |
| 23 | தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை | 133 | (122) | 667 |
| 24 | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் | 19 | (92) | 0.07 |
| 25 | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை | 20 | (156) | 50 |
| 26 | குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி | 511 | 534 | 162 |
| 27 | சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி | 514 | 303 | 129 |
| 28 | களுபோவிட்டியானை தேயிலைத் தொழிற்சாலைக் கம்பனி | 346 | 94 | 1 |
| 29 | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் | 17 | (5) | 3 |
| 30 | இலங்கை கனிம மணல் கம்பனி | 6,160 | 4,050 | 423 |
| 31 | இலங்கை பொஸ்பேட் கம்பனி | 61 | 347 | 190 |
| 32 | கஹுட்டகஹ கிரபைட் லங்கா லிமிடட் | 57 | 38 | 13 |
| 33 | அபிவிருத்தி லொத்தர் சபை | 3,267 | 3,516 | 2,031 |
| 34 | தேசிய லொத்தர் சபை | 1,390 | 844 | 649 |
| 35 | அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் | 1,586 | 2,522 | 1,685 |
| 36 | இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தபானம் | (26) | 218 | 219 |
| 37 | அரச மருந்துப்பொருட் கூட்டுத்தாபனம் | (2,285) | 1,272 | 1,500 |
| 38 | ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை | 247 | 304 | 567 |

ரூபா மில்லியன்

| | தொழில்முயற்சிகள் | 2022 | 2023(அ) | 2024.06.30 (அ) |
|---|---|---|---|---|
| 39 | சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு | (370) | (205) | (26) |
| 40 | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் | (541) | (342) | (58) |
| 41 | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | (235) | (532) | (38) |
| 42 | இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை | (99) | 65 | 72 |
| 43 | அரசாங்க மரக் கூட்டுத்தபானம் | 1,016 | 1,274 | 6 |
| 44 | அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன வர்த்தகக் கம்பனி | 735 | 901 | 89 |
| 45 | லங்கா சதொச நிறுவனம் | (687) | 115 | 93 |
| 46 | அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் | (380) | 2,794 | (206) |
| 47 | இலங்கைப் கடற்தொழில் கூட்டுத்தாபனம் | (193) | 4 | (14) |
| 48 | இலங்கை கடற்தொழில் துறைமுகக் கூட்டுத்தாபனம் | 364 | 637 | (26) |
| 49 | லங்கா உரக் கம்பனி | 113 | 61 | 205 |
| 50 | கொழும்பு கொமாசல் பெர்டிலைசர் கம்பனி | 501 | 162 | 259 |
| 51 | ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா பீஎல்சி | (633) | (784) | (202) |
| 52 | லங்கா சீனிக் கம்பனி | 6,045 | 2,828 | (672) |
| | மொத்தம் | **(774,560)** | **455,811** | **280,674** |

*மூலம்: அரச தொழில்முயற்சி நிறுவனங்கள் மற்றும் அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*
** 2024 ஏப்பிரல் - யூன்*

**அட்டவணை 3.3 : அரச தொழில்முயற்சிகளிலிருந்து அறவீடு/பங்கிலாப வருமானம்**

ரூபா. மில்லியன்

| | 2022 | 2023 | 2024.06.30 அன்றுள்ளவாறு |
|---|---|---|---|
| **அறவீடு** | 22,004 | 60,497 | 12,937 |
| மக்கள் வங்கி | 441 | – | – |
| இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | – | 5,000 | 5,000 |
| இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழு | 13,200 | 23,000 | 2,000 |
| அரசாங்க மரக் கூட்டுத்தபானம் | 320 | 641 | – |
| ஞஅரச மருந்தாக்கற் கூட்டுத்தபானம் | 100 | 300 | – |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 1,608 | 2,000 | 1,460 |
| புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் | 1,000 | 2,000 | 768 |
| தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை | 35 | 390 | – |
| இலங்கை முதலீட்டுச் சபை | 416 | 533 | 467 |
| தேசிய லொத்தர் சபை | 361 | 1,000 | 200 |
| இலங்கை தராதரங்கள் நிறுவனம் | 10 | 40 | 13 |
| இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம் | 50 | 620 | 35 |
| இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் | – | 500 | 500 |
| சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை | 1,000 | 4,000 | – |
| அரச மருந்துப்பொருட் கூட்டுத்தாபனம் | 350 | – | 100 |
| தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் | 290 | 150 | 700 |
| இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | 1,200 | 7,000 | – |
| தேசிய போக்குவரத்து ஆணைக்குழு | 10 | 300 | 200 |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை | – | 75 | – |
| இலங்கைக் காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி அதிகாரசபை | – | 500 | – |
| இலங்கை துறைமுக அதிகார சபை | 1,015 | 8,066 | – |
| தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை | 400 | 646 | 687 |
| வீதி அபிவிருத்தி அதிகாரசபை | – | 75 | – |
| காணி சீர்திருத்த ஆணைக்குழு | – | 350 | 15 |
| கூட்டாதன முகாமைத்துவ அதிகாரசபை | 50 | 200 | – |
| வியாபார முகாமைத்துவ தேசிய நிறுவகம் | 33 | 115 | 85 |
| முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம் | 90 | 25 | 4 |

ரூபா. மில்லியன்

| | 2022 | 2023 | 2024.06.30 அன்றுள்ளவாறு |
|---|---|---|---|
| நகர அபிவிருத்தி அதிகாரசபை | – | – | 345 |
| ஏனைய அரச தொழில்முயற்சிகள் | 25 | 2,971 | 358 |
| பங்கிலாபங்கள் | **6,087** | **15,204** | **1,971** |
| தேசிய சேமிப்பு வங்கி | 60 | 30 | – |
| இலங்கை வங்கி | 346 | 173 | – |
| மக்கள் வங்கி | 316 | 158 | – |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 1 | – | – |
| இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 1,511 | 2,272 | – |
| விமான நிலையங்கள் விமானப் போக்குவரத்துச் சேவைகள் லிமிடட் | 500 | 5,500 | – |
| இலங்கை கனிம மணல் கம்பனி | 759 | 2,500 | – |
| இலங்கை பொஸ்பேட் கம்பனி | 20 | 220 | 75 |
| லங்கா லேலண்ட் லிமிட்டட் | 13 | 6 | – |
| ரக்ன ஆரக்ஷக லங்கா லிமிட்டட் | – | 125 | 75 |
| மாந்தை உப்புக் கம்பனி (இலங்கை உப்புக் கம்பனி) | – | 120 | – |
| இலங்கை உரக் கூட்டுத்தாபனம் | 15 | 22 | – |
| கொழும்பு வர்த்தக உரக் கம்பனி | 10 | 60 | – |
| பரந்தன் இரசாயனக் கம்பனி | 50 | 305 | 49 |
| அரச வர்த்தகக் கம்பனி | 11 | 150 | 40 |
| இலங்கை ரெலிகொம் பீஎல்சீ | 1,805 | 223 | – |
| டி லா ரு லங்கா லிமிட்டட் | 313 | – | 1,324 |
| இலங்கை மின்சாரக் கம்பனி லிமிட்டட் | 218 | 697 | – |
| இலங்கை கைத்தொழில் பேட்டைகள் லிமிட்டட் | – | 174 | – |
| சிலோன் அக்ரோ இன்ட்ஸ்ரீஸ் | 24 | 167 | 119 |
| பெருந்தோட்டக் கம்பனிகள் | 95 | 554 | 287 |
| இலங்கை சீனிக் கம்பனி லிமிட்டட் | – | 1,597 | – |
| லங்கா திரிபோஷ லிமிட்டட் | 10 | 75 | – |
| ஏனைய அரச தொழில்முயற்சிகள் | 10 | 75 | 2 |
| **மொத்தம்** | **28,091** | **75,701** | **14,908** |

*மூலம்: அரச தொழில்முயற்சி நிறுவனங்கள் மற்றும் அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்*

# அத்தியாயம் 4

# வெளிநாட்டு நிதியளிப்பு

## 4.1 மேன்நோக்கு

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி (IMF-EFF) நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாவது மீளாய்வு 2024 ஜுன் 12 அன்று நிறைவடைந்ததுடன், இலங்கையில் பொருளாதாரக் கொள்கை சீர்திருத்தங்களுக்கு ஆதரவாக சுமார் ஐ.அ.டொ. 334 மில்லியனை மூன்றாவது தவணையாகப் பெற்றது. 2023 மார்ச் முதல் சர்வதேச நாணய நிதியம் வழங்கிய மொத்த நிதி உதவி ஐ.அ.டொ. 1.0 பில்லியனாகும். மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் ஒப்புதல் மற்றும் வெற்றிகரமான செயல்படுத்தல் சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து வெளிநாட்டு நிதியைப் பெறுவதற்கும் உதவியது.

உத்தியோகபூர்வ கடன் மறுசீரமைப்புச் செயல்முறைக்கு குறிப்பிடத்தக்கதொரு மைல்கல்லாகத் திகழும் வகையில், இலங்கையின் பிரதான இருதரப்பு கடன் வழங்குநர்களின் உத்தியோகபூர்வ கடன் குழுவின் (Official Creditor Committee - OCC) உறுப்பினர்களுடனும், 2024 ஜுன் 26 அன்று சீனாவின் எக்ஸிம் வங்கியுடனும் இலங்கை தனது கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களை வெற்றிகரமாக முடித்துள்ளது. உத்தியோகபூர்வ கடன் குழு மற்றும் சீனா எக்ஸிம் வங்கி உட்பட ஒவ்வொரு கடனாளியும், மூலதன சலுகைக் காலங்களைத் நீடிக்கவும் (முதிர்வுகால விரிவாக்கம்) வட்டி விகிதங்களைக் கணிசமாகக் குறைக்கவும் ஒப்புக்கொண்டனர். இந்த மறுசீரமைப்பு உடன்படிக்கையின் வெளிச்சத்தில், இலங்கை தற்போது சர்வதேச நாட்டுக்கான முறி வைத்திருப்பவர்கள் உட்பட தனியார் கடன் வழங்குநர்களுடன் உடன்படிக்கைகளைப் பாதுகாப்பதில் ஈடுபட்டுள்ளது.

## 4.2 வெளிநாட்டு நிதியுதவி உறுதிமொழிகள்

இலங்கை அரசாங்கம் 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் இறுதியில் வெளிநாட்டு அபிவிருத்தி பங்காளிகள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களுடன் ஐ.அ.டொ. 296.8 மில்லியன் வெளிநாட்டு நிதியுதவிக்கான 8 ஒப்பந்தங்களை மேற்கொண்டது. இதனால் ஐ.அ.டொ. 250.0 மில்லியன் கடனாகப் பெறப்பட்டது. இது ஆசிய அபிவிருத்தி வங்கியால் விரிவுபடுத்தப்பட்ட சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான நிதி கருத்திட்டத்திற்கான ஐ.அ.டொ. 100.0 மில்லியன் மற்றும் உலக வங்கியால் நிதியளிக்கப்பட்ட நிதித் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தல் கருத்திட்டத்திற்கான ஐ.அ.டொ. 150.0 மில்லியன் என்பவற்றை உள்ளடக்கி இருந்தது.

கடன் ஒப்பந்தங்களைத் தவிர, குறித்த வருடத்தின் முதல் அரையாண்டின் போது ஜப்பான் அரசு மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்துடன் ஆறு மானிய ஒப்பந்தங்கள் மூலம் அதிகாரபூர்வ அபிவிருத்தி உதவி (Official Development Assistance – ODA) மூலம் மொத்தம் ஐ.அ.டொ. 46.8 மில்லியன் வழங்கப்பட்டுள்ளன.

இரண்டாம் காலாண்டின் முடிவில் ஐ.அ.டொ. 150.0 மில்லியன் ஆகக்கூடிய தொகையாக வழங்கப்பட்டதுடன், மனிதநேய உதவித் துறைக்காக வழங்கப்பட்ட மொத்த பெறுகைகளில் 51 சதவிகிதமாக இத்தொகைக் காணப்பட்டது.

## 4.3 வெளிநாட்டு நிதி வழங்கல் மற்றும் பயன்பாடு

2024 சனவரி 1 முதல் ஜுன் 30 வரையிலான காலகட்டத்தில் மொத்த வெளிநாட்டு நிதியளிப்பு ஐ.அ.டொ. 786.7 மில்லியனாக இருந்தது. இதில் ஐ.அ.டொ. 776.9 மில்லியன் கடனாகவும், ஐ.அ.டொ. 9.8 மில்லியன் மானியங்களாகவும் வழங்கப்பட்டுள்ளன.

மொத்த வழங்கல்களில் கிட்டத்தட்ட 43 சதவிகிதம் சர்வதேச நாணய நிதியத்திலிருந்து பதிவுசெய்யப்பட்ட வழங்கல்கள் ஆகும், அதனைத் தொடர்ந்து உலக வங்கி (27 சதவிகிதம்) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி (26 சதவிகிதம்) என்பவற்றுக்கிடையில் கையெழுத்திடப்பட்ட கடன் ஒப்பந்தங்கள் அடிப்படையாகப் பெறப்பட்டது.

மொத்த வருமானத்தில் பெரும் பகுதியான 43 சதவிகிதம் வரவு செலவுத்திட்ட ஒத்துழைப்புத் துறையில் பயன்படுத்தப்பட்டதுடன், அதைத் தொடர்ந்து மனிதநேய உதவித்துறையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்தித் துறையில் 13 சதவிகிதம் என்பதுடன் நிதித் துறையில் 9 சதவிகிதமாகும்.

**அட்டவணை 4.1: 2024 சனவரி 01 முதல் யூன் 30 வரையான வெளிநாட்டு கடன்கள் மற்றும் மானியங்களின் உண்மையான வழங்கல்கள்**

| அபிவிருத்தி பங்காளி/கடன் வழங்கும் நிறுவனங்கள் | உண்மையான வழங்கல்கள்* (ஐ.அ.டொ. மில்) | | |
|---|---|---|---|
| | கடன் | மானியம் | மொத்தம் |
| **இருதரப்பு** | 6.6 | 1.6 | 8.2 |
| சவுதி நிதியம் | 5.2 | - | 5.2 |
| நெதர்லாந்து | 1.4 | - | 1.4 |
| ஜப்பான் | - | 1.3 | 1.3 |
| ஜேர்மனி | - | 0.3 | 0.3 |
| **பல்தரப்பு** | **770.3** | **8.2** | **778.5** |
| சர்வதேச நாணய நிதியம்** | 334.0 | - | 334.0 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 208.6 | 2.2 | 210.8 |
| உலக வங்கி | 196.6 | 6.0 | 202.6 |
| ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி | 18.2 | - | 18.2 |
| ஒபெக் நிதியம் | 8.9 | - | 8.9 |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | 4.0 | - | 4.0 |
| **மொத்தம்** | **776.9** | **9.8** | **786.7** |


*மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

*வெவ்வேறு நாணயமாற்றில் செய்யப்பட்ட பணப் பரிமாற்றங்களை ஐ.அ.டொலராக மாற்றுவதற்கு, ஒவ்வொரு விநியோகத் திகதியிலும் நிலவும் மாற்று விகிதங்கள் பயன்படுத்தப்படுகின்றன.*

* *தற்காலிகமானது, ஐ.அ. டொ. 200.9 மில்லியன் செலுத்தப்படாத வட்டியின் மூலதன தொகை மற்றும் மீள் கட்டமைக்கப்பட்ட படுகடனின் தவறுக்கான வட்டி ஆகியவை சேர்க்கப்படவில்லை*


** *வி. எ. உரிமையை ஐ. அ. டொ. ஆக மாற்றுவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட முந்தைய மாத இறுதியில் பயன்படுத்தப்பட்ட வி. எ. உ. மாத இறுதி மாற்று விகிதம் பயன்படுத்தப்பட்டது.*

**வரைபு 4.1 அபிவிருத்தி பங்காளர்கள்/ கடன் வழங்கல் நிறுவனங்கள் அடிப்படையில் 2024 சனவரி 01 முதல் யூன் 30 வரையான உண்மையான வழங்கல்கள் (ஐ.அ.டொ. மில்.)**




*மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

**வரைபு 4.2 பிரதான பொருளாதார துறைக்கு அமைவாக 2024 சனவரி 01 முதல் யூன் 30 வரையான செலவிடல்கள் (ஐ.அ.டொ. மில்.)**




*மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

***ஏனைய = கல்வி மற்றும் பயிற்சி, மீன்பிடி, வீட்டுவசதி மற்றும் நகர அபிவிருத்தி, காணி அபிவிருத்தி, பெருந்தோட்டம், மின்சாரம் மற்றும் சக்தி, கிராமிய அபிவிருத்தி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்*

### 4.4 வெளிநாட்டு கடன் இருப்பு மற்றும் வெளிநாட்டு கடன் சேவை கொடுப்பனவுகள்

2024 யூன் முடிவில் மத்திய அரசின் மொத்த வெளிநாட்டுக் கடன் ஐ.அ.டொ. 37.5 பில்லியனாக இருந்தது.[1]

2024 சனவரி 1 முதல் யூன் 30 வரையிலான மொத்தக் படுகடன் சேவை மீள் கொடுப்பனவுகள்[2] ஐ.அ.டொ. 503.0 மில்லியனாக இருந்தது. இதில் ஐ.அ.டொ. 275.1 மில்லியன் முதன்மை தொகையினை திருப்பிச் செலுத்துதலுக்குப் பதிலாகவும், மீதமுள்ள ஐ.அ.டொ. 227.9 மில்லியன்கள் வட்டி செலுத்துவதற்காகவும் இருந்தது.

அரசாங்கத்தால் கடைப்பிடிக்கப்பட்ட இடைக்காலக் கடன் நிறுத்திவைத்தல் கொள்கைக்கு இணங்க, இருதரப்பு மற்றும் வணிகக் கடனாளிகளிடமிருந்து பெறப்பட்ட பாதிக்கப்பட்ட கடன்களின் வெளிநாட்டுக் கடனைச் செலுத்துவது 2022 ஏப்ரல் 12 முதல் இடைக்காலத்திற்கு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, முதன்மை தொகையான ஐ.அ.டொ. 5,670 மில்லியன் மற்றும் வட்டி[3] தொகையாக ஐ.அ.டொ. 2,527 மில்லியன்களும் 2024 யூன் இறுதிக்குள் செலுத்தப்படாத கடன் சேவையாக திரட்டப்பட்டுள்ளது.

---

[1] தற்காலிகமானது, மத்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் நிலுவை மட்டுமே சித்தரிக்கப்படுகிறது.

- கடன் நிறுத்தக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து திரட்டப்பட்ட செலுத்தப்படாத மூலதனம் சேர்க்கப்பட்டுள்ளது
- திறைசேரி உண்டியல் திறைசேரி முறிகளின் வதிவல்லாத வைப்புகள் சேர்க்கப்படவில்லை.
- சர்வதேச நாட்டு முறிகளின் நிலுவைத் தொகை அதன் பங்குகளின் வதிவுள்ள, வதிவற்ற அடிப்படையில் வகைப்படுத்தப்படவில்லை.
- சீனா எக்ஸிம் வங்கியால் வழங்கப்பட்ட 39 மறுசீரமைக்கப்பட்ட கடன்களின் வட்டி மற்றும் இயல்புநிலை வட்டியின் மூலதனமாக்கல் காரணாக 200.9 மில்லியன் ஐ. அ. டொலர்கள் திரட்டப்பட்டது.

[2] படுகடன் மீள் கொடுப்பனவு = மூலதனக் கொடுப்பனவுகள் + வட்டிக் கொடுப்பனவுகள்

[3] மறுசீரமைப்பு விவாதங்களின் போது கடனாளிகளுடன் சமரசம் செய்து கொள்ள வேண்டும்.